## மாதர்க்குரிய

# மனோஹரக் கலைகள் 64

பண்டித T. K. ராமபத்ர சர்மா

ஞானபண்டிதர் அச்சுக்கூடம்,
கிருஷ்ணம்பேட்டை, சென்னை.

காபி ரைட்]

1939

[விலை அணா 9

# அறிமுகம்.

'தெளிவான கல்வி' அணையாத விளக்கு! இத்தகைய ஞான தீபம் 2000 வருஷங்களுக்கு முன்னே இந்திய மாதர்களின் ஹிருதயந் தோறும் விளங்கியதாம். அதுபோல் இனியும் விளங்குமாறு பாரதஜாதி பார்த்துக் கொள்ளவேண்டுமாம். இவ்வாறு பட்டவர்த்தனமாகப் பேசுகின்றார் ஒரு இந்திய முனிவர். எங்கே? இந்த நூலில்தான்!

இந்தக் கலைஞானதீபம்—நந்தா விளக்கு—அறிவுச்சுடர்—எந்த மாதர்களின் நாவிலும் மனத்திலும் இலங்குகின்றதோ அங்கு—அந்த வீட்டிலும்—அந்த நாட்டிலும்—வறுமை, பிணி, மூப்பு, கவலை, சஞ்சலம் ஒன்றுந் தலையெடாதாம். ஏன்? அந்த மாதர் தமது நடை தோறும் புன்னகை அருட்கிரணம் வீசும் கலைமகளாக இலங்குவதால்! இந்தக்'கலைஞான நூல் படித்த மாதர்' வாழும் வீடு உண்மையாகவே ஒரு கலைமக ளாலயந்தானும். அப்படியானல், தமிழர்களின் இல்லந்தோறும் கலைமகளாலயமாக விளங்க, இந்த நூல் ஒவ்வொரு மாதர்களுடையவும்—சகோதரிகளுடையவும்—மலர்க்கரங்களை—ஹிருதயகமலங்களை—அலங்கரிக்கவேண்டியது நியாயமாகும்.

அதற்கொரு காரணமும் இந்திய நூல்களில் சாதுர்யமாகக் குறிக்கப்படுகின்றது. உதாரணமாக: 64 கலை வடிவான கலைமகளை 'உலகத்தை யெல்லாம் படைக்கும் ஒரு கடவுளின்' காதலியாகப் போற்றிப் பேசும் கவிகளின் கருத்தென்ன? பெண்மக்கள்—வநிதா ரத்தினங்கள்—ஞான விக்கிரகங்களாக (சாஸ்வதிகளாக) விளங்கின், அவரது துணைவர்களாகிய ஆண்மக்கள் யாவரும் பற்பல புதிய இன்ப உலகங்களை—வாழ்வு முறைகளை—படைக்கும் ஆற்றல் அமைந்தவராக விளங்குவர் என்பதாம். அந்தக் கற்பனை வாக்குப் பொருந்துமாறு ஒரு சிறு கதையும் இங்கு நினைவுக்கு வருகின்றது.

"ஒரு காதலனும்! அவன் விரும்பிய 'கட்டழகிக் காதலி' ஒரு மாடமாளிகையின்மீது அமர்ந்திருக்கின்றாள். அவளுக்கு அந்தரங்கக் கடிதமொன்று அனுப்ப விரும்புகின்றான் அக்காதலன்! பிரைவேட் டெலிபோன் ஏற்படாத காலம் அது! அப்பொழுது காதலன் என்ன செய்கின்றான் பாருங்கள்!

"அந்த மாளிகையின் பக்கத்திலிருக்கின்ற மாஞ்சோலையை அவனது கண்கள் நாடுகின்றன. ஒரு பெண் வண்டு அவனது கண்ணெதிரே காணப்படுகின்றது. இதன் மூலமாகத் தனது தூதுச் செய்தியை அனுப்பலாமெனத் தீர்மானிக்கின்றான். பக்கத்திலிருந்த தேமாவும் இவனது செய்கையை ஆமோதிப்பதுபோல் தனது மலர்க் கரத்தால் அசைத்துக்கொடுக்க, மெல்ல அப்பூங்கொத்தைத் தனது கையினால் பறித்து, பொன்வண்டை நோக்கிக் காட்டுகின்றான்! தே மாம்பூவின் தேன் மோப்பங்கண்ட வண்டும் (அக்காதலன் விரும்பும் தொண்டுசெய்ய இசைந்ததுபோலும்) அம்மலர்க்கொத்தில் வந்து அமர்கின்றது. அதன் மூக்கின்மேல் மலர்த் தேன்கொண்டு ஒரு சிறு பொட்டுமிடுகின்றான் அக்காதலன்!

"அந்தத்தேனின் பசையில் ஒட்டிக்கொள்ளுமாறு சிறு பட்டு நூலொன்றையும் தனது பட்டாடையிலிருந்து எடுத்துப் பொருத்துகின்றான் அவசர அவசரமாக! பட்டின் நுனியில் கட்டப்பெற்ற மெல்லிய கடிதமும் காற்றுக் கடவுளின் உதவியினால் காதலியிடஞ் செல்லத் தயாராகின்றது! பறக்கும் இயல்பு கொண்ட வண்டு தனது மூக்கின்மேலுள்ள தேனின் மோப்பம் உயர இழுக்குந் தோறும் மேலே செல்ல, இப்பட்டு நூலும் அதனைத் தொடர்ந்த கடிதமும் மாளிகையை நோக்கி மெல்ல மெல்ல உயர்ந்து பறந்து செல்கின்றது. அப்பெண் வண்டைத் தொடர்ந்து ஒரு ஆண்வண்டும் அக் காதலனது நெஞ்சைப் போல் உடன் தொடர்ந்து பறக்கின்றது. வண்டுகளின் யாத்திரைப் பறப்பு அக்காதலி வசிக்கும் மாளிகையின் வெளிப்பக்கத்திலுள்ள வாடாமலர்க்கொடியொன்றையடைந்தவுடன் பூர்த்தி யாகின்றது! வண்டுகளின் ரீங்காரங்கேட்ட காதலி "காதலனது ஹிருதய மலர்த்தேனின்பச் செய்தியும் ஒட்டிய தும்பியின் ஜதையை" எட்டிப் பார்க்கின்றாள்! வண்டுகளுக்கு முன் தனக்கும் அன்புத் தொண்டு செய்யத் தெரியுமென அக்காதலிக்கு

அறிவிக்கவே போலும் அநுமானதுதந்தையும் (காற்றும்) அக்காதலியின் அழகிய காத்தில் அம்மெல்லிய காயிதம் வந்து வீழுமாறு செய்கின்றது! உள்ளன்புடன் காதல் தொண்டு செய்த அப்பொன்வண்டுகளின் முகவாட்டந்தீர அக்காதலி ஒரு பொற்கிண்ணம் நிறைபத் தேன்கொண்டு கொடுக்கின்றாளாம், களிக்கின்றாளாம்; இனிய விருந்து செய்விக்கின்றாளாம் !"

மாதர்க்குரிய மனோஹரக்கலைகள் 64 எழுதிய பெரியாரின் கருத்தும் இதுதான்! மாதர் கலாநிதிகளாக நடமாடுங்கலைக் கோயில்களாக—விளங்கின், அவரது காதலரும் அவரைத்தொடர்ந்தே தமது சிற்றின்பப் பேரின்ப மாளிகையாத்திரையை முடித்துப் பேரானந்தம் பெறலாம் என்பதே இவ்வின்பக் கலைநூலெழுதிய மேலோர் கருத்தாம். எனவே, கலைமகள் அருள் புரிந்த இந்த மாதர்கலைநூல் மாதர் இனத்திற்கென்றே 'நாமகள் நயந்துதந்த மணப்பெண் சீர் வரிசை' யென்று கூறலாம்! இதனைக்கேட்கும் மணமகன்—அல்லது படிக்கும் பிரம்மசாரிகள்— தமக்குச்சொந்தமான மாமனார்வரிசைச் சீர்வரவில்லை யெனக் கோவித்துக்கொண்டு காசியாத்திரைபோக வேண்டாமாம்! ஆண்களுக்குரிய 64 கலைஞான நூலும் இதோ மேளதாளத்துடன் வந்து கொண்டிருக்கின்றதாம்! ஒருகால் அந்தச் சீர் வரிசைநூல் கைக்குவருமுன்' எவரேனும் காசிக்கோ அல்லது காசினியிலுள்ள பிறவூர்களுக்கோ போவதானால் தமது விலாசமிட்டுத்தபால் தலைதந்து போனால் தப்பாமல் சீர்பெறலாம்!

இந்தக்கலை நூல்களைப்படிப்பதால் உண்டாகும் பயன் என்ன? என்பதைக் குறித்து சென்னைப்பெரியார் ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாச ஐய்யங்காரவர்கள் நேற்று மயிலையிலே நடந்த கலைக்கட்டடத்திறப்பு விழாவில் பேசிய இனிய பேச்சை இங்கு கவனிக்கலாம்.

"உங்களுக்கு மனக்கவலைகளும், சஞ்சலங்களும் ஏற்படும் போதும், வேலையில்லாத்திண்டாடம் வறுமை முதலியன உங்களைப் பீடிக்கும்போதும் இவற்றை நிவர்த்திப்பதற்குத் திறமையான—கட்டுப்பாடான— முயற்சிகள் இல்லாத சமயத்திலும் வாழ்க்கையில் கலை என்னும் அம்சம் உங்களுக்கு நிவர்த்தியைஅளித்து, அவற்றினின்றும்

தப்பித்துக் கொள்ளச் செய்கிறது. எல்லா விஷயங்களையும் விட நமக்குக் கலையே அத்தியாவசியமாயிருக்கின்றது.''

கனம் பிரதம மந்திரியார் இந்தக் கருத்தை மிக மிக அழகாக வெளியிடுகின்றார் பச்சையப்பன் கலாசாலை விஞ்ஞானக்கொண்டாட்டவிழாவில்! "கலைகள்—இந்திய விஞ்ஞான நூல்கள்—ஹநுமானைப்போல் ஆரம்பத்தில் மிக்க எளிதாகவும், வர வர மிகவிரிவாகவும் பராக்கிரமங்கொண்டும் அழகோடும் விளங்கும் தன்மை வாய்ந்தனவாம்''

இந்தப் பெரியாரின் அபிப்பிராயங்களை மிக்க அர்த்த புஷ்டியுள்ளனவாக நாம் வரவேற்க வேண்டும். ஸ்ரீ தேசிய கவி பாரதியார் தெரிவிப்பது போல், மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமையுமில்லை! திறமான புலமை நமக்கு இருப்பது உண்மையானால், இதுபோன்ற நூல்களை நாம் நன்கு ஆராய்ந்து ஸ்ரீஜகதீச சந்திரவசு சொன்னது போல்-நம்மைச்சூழ்ந்துள்ள மரஞ் செடிகொடிகளையும் ராமனும் கண்ணனும் சாரும் செய்தது போல், நமது ஆனந்த வாழ்வில் பங்கு கொள்ளுமாறு செய்யவேண்டும். அதற்கான முறைகள் பலவும் இந்தச்சிறு நூலில், இதனையடுத்து வெளியாகும் பெரு நூலில் ஒருவாறு விளக்கப்பெறுகின்றன.

திருவருள் துணைபுரியின், இந்த நூலில் தெரிவித்த அபிப்பிராயங்கள் யாவும் பாரதமாதாவின் திருத்தொண்டெனக்கருதி இந்திய சர்க்காரே முன்வந்து பூர்த்திசெய்யலாம். இது ஸ்ரீ திலகர் பெருமான் தெரிவித்ததுபோல, ஒவ்வொரு இந்திய உயிருக்கும் பிறப்புரிமையாக அமைந்த கைங்கரியமாகும்.

வந்தேமாதரம்

ரா. ச.

# பாரத தேசம்.

ராகம்—புன்னாகவராளி.

பல்லவி.

பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்.

சரணங்கள்.

1. வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல் முழுவதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தல மனைத்துங் கோயில் செய்குவோம் எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்.

2. சிங்களத் தீவினுக் கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

3. வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறு பல பொருளுங் குடைந் தெடுப்போம்
எட்டுத் திசை களிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்.

4. முத்துக் குளிப்ப தொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே.

6. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

7. காசி நகர்ப் புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.

8. பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்.

9. ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்.

10. குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்.
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்.
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்.

11. மந்திரங் கற்போம் வினைத் தந்திரங் கற்போம்
வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திர பண்டலத் தியல்கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரங் கற்போம்

12. காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லருலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்.

* * * *

(சி. சிப்பிரமணிய பாரதியார்.)

## மாதர்க்கான—

# மனோஹரக் கலைகள் 64

### 1. கீதம்—பாட்டு—Singing.

கீதம்—ஆம், சங்கீதந்தான்; நல்லிசை யென்றாலும் இன்னிசை யென்றாலும் இனிது பொருந்தும். கடவுளை நோக்கி ஒரு அன்பர் கூறுகின்றார்:—"உன்னை நாத வடிவென்பனோ, கீத வடிவென்பனோ நாத கீதம் பொருந்தும் நால் வேதம் என்பனோ" என்று! நாதம் உயிர்களை ஆனந்தத்தில் லயிக்கச் செய்வது. தாயினது இனிய கானங் கேட்டுச் சிறு குழந்தையும் சிரித்து மகிழ்கின்றது! வங்க நாட்டு மாதர் திலகமாகிய சத்திய பாலா தேவி செய்த சாமவேத வீணை கானத்தை வியந்த அமெரிக்கரும் ஆனந்தப் பரவச ராயினர். மேக ரஞ்சனி ராகம் பாடினால் மேகமும் விரைந்து மழை பொழியுமாம். சங்கீதத்திற்கு ஆகரிஷண சக்தி யுண்டா? உண்டு போலும்! அதனால் தான் கண்ணனது குழலிசை கேட்டு மரமும் செடிகளும் மகிழ்ந்து செழித்தன என்றார் வியாச முனிவர். பிள்ளையார் கோயிலின் சங்கநாதங் கேட்டுப் புடலும் 'பூக்கள் குலுங்கச்' சிரிக்குமாம். காய் குலுங்க நகைக்குமாம். இவ்வாறு ஒரு செடிப் புலவர் கூறுகின்றார். அதன் கதையை மற்றோர் முறை விவரிப்போம். சங்கீத இன்ப முணராத மனிதனைக் கடவுள் வஞ்சித்து விட்டார் என்றார் ஒரு கவி. 'கோயில் பல்லவியை எனது அனுமதி யின்றி யெடுத்துக் கொடுத்தவனுக்கு அபராதம் ஐந்து ரூபாய் போ'டென்றார் செட்டியார்!. சங்கீதம் செங்கோலை ஓங்கச் செய்யுங் கதை படிக்க விருப்பமா? மனோரம்மியமான குரல் கேட்டுக் காடையுங் கவுதாரியும் தம்மைப் பாதுகாப்போரது கூட்டுக்கு விரைந்து வருகின்றனவாம். நல்ல பாம்புகளும் நல்லிசை கேட்டு நச்சுக்குணத்தை மறந்து நாருடன் உறவாடுகின்றன என்றால், சங்கீதத்தின் பெருமை சொல்லப்போமோ? முன்னொரு கால் தஞ்சை அரசரின் அந்தப் புரத்

தில் வந்து நுழைந்த பெரு நாகத்தை, தனது மகிடியோசையினால் மகிழ்வித்துப் பிடித்த பாம்பாட்டி யொருவனுக்கு அளிக்கப்பெற்ற சர்வமானிய இடத்தின் பேர்தான் பிடாரன் குன்றும்! ஆகவே, ஹிருதய நாடிகளினின்று உண்டாகின்ற இந்த இனிய நாதம் 72 மேள ராகங்களாகமாறி, அவற்றின் காதலி (ராகிணி) களாகவும் வளர்ந்து, 34,848 சந்ததிகளோடு விளங்கும் அழகைச் சங்கீத கலைப்பகுதியில் படித்து மகிழுங்கள். யந்திரத்தினால் உண்டாகும் கீதம் சிறந்ததா, மனித சரீரத்தினின்று ஜீவ கலையோடு—பாவரசத்தோடு—பரவசத்தோடு—'மடைதிறந்த வெள்ளம் போல' கரை புரண்டு வரும் நாத கோஷம் சிறந்ததா? ஒரு முறை மனக் கண்ணினால்—சிந்தித்து—பாருங்கள்! வீணை வாசிக்கத் தெரிந்த ஒருபெண். வயது 18. அவளது பெயர் விசாலந்தான்! தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ அந்நிய மாதர் மீது தனது காதலன் கருத்தைச் செலுத்தியதாகக் அந்த முற்காலக் காதலி விசாலம் அறிந்தால் என்ன செய்வாள் தெரியுமா? வக்கீல் வீட்டின் விலாசம் கேட்கமாட்டாள்! ஆனால், தனது அழகிய வீணையைக் கையிலெடுப்பாள்; சத்தமில்லாத சங்கீத அறையில் சென்றமர்வாள் தனது மன நிலைமையைக் காதலனுக் குணர்த்தும் 'கேயபதமாகிய ப்ரச்சேதகம்' என்ற முறையில் வீணையின் இன்னிசையிலே தனது இனியகுரலையும் இணைத்து விடுவாள்! அப்பால் நடக்கும் அதிசயச் செய்தி என்ன தெரியுமா? அடுத்த வீட்டுப் பக்கம் கண்ணோட்ட மிட்ட அக்காதலன் தனது கண்களின் காமிராவைக் காதலியின் கடைக்கண் பார்வைக்கு அர்ப்பணஞ் செய்து விடுவான். மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பிறகு குற்றத்திற்கு அபராத மிடுவோருமுண்டா? இல்லை. பிரிந்த காதலர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்றபடி இருவர் மனமும் ஒன்றாகி—காதலனும் காதலியும் ஸைந்தவபதம் கானஞ் செய்யத் தொடங்குவர். இது தான் சங்கீதம் படித்த — வாத்தியம் வாசிக்கத் தெரிந்த — வனிதையரின் வாழ்வு முறையாம்! இந்தியப் பெண்கள் இத்தகைய கலைகளைக் கற்பதால் எவ்வளவு அ (ஆ!) நாகரிகச்செயல்கள் ஏற்பட்டு விடுகின்றன, பார்த்தீர்களா?

## 2. வாத்தியம்—இசைக்கருவி.

## Playing on Musical Instruments.

செவிக்கு இன்பமளிக்கும் செயலை இயற்கையாகக் கொண்டது வாத்தியமாம். தமிழர்கள் வாத்தியங்களை கஞ்சக் கருவி, துளைக் கருவி, தோல் கருவி, நரம்புக் கருவி என நால்வகையாகக் கூறுவர். கஞ்சக் கருவி 12 வித வெண்கல வாத்தியம்-தாளம். துளைக் கருவி குழல் முதலியன. தோல் கருவி தவுல் மத்தளம் கஞ்சிரா முதலியன. நரம்புக் கருவி வீணை முதலியன. 12 வித கன-தாள வாத்தியங்களையும் படித்துத் தெரியவேண்டுமோ?

## 3. நிருத்தம்—(நடனம்)—Dancing.

"ஒரு பாவையின் நிருத்தம் நோக்கி மெய்யுரிகியதாக" சீவக சிந்தாமணி கூறுகின்றது.

இந்த நிருத்தமாவது அங்கங்களின் அபிநயத்தை ஆதாரவாகக் கொண்ட ஒரு வகை நர்த்தனம். இது சரீரத்தினால் விளக்குவது, முக பாவனையினால் விளக்குவது, சேஷ்டைகளால் விளக்குவது என மூன்று விதமாகும். உதாரணமாக: தலை, மார்பு, இரண்டு பாரிசங்கள் (பக்கங்கள்), அரைக்கட்டு, கால் என்ற முக்கிய அவயவங்களும் கண், புருவம், மூக்கு, உதடு, கன்னம், தாடை என்ற துணை அங்கங்களும் அபிநயத்தில் உபயோகப் படும். சாதாரணமாக ஆண்கள் செய்யும் நர்த்தனத்தை தாண்டவம் என்பர். ஸ்திரீகள் செய்யும் நர்த்தனத்தை லாஸ்யம் என்பர்*. தாண்டவத்தில் லகுதாண்டவம், உத்தத தாண்டவம், கோமள தாண்டவம் என்று மூன்று வித முண்டு. லகு தாண்டவம் ஆனந்த மிகுதியினால் உண்டாகி—மிக மிகச் சிறந்த ஹாஸ்யரசத்தில் சென்று முடிவது. உத்தத நர்த்தனம், போர் முழங்கும் காலத்தில் தோன்றி வீர ரசத்தில் முடிவது. கோமள தாண்டவம் கருணை ரசமயமாய் விளங்குவது. இதில் 108 விதம் சாதாரணமாகக் கூறலாம். இவை வெறும் கூத்தன்று. ஒவ்வொன்றும் பற்பல கருத்துடையது; நல்ல முறையறிந்து செய்யும் நடனம் நல்ல பயன் தரும் என்று பரத முனிவர் தெரிவிக்கின்றார். பசியா மருந்தளிக்கும் பரம ரகசியத்தில் அசையாமலே ஆடுகின்ற அம்பல நாதனது ஆட்டம்

---

* "லாஸ்யம் என்பது கௌரீ நிருத்தம்; சிவ நிருத்தம் தாண்டவம் எனப்படும்" (சப்த தாராவளி.)

அழகிய கருணா ரசத்தில் விளங்குவதே. நடனம் இளமையளிக்கின்ற தென்று மேல் நாட்டார் கூறுகின்றனர். அதுசரி, காலனை வென்ற தில்லை நடராஜனும் தேவி சிவகாமியும் தம்மை அன்புடன் வணங்கு வோர்க்கு என்றும் மாறா இளமை யளிப்பவர்தானே?

(1) எவ்வித மாறுதலுமில்லாத சித்தத்தில் முதல் முதலில் உண்டாகின்ற மாறுதல்தான் பாவம் எனப்படும் (பாவம்—கருத்து, உணர்ச்சி).

(2) ஹாவம் என்பது புருவங்களை நெறித்தல், கண்ணடித்தல் முதலிய ஜாடைகளால் காதலியின் சம்போக விருப்பதை வெளியிடும் செய்கையாம். பாவமும் இதுவும் ஒன்று தானாயினும், இதில் ஜாடை வெளிப்படுவதே சிறிது அதிகமாம். இவை 18 விதமாகவும் 49 விதமாகவும் பிரிகின்றன. இவைகளை நடிக்கும் முறை பின்னர் எழுதப்பெறும். உதாரணமாக: இங்கு தெரிவித்த ஹாவம்—பாவம் முதலியவற்றை அபிநயிக்கும் முறைகளையும், தமிழர்களின் 24 வகை ஆபிநயங்களையும் நாடக கலையில் சிறிது விளக்கி, அப்பால் தனிப் புத்தகமாகவும் வெளியிடுவோம்.

## 4. சித்திரம்—Picture Painting.

'சித்திரம் பயின்ற செம்பொன் விதானத்தைச்' சீவக சிந்தாமணி விளக்கும்.

இது பத்துவிதக் காதலின் நிலைமையை (அல்லது 49 வித பஞேபாவனைகளை) விளக்கும் கோடுகளை—பொம்மைகளை—பதுமை வடிவங்களை—அவற்றின் ஜீவகளை தோன்ற விசித்திர வர்ணங்களுடன் வரையும் சித்திரவேலைத் திறமையாம். சகுந்தலை வரைந்தாளல்லவா? அது போன்று படம் வரைவதாம். இது ஆறு அங்கமுடையது. (அதாவது இத் திறமையை ஆறுபாகமாய் பிரிக்கலாம்)

(1) முதலில் உருவ பேதங்களை வகுக்க வேண்டும்.

(2) அப்பால் அவயவங்களின் அளவைத் துலக்க வேண்டும்.

(3) பின்னர் அந்த உருவப் படம் தனது பாவத்தை—உள்ளக் கருத்தை—விளக்கும் நிலையில் கண்ணொளி சுடர் வீசுமாறு செய்ய வேண்டும்.

(4) அதன்மேல் லாவண்யம் (அழகின் அமைப்பு) டால் வீசு மாறு செய்ய வேண்டும்.

(5) அவை முடிந்தவுடன் அங்கங்களின் பருமன் ஒன்றுக் கொன்று பொருந்தித் தோன்றுகின்றதா என்று கவனிக்க வேண்டும்.

(6) இவை ஐந்தும் பூர்த்தியாயின், வர்ணந்தீட்டும் வேலை முற்றுப் பெறும். அதில் தான் சித்திர ஜீவகலையின் பரிபூரண தாண்டவத்தைக் காட்ட வேண்டும்.

காலஞ் சென்ற ரவிவர்ம ராஜனிடம் இக்கலை பிரத்தியக்ஷ மாகப் பேசி நின்றதாம். இன்னும் அவரது குடும்பத்தைச் சார்ந்த ஆண் பெண் அனைவர்க்கும் இயற்கை பாத்தியமாக இக் கலாதேவி அருள் செய்து தான் வருகின்றாள்!

கீதம் முதல் சித்திர கலைவரையுள்ள 4 கலைகளும் பிறர்க்கு இன்பமளிப்பதுடன் தனது மனோ விநோதத்திற்கும் இன்றிமையா தது. ஆகவே ஆனந்தக் கலைகளில் இவை முன்னணியிலே விளங்கு வன. இந்த சித்திர கலையின் லக்ஷண நுட்பமறிந்த புலவனுக்கும் ஒரு அரசனுக்கும் நிகழ்ந்த உண்மைச் சம்பாஷணந்தான் "ஸபே மிராக்" கதையாக முடிந்தது. அக்கதையைப் படிக்க விருப்பமா?

5. பத்திர திலகங் கத்தரிக்கை

## Art of cutting leaves like Bhurjapathra etc., so as to make Thilakams—marks on the fore-head.

புராதன இந்தியப் பெண்மணிகள் பத்திரதிலகங் கத்தரிக்கை யில் ஒரு விசேஷ மென்னவென்றால், அவர்கள் தமது மனத்திலுள்ள காதல்குறி, விநோத உணர்ச்சி, கோபம் ஊடல்-பிணக்கு பிரிவாற்றாமை முதலிய பலவகை உணர்ச்சிகளையும் வித விதக் கத்தரிப்பு வேலைகளால் விளக்குவராம். அதை யறிந்து காதலன் நடந்து கொள்வனும். காசியில் கிடைக்கின்ற பூர்ஜ பத்திரம் என்ற ஒருவகை யிலை வசிய சக்தி யுடையதாம். முற்காலக் காதலிகள் அதில் (கடிதம் போல) வரைந்த செய்தியைச் சில நாடகங்களில் காணலாம். இந்தக்கலையறிவு பிறரை வசியம் செய்யவும் தனக்குத்தானே அழகாக விளங்கவும் போதும்.

இந்தத் திலகத்தின் பெருமை விளங்க இந்திய மாதர்திலகம் அன்று ஒரு கதை கூறினளே, அதை நினைத்துப் பார்ப்போமா? அநுமான் இராமன் மீது கொண்ட பக்தியின் வேகத்தினால் அந்த உவர்க்கடலைக் கூட ஓரே தாண்டாகத் தாண்டினாலல்லவா? தாண்டிய பிறகும் கடைசியாக மிகமிகக் கஷ்டப் பட்டார் பாவம்! எப்படியோ அசோகவனமும் கண்ணில் பட்டது! கற்பரசி சீதையையும் தரிசித்தார். நடந்தன கூறினார். 'வில்லுங்கையுமாக இதோ வந்து கொண்டிருக்கிறேன்' என்ற இராமனது செய்தியையும் அறிவித்தார்: ஒருவாறு பாதிக்கவலை நீங்கப் பெற்றார். இனி? 'அம்மா எனது ராமபிரானுக்கு (பிழை மன்னிக்க! நமது அண்ணல் இராமனுக்கு) என்ன நற்செய்தி தெரிவிக்கின்றீர்கள்? தாங்கள் தெரிவிக்கும் செய்தி தங்களுக்கும் இராகவனுக்கும் மாத்திரம் தெரிந்த சங்கதியாக அதாவது ஏதேனும் ஒரு பழைய ரகசியச் செய்தியை நினைவூட்டுவதாக இருந்தால் சர்வ இலாக்கியமாகும்! நன்னம்பிக்கையை உத்தேசித்து அவ்விதச் செய்தி இராமபிரானுக்கு மிக மிகத் தென்பையுண்டு பண்ணும் என்று வேண்டினார் அநுமான். "நல்லது! இதனைக் கூறுவீர்" என்று கூறத் தொடங்கும்பொழுதே, தன்முன் நிற்பது அநுமான் என்பதை மறந்து விடுகின்றாள் சீதை! 'இராம! எனதுமனத்திற்கினிய இராம! அன்று மாலை நேரத்திலே ஆம்! பம்பா நதியின்பக்கத்திலே—அந்தச் சிறு மலைக் குன்றின் மீது நீயும் நானும் தனித்து விளையாடுங்கால், நீ எனது ஒரு தாடையின் மீது வரைந்த மனோசிலையின் செம்பொட்டுத் திலகத்தை மறவேன்! மற்றொரு தாடையின் மீது...'இதற்கிடையில் தனது அசோகவன நிலையும் தன் முன்னே வீர அநுமான் வணங்கி நிற்கும் காட்சியும் நினைவுக்கு வந்து விடுகின்றது! காதலர்களின் திலகவித்தை 64 கலைகளுக்கும் ஒரு வைரப் பொட்டு போன்றதுதான்! இக்கலைக்கு வடமொழியில் விசேஷமான கத்தரிப்பு வேலை என்று பெயரிட்டது எதனால்? காதலன் காதலிக்கு மட்டும் விசேஷமான கருத்தை விளக்கும் பாஷையொன்று இத்திலகத்தின் மூலமாக விளக்கப்பட்ட விநோதக் கதை யொன்றை அடுத்த புத்தகத்தில் விளக்குவோம்.

6. பலவகை யரிசி, பூக்களால் கோலம் இடல்.

Ornamental designs with rice and flowers.

தற்காலம் மாதர் பலரும் மாலை நேரத்தில் சினிமாவுக்குச் செல்வது போல, 'முற்கால மாதர்கள் வீட்டுத் தெய்வத்தை' (கலைமகளை) வித விதமான வர்ண அரிசி கொண்டும் பலநிற மலர்களாலும் பலியிட்டு (பூஜித்து) வணங்கும் வழக்கம் நமது இந்திய மாதர்களின் இல்லந்தோறும் இருந்ததாம். இதனைக் காளிதாசர் ஓரிடத்தில் குறிக்கின்றார்: "அரசே! தாம் தூக்கந் தெளியத் தக்க நேரமாகின்றது; நேற்று மாலையிற் செய்த மலர்ப் பூஜை—மாலை—களும் இடை வெளியிட்டுச் சுருங்குகின்றன! இந்த தீபப் பிரபை தனது ஒளி மண்டலமும் மாறி மறைகின்றது! இதோ இந்தத் தங்களுடைய பசுங்கிளியும் நாங்கள் செய்யும் துதியைத் திரும்பத் துதித்துத் தங்களுக்கு மகிழ்ச்சி யளிக்கின்றது!" அதென்ன சங்கதி? வீட்டுத் தெய்வமா? வீடு—கல்—தூண்—வாயிற்படி இவை ஜடப் பொருள்களன்றோ? அவற்றை மலர் கொண்டு பூஜித்தல் மூடப் பழக்கமன்றோ என்பர் தற்கால நாகரிகபேயரில் சிலர். நாகரிகம் மிகுந்த நகர வாசிகள் தமது வீட்டில் திருமகளுக்கும் கலைமகளுக்கும் தனித்தனி இடம் அமைக்காது-சாக்கடைநாற்றம் போக்க வழியும் செய்யாது—வருந்தும் தற்கால நிலையைப் பார்க்கினும், 'வீட்டையே தெய்வ ஆலயம் போல் கருதி' மனம் பொருந்த—மணம் விளங்கப் பூஜை செய்த அக்காலத்து மாதர்களின் மூட பக்தி குருட்டு பக்தியா? அன்றி—அறிவாளர் செய்யும் ஞான பக்தி தானா என்ற கேள்வி நல்லதுதான்!

7. பூ அமளி அமைக்கை)—Preparing a bed of flowers.

பெண், ஆடை, அணிகலன், போஜனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி (புஷ்பப் படுக்கை) என்ற அஷ்ட போகங்களில் இது எட்டாவதாம்.

இந்த மலர்ப் படுக்கை அமைத்தலில் மாதர்க்கு குஷி அதிகந்தான்! பார்வைக்குப் படுக்கையறை! அது அலங்காரமாயிருந்தால் அங்கு மகிழ்வுடன் படுக்கின்ற காதலர்க்குப் பிறக்கும் சந்தானங்களும் அது போன்றகுஷி யோடு-உற்சாக சீலர்களாக விளங்குவராம். இந்தக் கலைத் தேர்ச்சி ஆண்களுக்கும் அவசியமென்றார் சுக்ராசாரியர். பூ மெத்தையின் கீழ்ப்பக்கத்தில் எங்கோ ஒரு சிறு மயிரிழை

தங்கிய காரணத்தால் தனது உடம்பெல்லாம் நோவெடுத்ததாக விக்கிரமாதித்த மன்னனிடம் புகார் தெரிவித்தபுத்திமான் சயன சுகியா அல்லவா சொல்லுங்கள்?

## 8. ஆடை, உடை, பற்களுக்கு வர்ணம் அமைக்கை.

## Colouring dress and teeth.

பல் அழகாக இருந்தால் சொல்லும் அழகாக வருமாம். வெற்றிலை போட்டுக்கொள்வதை வேண்டா மென்போர் யார்? வெற்றிலை போடாதவன் முகத்தில் திருமகளின் அருள் விலாசம் தங்காதாம்! இது ஒரு வெற்றிலை யபிமானியின் கற்பனையாக இருந்தாலும், காளிதாசன் கூட "வெற்றிலை போடாதவனை" வெறுத்துப் பேசுகிறார். வெற்றிலை போட்டால் ஜீரணசக்தி, ஆரோக்யம் முதலிய 13 குணங்கள் உண்டாகின்றனவாம்! அவை சுவர்க்கத்தில் கூட கிடையாதென்றார் ஒருவர். பல ரபிப்பிராயம் வெற்றிலை போடுவதை ஆதரிப்பதா யிருக்கும் பொழுது, வெற்றிலையுடன் போடத்தக்க ஒரு சுகமான வாசனைச் சூரணத்தையும் போஜமன்னன் வரைந்து செல்லாதிருக்க முடியுமா? ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி வகைக்கு ½ அணு எடை; ஏலக்காயரிசி ¼ அணு எடை; பச்சைக் கற்பூரம் ¼ அணு எடை இவைகளை ஒன்றாகச் சேர்த்து வெயிலில் வைத்துப் பொடித்து அந்த சூரணத்தில் கொஞ்சம் சேர்த்து வெற்றிலை பாக்கைப் போட்டுத்தான் பாருங்களேன்! பற்களின் ஒளியும் அழகும் முகத்தின் காந்தியும் மணமும் மனத்திற்கு மிகமிக ரம்மியமாயிருக்கும்! இது போன்ற பல்லலங்காரச் செய்தியையும் பலவகை ஆடை உடைகளுக்கு அழகான வர்ணம் (சாயம்) இடும் முறையையும் முற்கால மாதர்கள் தெரிந்திருந்தனராம். இக்காலத்திலும் அதனைவிளக்கும் நூல்கள் பல. உடம்பு முழுதும் உயர்ந்த மணம் கமழவேண்டுமா?

இலாமிச்சை வேர், காரகில், செஞ்சந்தனம், இருவேலி யிலை இவை சமனெடை யெடுத்து அரைத்துத் தேய்த்தால் உடம்பிலிருந்து எப்பொழுதும் சந்தனவாசனை கமகம வென்றுவீசும். அதிகம் தெரிய விரும்பினால் அடுத்த புஸதகத்தையும் எதிர் பார்க்கலாம்! புனுகுப்பட்டை யென்பது யாது? எங்கள் 8வது பிரசுரம் பார்க்க.

## 9. பள்ளியறையிலும் பான அறையிலும் மணிபதிக்கை

Setting bed-rooms and drinking-rooms with precious stones.

பள்ளியறையிலும் பான அறையிலும் மரகதம், பவளம் முதலியன அமைப்பராம் முற்கால இந்திய மாதர் திலகங்கள். வேனற் காலம் போன்ற பருவ காலங்களுக்கு அத்தகைய அமைப்பு இன்பந் தருமாம். இந்தியரின் வீடு தோறும் அத்தகைய கற்கள் அமைந்திருந்தனவா என்று கேட்போர் சிலர். மிகமிகச் செழித்திருந்த புராதன இந்தியாவைக் குறித்து நமக்கு உண்மைகளையே தெரிவிக்கும் நூல்கள் எவை? இந்த 64 கலை நூல்களைப் போன்றன மிக மிகச் சிலவாம்! பாஞ்சால நாட்டில்—சீதை பிறந்த விதேக நாட்டில்—இத்தகைய செல்வ வாழ்வு இல்லையென்று கூறவும் நம்மாலாகாது! ஜநகன் போன்ற ஆத்ம ஞானி அரசர்கள் வாழ்ந்த தேசம் இது. இந்த தேசத்தின் செல்வம் பிற நாடுகளுக்குச் செல்லப் பெறாத ஒரு காலத்தில் இந்தகைய செழுமை இருந்திருக்கத் தான் கூடும்! ஏதோ ஒரு காலத்தில் ராமராஜ்யம் நடந்ததாகச் சொல்லுகின்றாரே வால்மீகி! அந்த அயோத்தியைச் சூழ்ந்து கீழே கிடக்கும் மண்ணை யெடுத்துச் சோதித்தால் பொன்னும் காணப்படுகின்றதென ஒரு ஆங்கிலேயர் எழுதுகின்றார். இருக்கலாம்! இராவணனது இலங்கையில் அவனுடைய பிரதாப ஆட்சி காலத்தில்—தர்பார் வாயிலின் முகப்பில் காணப்பட்ட (வாயிற்) படிக்கல் கூட, பச்சை மரகதக் கல்லாகத்தான் கிடந்ததாம்! வாயிற்படிக்கு அத்தகைய கல்லையா போடுவது என்று கேளாதீர்! வேறு கற்கள் ராவணனுக்குக் கிடைக்கவில்லையென்றால் அவன் தான் என்ன செய்வான்! எங்கோ சென்ற பச்சையப்ப முதலியாருக்குப் பச்சைக்கல்லே கிடைக்கவில்லையா? அது போல் தான் அவனது நிலையும் போலும்!

## 10. படுக்கை அமைக்கை—Arranging the bed.

கவலையுள்ள ஒரு சிலர் தவிர மற்றவர்கள் (ஏறக்குறையப் பாதி வாழ் நாள் நித்திரையிலேயே செல்ல வேண்டியதாயிருக்கிற, பாக்கியவான்) களுக்குப் படுக்கை சுகமாக அமைய வேண்டாமா? மொட்டை மரத்தின் கட்டைகளைப் பலகைபோல் நறுக்கிக் கட்டில்

••

செய்வதைத் தவிர்த்து, பூவுங் கனியு முள்ள சில ஜாதி மரங்களைப் பாத்துத் தேர்ந்து, படுக்கைக்கான கட்டில் அமைக்க வேண்டுமாம்! ஒரே மரத்தில் கட்டில் செய்வதைப் பார்க்கினும் சந்தனமரம், வேங்கை மரம், தேவதாரு, மருது, தேக்கு போன்ற மரங்களில் 'மூன்றின் பலகை சேர்த்திணைத்துக்' கட்டில் செய்தால் அதில் படுக்குந்தோறும் செல்வ வளர்ச்சிக் கான யோசனை, கீர்த்தி, லாபம் உயர்ந்து வருமாம். மூன்று மரம் சேர்க்கலாமென்றால் ஆறு ஏழு எட்டு வித மரங்களை சேர்த்தாலென்ன என்ற கேள்விக்கு அநுமதியில்லை! அவ்வாறு செய்தால் குலநாச மேற்படு மென்றார் கோபத்தையே அறியாத M. K. குருக்கள். அந்த குருக்களய்யா சொல்வதை தட்டலாமா?

படுக்கைக்கு நீளம் அகலம் எத்தனை? குழந்தைகளுக்கு எப்படிப் படுக்கை அமைக்க வேண்டும்? அதைத்தானே அடுத்த புஸ்தகத்தில் சொல்லப் போகின்றோம்!

இனி, இடம் (ஊர்) காலம், திசை (திக்கு) படுப்போரது மனத் தின்நிலைமை முதலியவற்றை விளக்கும் முறையில் படுக்கை அமைக்க வேண்டுமாம். உதா:— படுக்கையின் விரிப்பிலிருந்தே காதலியின் பேராவலும், ஆவலின்மையும், நடுமனமும் கண்டு கொள்ளலாமாம்?

11. ஜலதரங்கம்.

Filling musical cups with varying quantities of water and playing with sticks.

ஜலத்தில் இறங்கி நீந்தத் தெரிந்த பிறகன்றோ அந்த ஜலத்தில் தரங்கங்களை—(அலைகளை) அடுக்கடுக்காக உண்டாக்கி விளையாடத் தெரியலாம்? ஆகவே முதலில் நீந்தத் தெரிய வேண்டியது அவசியம். நீந்தத் தெரிவதால் உண்டாகும் நன்மைகள் பல. அது உடம்புக்கு வலுவையும் நல்ல ஆரோக்கியத்தையும் அளிக்கும். ஆழமான இடத்தில் தவறிச் சென்று விட்டால், ஆபத்தின்றிக் கரையேறலாம்; பிறரையும் கரையேற்றலாம். ஸ்ரீ வா. வெ. சு. அய்யரையும், விநாயக தாமோதர சவர்க்காரையும் போன்று நடுக் கடலில் குதித்து நீந்தத் தெரியா விடினும்(!) ஆற்று வெள்ளத்திலேனும் அமிழ்ந்து போகாதிருத்தல் அவசியமன்றோ? எனவே, ஜலக்கிரீடை (விளையாட்

டாக நீந்தக்கற்றலும்) மாதர்க்குரிய கலைகளில் ஒன்றாயிற்று. அப்படியானால் ஏன் இந்த இடத்தில் ஆண்களுக்கும் பிரவேசமளிக்க வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது! பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்த மாபாரத யுத்தத்தின் முடிவிலே துரியோதனன் ஒரு நீரோடையில் சென்று மறைந்தது உண்மைதானும்! இது துரியோதனனின் பிரதாபத்தைக் காட்டவில்லையா? அதிகம் பேசுவதேன்? ஆண் பெண் அனைவர்க்கும் நீந்தத் தெரிந்தால் காவேரியில் கைதவறிய பஞ்ச பாத்திரத்தைக் கொள்ளிடத்தில் போய் தேடாமல் காவேரியிலேயே மூழ்கிக் கண்டெடுத்துக் கொள்ளலாமல்லவா? சடேரென்று சென்னைக் கடற்கரைச் செம்படவச் சிறுவன் போல் மூழ்கிப் பழகுவோர்க்குத் தூற்றுக்குடிக் கடலிலிருந்து முத்துக் குளித்தல் கூட விநோதமாகத்தோன்றுது!

இனி, இக்கலை இங்கு தெரிவித்தது போல தண்ணீரில் அலையுண்டாக்கி விளையாடுதலையும் ஜலதரங்கம் என்னும் வாத்தியம் வாசித்தலையும் எவ்வாறு குறிக்கும் என்பதை கவனிப்போம். தண்ணீரில் அலையுண்டாக்கி விளையாடுதலாகிய "ஜலக்கிரீடை" என்னும் ஆடலை முதலில் விளக்கியாயிற்று. அதில் தேர்ந்தவர் மலையாளத்து மங்கையரெனக் கலை விலாசங் கூறுகின்றது. கண்ணன் கோபிகை மாதருடன் செய்த திருவிளையாடல்கள் இத்தருணத்தில் நினைவுக்கு வருகின்றதா?

ஜலதரங்கம் என்ற வாத்தியமாவது யாது? பலகிண்ணங்களில் பல் அளவில் நீர் வார்த்து 'சுருதி' அமைத்துக்கொண்டு சிறுகழியால் தட்டி வாசிக்கும் ஒருவகை யந்திரம் அது.

காலஞ்சென்ற இராமநாதபுரம் சுப்பையர் இக்கலையில் தேர்ந்தவர். அவரது தேர்ச்சியின் எதிரொளியாக விளங்கிய ஸ்ரீமதி திருவாரூர் ராஜத்தையும் இக்கலை நினைவூட்டும்போலும்.

12. நீர் வாரி யடிக்கை.

## Pumping water through syringe.

11வது கலையில் தெரிவித்தவாறு ஜலக்கிரீடை செய்யுங் காலத்தில் குஷி மிகுதியினால் காதலர் காதலிகள் ஒருவர்க்கொருவர் தண்ணீர்

வாரியடித்து விளையாடுதல் இயற்கைதானே! அதுபோல் குழாய்களின் மூலமாகப் பிறர்மேல் தண்ணீர் பீய்ச்சி விளையாடுதல் மற்றொன்று. உதாரணமாக:கலியாண காலத்திலே தமிழ் நாட்டு மாதர்கள் மஞ்சள் நீராடல் பொருந்தும்.

தங்கக்குழாய் கொண்டு பல வர்ணங்கொண்ட தண்ணீரைத் தமது காலதனுன குசன்மீது அவனது காதலிகள் பொழிந்து விளையாடிய கதையை காளிதாசன் இரகுவம்சம் 16—70ல் அழகாக வருணிக்கவில்லையா?

## 13. வேஷங் கொள்கை.—Disguising.

அழகிய அங்கனைகள் முறையே ஆடையும் ஆபரணமும் அழகாக அணிந்து கொள்ளத் தெரிய வேண்டுமாம்! ஏன்? இன்னும் அழகாக விளங்கவாம்! திரௌபதி (அஞ்ஞாதவாச காலத்தில்) விராடமன்னனது அந்தப்புர ஸ்திரீகளுக்கு அலங்காரம் செய்விக்கும் பணிப் பெண்ணாக அமர்ந்திருந்தாள். அரசர்களின் அந்தப் புரத்தில் சுதந்திரமாக இருந்து இவ்விதச் சிங்காரக்கலைப் பணிகள் செய்துகலை அறுபத்திநான்கினுக்கும் ஆசிரியை போல் அமரும் மாதர்க்கு ஸைரந்திரீ என்று பெயராம். இத்தகைய ஜாதி யொன்று புராதன இந்தியாவில் இருந்ததாயும் அமர சிம்மன் கூறுகின்றார். இப்பொழுது 64 கலைகளின் பெயர் தெரிந்த ஆடவர் கிடைப்பது கூட அரிக்கொம்பா யிருக்கின்றது. தற்கால சினிமா வுலகிற்கு இந்தக் கலை ஜீவாமிருதம்! இத்தருணத்தில் மேக்கப் செய்வதை ஒரு கலையாக உணர்ந்த புராதன இந்திய மாதர்களின் அறிவு சிறியதா என்பதையும் சிந்தித்துக் கொள்ளலாம்.

வேஷக் கலையில் நன்றாகத் தேர்ந்ததை நிரூபிக்கவே போலும் அதற்கடுத்தால் போல் ஆள் மாறாட்ட வித்தையும் இதில் சேருகின்றது. இது பிறரை மயங்கும்படி செய்யும் சக்தி வாய்ந்தது. ஒருவர் அங்கோல தைலத்தை உடலெங்கும் பூசிக் கொண்டால் பிறரது கண்களுக்குப் பிசாசு போல் தோன்றுவராம். அவரைக் கண்டவுடன் பசுவும் பறவையும் பிற பிராணிகளும் கூடப்பயந்து ஓடுமாம்! மனோசிலை, பச்சைக் கற்பூரம் இரண்டையும் கதளி வாழைச்சார்விட்டு அரைத்து மோகன மந்திரம் ஜபித்து திலகம் அணிந்து கொண்டால்,

அவரைக் காண்போர் யாவரும் மோஹித்துப் போவராம்! மோஹினி வேஷங் கொண்டு தாருகா வனத்து மாதர்களை யெல்லாம் மயக்கிய திருமால் அத்தருணத்தில் இக்கலை யறிவைக் கைக்கொண்டார் போலும்! இக்கலையில் தேர்ச்சி பெற்றோர் மிகமிக அழகான வடிவங்களை யும் கொள்ள வல்லவராம்! சூர்ப்பணகை சீதையின் அழகைக் கண்டு பொறாமை கொண்டு—சீதையைப் போல் ஒரு மாறு வேஷமுங் கொண்டு மன்னர் மைந்தனான ராமனை மயக்க முயன்றாளாம். பீமசேநன் கந்தர்வ வேஷம் பூண்டதும் கீசகனை வஞ்சித்ததும் இக்கலை யறிவின் எல்லைக்கு ஒரு அளவு கோலாம். எனவே, பூர்வகால இந்திய ஸ்திரீ புருஷர் களுக்கு இக்கலையறிவு ஒருவாறு அமைந்திருந்தது போலும்! இதை மாய வித்தையென்று பிற்காலத்தினர் ஒதுக்கி விட்டனராயினும், இலை மறை காய் போல், இக் 'கலை விதை' ஆங்காங்கு பிற கலைக் கொடிகளினிடையிலே வெடித்து வீழ்ந்து முளைத்துத் தான் வரு கின்றது!

வேஷங் கொள்ளுதல் என்பது மாறு வேஷந்தான். ஆள் 'வேஷம் மாற வேண்டிய' தருணம் வருமானால், இந்தக் கலை கட்டாயம் அபய தானஞ் செய்யும். பண்டைக்காலப் படையெடுப்புக்களில் இக்கலை யறிவு ஓரளவு இந்தியருக்கு உயிர்த் துணையாக விளங்கியதாம். பெரிய பெரிய அரசர் கூட இதனால் உயிர் பெற்று வாழ்ந்ததும் உண்மை தானும். வா. வெ. சு. அய்யர் வல்லரசுகளின் கண் காணிப்பில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் நிகழ்ந்த பொழுது, அவர் ஒரு 'துருக்கிய' கனவான் போல் நடித்த கதை இதற்கு ஒரு உதாரணந்தான். இந்தக் கலையில் தேர்ச்சி பெற வேண்டுமானால், பல தேசங்களின் ஜாதி—நாகரிக—பழக்க வழக்கங்களின் தேர்ச்சியும் வேண்டும். நம் நாட்டுப் பகல் வேஷக் காரரிடம் இக்கலை இன்று வழங்குகின்றது. "என்ன, டிரா மாக் காரக் கல்யாண ராமய்யர்தானே! என்னை ஏமாற்ற முடியுமா?" என்று எப்பொழுதோ சொன்னாராம் சிவகங்கை ஜமீன் ரிஸீவர் சங்க ரய்யர்! மறுநாள் பட்டப் பகலில் சங்கரய்யரின் மைத்துனி டில்லியி லிருந்து வந்த கோலத்தில் ஒரே முகாரி ராகத்தை உபயோகித்து விட் டாள்! அத்தனை தூரத்திலிருந்து வந்த மச்சினியின் அழுகையைக் கண்டு சங்கரய்யர் மனம் கரையாமலிருக்குமா? 'போன மைத்துனன் திரும்பி வருவான், மனத்தை சமாதானஞ் செய்து கொள்ளம்மா'

என்று கூறி மைத்துனியை சமாதானஞ் செய்வது மிகமிகக் கஷ்டமாகி விட்டது சங்கரய்யருக்கு! பாவம்! அப்பால் குளத்துக்குக் குளிக்கச் சென்ற மைத்துனி என் இன்னும் ஆகாரத்திற்கு வரவில்லை' என்று விசாரித்த பொழுது தான், அத்தனை திருவிளையாடலும் டிராமா கல்யாண ராமய்யரின் கைச்சரக்கு என்று வெளியாயிற்று! அந்த ஆனந்தத்தில் சங்கரய்யர் செய்த சம்மானம் என்ன வென்றால், தாம் உயிர் வாழ்ந்தவரை கலியாண ராமய்யரின் உயர் நட்பினராக வாழ்ந்த வாழ்க்கையின் மாறுதல் தான்! விக்கிர மாதித்த மன்னன் மாறு வேஷம்பூண்டு நகர் சோதனை செய்த கதை, பண்டை இந்திய மன்னர்களெல்லாம் நீதியை நிலை நிறுத்தப் பட்ட பாட்டையே விளக்கி நிற்கும். விகடப் பிரசங்கம், சத்தங்களையும் உருவங்களையும் வேறுயக் காட்டுதல் முதலிய திறமை இக் கலையாளருக்குக் கட்டாயம் அமைய வேண்டும். தஞ்சை ஜில்லாவில் கூத்தா நல்லூரும், குண்டூர் ஜில்லாவில் கூச்பூடி கிராமமும் இக்கலை வல்லோருக்குப் பேர் போனது. பாண்டவர் ஐவரும் நளனும் இக்கலையில் தேர்ந்தவர்களா அல்லவா என்பதற்கு அவர்களின் அஞ்ஞாத வாசமே சாக்ஷி!

## (14) மாலை தொடுக்கை—Making garlands.

மாலையை மாலையில் (அந்திப் பொழுதில்) அணிதல், மாதர்க்கு அழகுதானாயினும், அதுவரை—தன்னை அணிந்து கொள்ளாதிருப்பதைக் குறித்து அந்த மாலை வாடாதிருக்க வேண்டுமல்லவா? அதற்கு என்ன தந்திரம் செய்யலாம்? காதலி அல்லது காதலன் சிறிது தூரத்தில் இருக்கின்றான்; உத்தியோக மாற்றம் ஏற்பட்டது! இரண்டு மூன்று நாள் பிரயாணஞ் செய்தால் தான் அந்த மாலை அந்தங் கெடாது சொந்த மனிதரிடஞ் சென்று சேரும் என்ற நிலையும் வந்து சேருமானால், மாலை மணங்கெடாது—முகங் கெடாது—இதழ் உதிராது—அப்பொழுது தொடுத்த மாலை போல் அழகாக இலங்கச் செய்ய என்ன வழி? பம்பாய்க்குப் பாய்ந்து செல்லும் வெற்றிலைப் பார்சலில் 'கேழ்வரகைத்' தெளிப்பது போல் ஏதேனுமொரு முறையைப் பின் பற்றினால் மாலை மனம் வாடாது, மணங்கெடாது இருந்து கொள்ளுமா? அந்த முறைகளை யெல்லாம் அடுத்துப் படிக்கலாமே!

இவ்வாறு மாதர்கள் தம் தலை முடியில் நன்றாகப் பொருந்தும் வண்ணம் பூச் சூட்டிக்கொள்ளத் தெரிதல் ஒருகலையாம். இது பார்வைக்குச் சிறிதாயிருப்பினும் பயனில் பெரிதா யிருக்கின்றது. எந்த மாதர்களின் கூந்தல் நுனியிலே பூமாலை யடக்கத்துடன் இலங்குகின்றதோ அத்தகைய வனிதையர் பால் 'வர லக்ஷ்மி' வாசஞ் செய்கின்றனளாம். இதனை மலையாள நூல் தெளிவாகப் பேசுகின்றது. நாகரிக நங்கையரின் அழகிய தோற்றத்தை இந்த மாலை முடிப்பு மிகமிகச் சிறக்கச் செய்யும் போலும்! பாமஹாசாரியர் என்ற கலா நிபுணர் இதைத் தீவிரவாக வற்புறுத்துகின்றார். "மாதர்கள் மாலை நேரத்தில் தம்முடியில் அணிய வேண்டித் தான் மாலைகளுக்கு மாலை என்ற பெயர் வந்ததென்று.

ஒரு வாலிபப் பெண் தனது காதலனுக்குஅன்புடன் கொடுத்த மலர் மாலையொன்றை ஒரு பூங்கூடையில் வைத்துத் தோழியிடம் அளிக்கின்றாள். அத் தோழி இரண்டு மூன்றடி நகர்ந்து செல்லும் பொழுது காதலியின் முகத்தில் ஏதோ ஒரு பய உணர்ச்சி தோன்றுகின்றது. எத்தைத் தான் கண்டாளோ? ஏதைத்தான் நினைத்தாளோ? சேடிப் பெண்ணிடம் அளித்த பூங்கூடையை மீண்டுந் தனது மலர்க்கரத்தால் பறித் தெடுத்து, அக்கூடையின் மீது "பாம்புப் படமொன்று வரைந்தாள்; அதன் மீது பார்வதி காந்தனைச் சித்தரித்தாள்; அப்பால் அநுமானை அழகாகக் காட்டினாள்; சம்பக மலரும் பக்கத்தில் குறிக்கப்பட்டது". அப்பால் சேடி பூங்கூடையைத் தலையில் தாங்கித் தலைவனை நோக்கிச் செல்லுகின்றாள். இந்தப் பூங்கூடைப் பட எழுத்துக்களின் பொருளென்ன, என்று மல்லிநாதக் கவி வேந்து ரசிக சிரோமணிகளை யெல்லாம் தெளிந்து தெரிவிக்குமாறு வேண்டுகின்றார்! இது எந்தக்கலையைச் சார்ந்தது?

வித விதமாக மாலை தொடுத்தல்: மலர்களினால் தலை முடியிலும் உடம்பிலும் அணிந்து கொள்ளும்சாதாரணமான 'தாண்டா' மாலை முதலியன தொடுத்தல் மாலை தொடுக்கும் கலையாம். இது, 1 தலை முடியில் உள்ளே சொருகும் உள்தாண்டா, 2. பின்னலின் மேல்பக்கமாகத் தொங்கும்படி யணியும் கொண்டை சரம், 3. தலையில் முன்பாகமாக வந்து தொங்கும் கொச்சு தாண்டா, 4. கழுத்து முழுவதையும் நிறைத்து நேராகத் தொங்கும் தொங்கு மாலை 5. பூணூலைப்போல்

இடது புஜத்தின் மீது தாங்கி, வலது பாரிசத்தின் கீழ் தொங்கு மாறு போடத் தக்க பக்கச் சுற்று மாலை, 6. தலைமுடியில் மட்டும் சூட்டத் தக்க சூடுமாலை என ஆறு வகைப்படும். மலர்களின் குண மறிந்து காதலருக்கும் கடவுளுக்கும் இந்த ஆறு வகை மாலை தொடுத்து அளித்தலும் 'தான் அணிந்து கொள்ளுதலும்' இன்ப மாம். காதலர்க்கு மாலை தொடுத்து அனுப்புகின்ற முறையிலேயே தனது குறிப்பை விளக்க அக்காதலி அன்று மாலையில் என்ன மாலையை அனுப்பினுள்? அதைச் சிறிது ஆராய்வோமா?

மலர் மாலை அணிவதன் குணம்: தூர்க்கந்தம் போக்கும்; கண் களுக்கு குளிர்ச்சி; மனத்திற்குஇன்பந்தரும்; காமக் கிளர்ச்சி செய் யும்; சாந்தமுந் தரும் இவை அணியும் மலரைப் பொருத்தன.

15. மாலை முதலியன அணிகை.

Decorating with garlands.

இதன் பயன் மாதர் சிகை யலங்காரம்! மாதர்முடி பார்வைக்குக் கூட அழகுதான்! அழகுக்கு அழகு செய்ய வேண்டியது அவசியமா என்ற கேள்வி பிறக்கலாம். காரணம் என்னவோ கண்ணனைக் கேளுங் கள்! அவன்தான் இராதையின் தலை முடியை அழகாக வாரி முடிந்து மலருந் தொடுத்து அழகு செய்தானும்! பெண்களின் கலையில் கண்ணன் தலையிட்டதேன்? தலைக்குச் சூடும் பூச் செண்டை 'தக்க வாறு தாண்டாத் தொடுக்கும் கலையை' கண்ணன் கற்றஇடம் எங்கே? ஸாந்திப முனிவரின் வீட்டிலா?

முடிமாலை சுற்றுமாலை இணைத்தல்: ஒரு தனிக் கலையில்லையா? இது 14 வது கலையில் அடங்கியது போலவே தோன்றுமாயினும், அங்கு கூறியது ஓரே வகை நிறமுள்ள மலர் கொண்டுதொடுப் பதாம். இது பலவித—வர்ணங்கள் வாய்ந்த புஷ்பங்களைத் தேர்ந் தெடுத்து, முடியில் அணியத் தக்கவாறும், சிரசில் சூட்டிக் கொள்ளத் தக்க வண்ணமும் இணைப்புவேலை செய்வதாம். இது கதம்ப வேலை. இதற்கு முன்னையதினும் அதிகத் திறமை வேண்டும், அதனுல் இதைத் தனிக் கலையாகப் பிரித்தார் போலும். மாதர்கள் அணியும் மண முள்ள ரோஜாவை மல்லிகைத் தாண்டாவில் எவ்வா றிணைக்கலாம் என்பன போன்ற கேள்விக்கு இக் கலை நல்ல பொருத்த

மான மாலையில் இணைத்து, விடை தரும் போலும்! கடவுளையே காதலனாகக் கொண்டு மாலை தொடுத்தளித்து—மாலையும் (திருமால் என்னும் விஷ்ணுவையும்) வசமாக்கிய மாதின் பேர் 'சூடிக்கொடுத்த' நாச்சியாராம்! அவரது பெருமை இந்த மாலைக்கலைக்கு ஒரு முடிமணி இட்டது போலாம். மல்லிகை மலரின் குணமென்ன? மகிழ்ச்சிதானு?

16. ஆடை யாபரணாதிகளால் அலங்கரிக்கை.

## Adorning with dress & ornaments.

அலங்கார வேலையறிதல்: அந்தந்த தேசங்களுக் கேற்ப வயதுக்கும் நிலைமைக்கும் தக்கவாறு—ஆடைகளாலும் ஆபரணங் களாலும் மாலைகளாலும் மனோகரமாக அலங்கரிக்கத் தெரிதல் ஒருகலை. சுந்தராங்கிகளுக்கு இவ்வகைச் சிங்கார வேலை யென்றால் மிகமிகப் பிரியமாம். அழகல்லாத மேனியர்களை அற்புத அழகு வாய்ந் தவர் போலும் செய்துவிட, அழகிகளின் சிங்கார அலங்கார வேலை களால் தான் எளிதில் முடியு மென்று நாம் கூறவும் வேண்டுமோ? அவரவர் மனோதர்மத்திற் கேற்ப இந்தச் சரக்கின் முடுக்கு பலவாறு பிரகாசிக்கும். "காதலிகள் விதவிதமாக அலங்கரித்துக் கொள்வன யாவும் காதலன் கண்டு மகிழ வேண்டும், என்ற பயனைக் கோரியவை தாம்" என்றான் காளிதாசன். பார்வதி அவ்வாறு தான் செய்தாளாம், லக்ஷ்மியோ?

புதிய ஆடை— அலங்கரித்துக் கொள்ளுதற்கான நல்ல தினங்கள்.

அசுவதி—புதிய வஸ்திர லாபந்தரும்.
உரோஹிணீ—செல்வம் வளர்க்கும்.
புநர்பூசம்—செல்வம் செழித் தோங்கும்
பூசம்—சுகம் பெருகும்.
உத்திரம்—லாபந்தான்.
ஹஸ்தம்—காரியம் கைமேல் வெற்றி.
விசாகம்—வெகு ஜனப்பிரீதி.
அனுஷம்—நேசர் வருவர்.
உத்திராடம்—சந்தோஷம் வருகுது!
அவிட்டம்—வீடு நிறைய தானியம் வருமாம்.

உத்திரட்டாதி—சந்தான லாபம்.
இரேவதி—இரத்தின ஆபரணங் கிடைக்கும்.

நலந்தரும் கிழமைகளாவன.

புதன்—பணம் கூடும்.
வியாழன்—மக்கள் பெருகுவர்.
வெள்ளி—ஆயுள் வளரும்.

(அபிலஷிதார்த்த சிந்தாமணி, மைசூர் சர்க்கார் பதிப்பு: 294ம் பக்கம்.)

கற்பரசியும் இந்திய வீரப் பெண் மணியுமான துரௌபதி மாறு வேஷம் பூண்டு முற்கூறியவாறு சைரந்திரீ, என்ற பேருடன் விராட வேந்தனது அரமனையில் வாழ்ந்து வந்தாளல்லவா? அப்பொழுது அவள் அஞ்ஞாதவாசம் (பிற ரறியாதபடி வாசஞ் செய்ய வேண்டும்) என்ற வரம்பில் வாழ்ந்து வந்தாளாயினும், தன்னை சைரந்திரீ என்று ஏன் அழைத்துக் கொண்டாள்? "சைரந்திரீ" என்றால், கரு நிறம் வாய்ந்து 'சிறு கோலைக் கையிலேந்தி' அரசர்களின் அந்தப் புரங்களில் சஞ்சரிப்பவள்தானே. அவள் மாதர் கண்ணுக்கு மைதீட்டுதல், தலைமுடி வாரிமுடித்து நகையணிதல், காலுக்குச் செம்பஞ்சிக் குழம்பூட்டுதல், ஆபரணங்கள் அணிவித்தல் முதலிய 64 கலைகளையும் அறிந்து அரமனைகளில் சுதந்திரமாயும் ஒழுக்க அழகு குன்றாமலும் முறையே வாழும் ஒருவகை ஜாதியினள் என்ற மட்டில் "தான்" புகழ்பெற்றால் போதும் என்று கருதினளாம்! இது அல்லாது துரௌபதியினது திறமை வெளிப்பட வேறு பெயர்பூண்டுவாழ்தல் அசாத்யம் போலும்! யமுனை ஆற்றங்கரை மணற் குன்றுகளிலே அலங்காரஞ் செய்து கொள்ளுகின்ற அந்த கோபிகை மாதர் கூட்டத்தில் கண்ணனுக்கு என்ன வேலை? "கிருஷ்ண! உனது காதலி ராதைக்கு மாத்திரந் தான் நீ அலங்காரஞ் செய்வதோ?" என்ற கேள்வியொலி யொன்றும் எழுந்ததாம் அம்மாதர் கூட்டத்திலே! அதற்குக் கண்ணன் அளித்த விடை யென்ன? ஒவ்வொரு கோபிகை மாதர்க்கும் வெவ்வேறு வகையில் விதவித அலங்காரஞ் செய்து காட்டி அவரது பலவகை நகை களையும் (மந்தஹாசங் களையும்—புன் முறுவல்களையும்) பெற்றுக் கொண்டது தான்!

அந்தக் கண்ணனுக்கு அதுதான் பரிசு போலும். ஆனால், அது போதாதா ?

## 17. சங்கு முதலியவற்றால் காதணி அமைக்கை.

## Making jewels with conch, etc

சங்கில் இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்ச சன்னியம், என்ற நான்கு வகையுண்டு. அவற்றில் வலம்புரி மிகமிகச் சிறந்தது அது இருக்குமிடத்தில் செல்வம் செழித்து விளங்குமாம்.

உயிருள்ள வலம் புரிச் சங்கு தென்னாறுகாடு ஜில்லாவிலே ஒரு நேயரிடம் இருப்பதாக அறிகின்றோம். பிற சங்குகளால் மாதர் தம் காதணிசெய்யலாம். 'வலம்புரிச்சங்கு' தெய்வபூஜைக்கு உரிய தெனக் கூறுவர் பெரியோர். சங்கணிந்தமாதர்க்குப் பால் மிகச் சுறக்குமாம். அவர்தம் பால் பருகும் குழந்தைகளுக்கும் வயிற்றுக் கட்டி, திருஷ்டி முதலிய நோய்கள் அணுகாவாம். (அது வைத்திய ருக்கு நஷ்டமல்லவா?)

காதணி: பெரும்பாலும் யானைத் தந்தத்தினால் காதணி செய்யும் வழக்கம் முற்காலத்தில் இருந்திருக்கின்றது. யானைத் தந்தம் ஒரு சில நோய்களையும் போக்குமாம். வழுக்கை விழுந்த இடத்தில் புதிய ரோமம் முளைக்கச் செய்வதில் யானைத் தந்தம் புகழ் பெற்றது. அவ்வாறு பல நன்மை கருதியே போலும் மாதரின் காதணிகள் யானைத் தந்தத்தினால் செய்யப்பெற்றன!

சிசுபாலன் இந்த யுக்தியில் கொஞ்சம் மேல் போனதாக மாக கவி ஒரு கதை கட்டி விடுகின்றார்:

சிசுபாலன் தனது காதலிகளுக்குக் காதணிகள் செய்ய விரும்பி நல்ல வலம்புரிக் கொம்பு யானையைத் தேடித்திரிந்தானாம். அவனது மனத்திற்குப் பொருத்தமாக கைலயங்கிரித் தாழ்வரையில் விளை யாடிய விநாயகரின் வலக் கொம்புதான் சரியாகயிருந்ததாம்! அதனால் அப்பொழுது அவன் ஒடித்துச் சென்ற கொம்பு இன்னும் முளைக்க வில்லை போலும் என்று அவர் கூறுகின்றார். கவிகளின் கற்பனைக்குக் கணக்கில்லை யானாலும் கருத்துண்டு! சிசுபாலன் ஒரு காமுகனை

பொழுது விநாயகர் ஒரு கொம்பானையாக விளங்குகின்றார்! நாம் அவரது நான்கு கைகளையும், இரண்டு பாதங்களையும் ஒருமத யானை முகத்தையும் ஒருங்கே காணும் பொழுது—நமது பக்திக் கண்களுக்கு—அவர் "தேவ வர்க்கம், மனித வர்க்கம், மிருக வர்க்கம்" என்ற மூன்று உலகங்களிலும் ஊடுருவிக் கலந்து 'கருணைமாமதம் பொழியும் அருள்மா மத'யானைமுகனெனத் தோன்றுவதும் உண்மை. அவரது துதிக்கையை நாம் துதித்தாலும் துதிக்காவிடினும் அதன் பெயர் துதிக்கைதான்! அதுபோல் அவரது ஒற்றைத் தந்தம் ஒடிந்த காரணம் எதுவாயினும், கோருகின்ற வரன்களையெல்லாம் அந்த ஒரு தந்தம் மட்டு மன்று, இருதந்தங்களும்: "தந்தம்! தந்தம்!" என்று இரு முறையும் பறை சாற்றுகின்றன! தந்தம் என்றால் "தந்து விட்டோம், நீங்கள் அன்போடு கோரிய வரன்கள் அப்பொழுதே கொடுக்கப் பட்டன" என்பது தான்!.

## 18. வாசனை கூட்டுகை.—Preparnig perfumes.

காலியாண தம்பதிகளை நோக்கிப் பெரியோர் எவ்வாறு வாழ்த்து கின்றனர்? "அஷ்ட ஐசுவரியமும் பெற்று வாழ்க" என்று தானல்லவா? அந்த எண்வகைச் செல்வங்கள் தான் "கற்புள்ள மனைவி, சுகமான ஸ்நானம், நல்ல போஜனம், விரும்பிய ஆடைகள், சிறந்த வாசனைப் பொருள்கள், புஷ்பம், தாம்பூலம், சம்போகம்" என்பன. இவற்றில் ஒவ்வொன்றையும் நமது இன்பக் கலை நூல்களில் தாராளமாகக் காணலாம்.

முன் தெரிவித்தவாறு ஒப்பற்ற வாசனை நிறைந்த மலரலங்காரம் கண்ணுக்கு அழகளிப்பதுடன் மனத்திற்கும் ஆனந்தந் தரு கின்றது. உயர்ந்த வாசனை மலர்களின் மோப்பம் பல நோய்களையும் நீக்குவதாகத் தற்கால உலகமும் அங்கீகரிக்கின்றதன்றோ? நல்ல ஆரோக்கியதிற்கான வாசனைப் பொருள்களை உண்டு பண்ணு வதில் இந்திய மாதர் ஒரு காலத்தில் சிறந்து விளங்கியதாகத் தெரிகின்றது. அங்குயை அளித்த உடற்பூச்சுக்கான கலர்ப் பொடி யின் மணத்தினால் கவரப் பெற்ற வண்டுகள் யாவும் பிற மலர் களின் இயற்கை மணத்தையும் மறந்து, 'சீதையின் உடலிலிருந்து மணக்கும் மோப்பம் நோக்கி' விரைந்து வந்தனவாம். (ரகு 12—27ல்

பார்க்கவும்,) வராக மிஹிராசாரியர் 16 தாய்ச் சரக்கைக் கொண்டு 160000 வாசனைச் சேர்க்கை முறைகளை விளக்குகின்றார். இந்தக் கலைத் தேர்ச்சி நம் மாதர்க்கு அமையுமானால், வாசனைப் பொருள்களின் வழியே பிறநாடுகளுக்குச் செல்லும் லக்ஷக்கணக்கான செல்வம் நம் மூவ்ர்கையில் நிலைத்து விளங்கும்! தேமாங்கனி, நாவல்பழம், காட்டு வெள்ளரி வேர் இந்த மூன்றையும் பொடித்து, சிறிது தேன் சேர்த்து இரவிலே வாயில் அடக்கிக்கொண்டால், மனோஹரமான மணம் வாயிலிருந்தும் உண்டாகும்.

ஆரணிய வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு தவசியன் மனைவி என்ற நிலையில் அநசூயை சீதையின் மனத்திற்கு இனிய லேபனத்தை —உடற் பூச்சை—எவ்வாறு தயார் செய்து கொடுத்தாள்?

அக்கால மாதர்கள் வாசனைத் தூபத்தினால் தம் தம் முடிகளை அழகாக உலர்த்திக் கொண்டனராம்! அதென்ன? கேசவர்த்தனியின் ஷாம்பூவா! ஆடைகளுக்கும்—உடைகளுக்கும் மணமேற்றும் வழக்கத்தை காளிதாசன் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

நங்கையர் களிக்க நல்வழி யென்ன? நல் வாசனைச் சேர்க்கை. இந்தக் கலைக்கு ஸம்ஸ்கிருதத்தில் 'கந்த யுக்தி' என்று பெயர். கந்தம் என்றால நல்ல பரிமளம். யுக்தி என்றால் அவ்வித நல்மணம் தோன்றும் படி செய்யும் சேர்க்கை முறை. வாசனைக்கலவை என்பது முடிந்த பொருள். இது, சந்தனத்தில் வாசனை சேர்த்தல் முதல், அத்தர் பன்னீர் செய்யும் வரை வித விதமான வாசனைப் பொருளுற்பத்தி செய்யும் சாஸ்திர அறிவாகும். முற்காலங்களில் இவ்வித அறிவைப் புகட்டும் நூல் இந்தியர்களிடம் அதிகம் இருந்ததை நிரூபிப்போம். உதா: பலரும் மறந்து—ஒதுக்கி—யெறிந்த புராண புத்தகங்களில் ஒன்றாகிய காளிகா புராண ஏடொன்று 'அனைவருக்கும் மனோகரமான' அந்த வாசனைப்பொருள்களை அடுக்கடுக்காக அறியும்படி பத்து விதமாய் விவரித்துப் பேசுகின்றது. அதன் 68வது அத்தியாயத்தைத் திறந்து பாருங்கள், அப்புத்தகம் பம்பாயில் அச்சாயிருக்கின்றது!

<u>வாசனை அதாவது மணமும் பத்து விதம்: அவையாவன:—</u>

1. கஸ்தூரி கோரோசனம் முதலிய இஷ்ட மணம்.

2. இறந்த உயிர்ப் பிராணிகளின் மணம் அநிஷ்ட (விருப்ப மற்ற) மணம். அதுவே துர்க்கந்த மெனப்படும்.

3. நல்ல மலர் முதலிய வற்றிலிருந்து உண்டாகும் மணம் இனிய மணம். அதைத் தேன் மணமென்பர் சிலர்.

4. 'அம்பழம்' என்று மலையாளத்தில் கூறப்படுவதும் மாம் புளிப்பு போன்ற புளிப்பு மணம் உடையது மாகிய மணம் புளிப்பு மணம். வடமொழியில் ஆம்ராதகம்; நம் தமிழ் மொழியில் புளிமா.

5. மிளகு சுக்கு முதலிய வற்றினின்றும் உண்டாகின்ற மணம் கார மணம் அல்லது எரிப்பு மணம்.

6. பெருங்காயம் முதலிய வற்றினின்றும் உண்டாவதும் வெகு தூரம் வரை பரவி மனத்தை மிகவும் இழுப்பது மாகிய மணம் அதி மணம்.

7. அநேக வகைப் பரிமள வஸ்துக்கள் சேர்ந்து 'கலிக்கம் போல அமர்ந்த மணத்தை உள்ளே வீசுகின்ற மணம்' உள்ளடக்க மணம்.

8. காய்ச்சப் படும் பொழுது கம கம வென்று வீசுகின்ற புத்துருக்கு நெய் மணம் மனோஹர மணம்.

9. கடு கெண்ணெய் முதலிய வற்றைப் போல் வீசும் கடுமணம் உக்கிர மணம்.

10. பச்சையரிசி யன்னம் முதலியவற்றினின்றும் உண்டா கின்ற மணம் (தெளிவான வாசனை) தெளிவு மணம்.

இவ்வித மணங்களைச் செயற்கையினாலுண்டாக்கும் முறை தான் முற்கூறிய பிருஹத்ஸம்ஹிதை என்ற நூலில் கூறப்படுகின்றது. அதனை ஆதாரமாகக் கொண்டு எத்தனையாயிரம் செயற்கை வாசனைப் பொருள்களுண்டாக்கலாம்? அதனை முறையே இதன் அடுத்த பாகத் தில் விளக்குவோம். அந்த முறையை இந்திய மாதர்கள் அறிந்தால் பிரெஞ்சு ஸெண்டைப் பார்க்கினும் சிறந்தன உற்பத்தி செய்யலாம். வீட்டுக்கும் மணம், நாட்டுக்கும் பணம்; உடலுக்கு தளுக்கு; உள்ளத் திற்கு களிப்பு! நமது இந்திய மணமெலாம் (அதாவது இந்தியர் செய்யும் கலியாணமெல்லாம்) இந்திய மணமாக (இந்தியவாசனைச்

சாமான்க ளமைந்த மணமாக) இருந்தால்தான் அது சட்டபூர்வமான இந்திய மணமாகும்! வெளிநாட்டு வாசனைச்செண்டு மணத்தை இந்திய மணத்தில் (இந்தியவிவாகத்தில்) கலந்து மணக்கவிட்டால் அது வெளிநாட்டு மணமாகுமன்றி, வேறு என்ன மணம்? சிறிது சிந்தித்துப் பாருங்கள்! மூக்குத்தான் முகர்ந்து பேசட்டுமே!

ஐந்து விதவாசனைப் பொருள். எலம், லவங்கம், பச்சைக் கற்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவற்றின் பொடியைப் பனி நீரோடு கூட்டிச் செய்த குளிகை இதில் ஒன்று.

குறிப்பு:—இங்கு தெரிவித்த பத்து வகை வாசனைகளில் இது எத்தனாவது வாசனை யென்று கவனியுங்கள்.

ஸ்நானஞ் செய்து முடித்த சீதை வாசனை தூபங் கொண்டு தனது முடியை உலர்த்திக் கொண்டாள். (ஷை 17—20.)

மாதர்கள் முக வாசனைக்காகப் போட்டுக் கொள்ளும் வாசனைச் சூரணம் ரகுவம்சம் 9—45ல் குறிப்பிடப்படுகின்றது.

மாதர்கள் தமது ஆடைகளுக்கு மணம் ஏற்றும் வழக்கத்தை ரகு வம்சம் 4வது சர்க்கத்தில் காளிதாசன் வருணிக்காமல் விடவில்லை.

அநசூயை யளித்த அந்தப் பொடி மணத்திற்கு மாத்திரம் ஏற்பட்ட தல்லவாம்; மன மகிழ்ச்சியையும் அளிக்கக் கூடியதுதானாம்! (ஷை 12—28).

உடலில் நல்ல மணம் கமழ: 'கோஷ்டம் என்பது ஒரு கடைச் சரக்கு. அதை பொடி செய்து தினத்தோறும் அசல் பசு நெய்யும் தேனும் கலந்து உட்கொண்டுவர, தேகத்தினின்றும் அழியாத மணம் கம கம வென்று வீசுமாம்.

கரு நிறக் காரிகையர் பொன்நிறப் பூவையராக: 'காமு கருப்பாயிருக்கிறாள்' என்று சம்பு ஐயர் அவளைத் தள்ளி வைத்து வேறு கல்யாணஞ் செய்து கொண்டாராம. 'இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்! நரம்பு கோணிடில் நாம் அதற்கு என் செய்வோம்?' என்றார் ஒரு வைத்தியர். அது போல், காமுவின் குணம் சம்புவய்யருக்குப் பிடியாவிடின், அதற்கு நாம் ஒன்றும் செய்வதற்

இல்லை! அவளது நிறம் மாத்திரம் மாற வேண்டுமானால், அதைப் பொன் போல் அழகாக விளங்கச் செய்ய நம்மாலாகும் என்பது கலை மகள் வாக்கு.

முருங்கை வேர்ப்பட்டை, பூலாங் கிழங்குப் பொடி, மஞ்சள் சூரணம் இந்த மூன்றையும் சம எடை சேர்த்து கலந்து 48 நாள் காலை மாலை யிரு நேரமும் காமுதேய்த்து குளிக்க வேண்டுமாம். அவ்வாறு செய்தால் அவளது உடம்பு பொன் போல் ஒளிருமாம்! அவ்வாறும் அவளது கருப்பில் சிறிது மீந்திருந்தால் மீண்டும் அந்தப் படி அந்தப் பொடி தேய்த்தே வரவேண்டுமாம். காமுவைப் போன்ற கருப்பு நிறம் வாய்ந்த பெண்மணிகள் இவ்வாறு செய்வதுடன், இந்த நூலின் இரண்டாம் பாகத்தில் கூறுவது போல் கணவனது மனம் போல் நடந்து அவனையும் வசியஞ் செய்து கொண்டால்(!) அப்பால் "கருப்பு மாங்குஸ்தான் பழத்திற்கு வந்த கிராக்கி மாதிரி" ஒரு நல்ல ராஜயோகந்தானும் காமுவுக்கு! [அதாவது மாங்குஸ்தான் பழம் மேல் பார்வைக்கு—தோல்பார்வைக்கு—நல்ல கருப்புத்தான்! ஆனாலுமென்ன? அதன் சுளை என்ன தித்திப்புத் தித்திக்கின்றது? அது போல்தான் கருப்பு நிறக் காரிகைகளும் தம் கணவர் மனத்திற்குத் தித்திப்பாகத் தோன்றுமாறு நடந்து கொண்டு விடவேண்டுமாம்! அப்பால் மாங்குஸ்தான் பழம் போல் தானும்! காதலனும் தள்ள மாட்டானல்லவா?]

## 19 ஆபரணம் இயற்றுகை—Making jewels.

ஆபரணம் அணிந்து கொள்ளும் முறை, என்றுங்கூறலாம். இதை அறியும் கலை பொருத்தமான ஆபரண மறியுங் கலையாம். ஆபரணங்கள் இரண்டு விதமாகும். ஒன்று இரத்தினக் கற்களும் முத்துப் பதியாததும் தங்கத்தினால் அமைந்ததுமான ஸாதா வேலை யமைந்த தங்கக் காரை முதலியது. மற்றொன்று முத்தும் கல்லும் பதித்துச் செய்யப் பட்ட காதணி—தோடு முதலியன. இவை பல வகை பேத முடையன. இவற்றை யறிந்திருத்தல் தனது அழகிய சரீரத்தை அலங்கரித்துக் கொள்வதற்கு மாத்திரமன்றி, பிற சுந்தரிகளின் அலங்கார வேலைகளுக்கும் பயன் படுவதாம். ஆபரண மணிதல் ஸ்திரீகளுக்கு ஆனந்தமான கலையல்ல வென்று எவரேனுங் கூறுவாரா? ஆயிரம் இழையுள்ள இந்திரச்சந்த மாலையும், முத்து பவளஞ் சேர்த்த

பொன் மணி மாலைகளும் முற்காலத்தில் வழங்கப் பெற்றன. பழைய நகைகளைப் புதிய முறையில் அணிதலும், நகையணியுந் தேர்ச்சிக்கு நற்குறியாம்.

புராதன இந்திய மாதர்களணியும் ஆபரணங்களை வால்மீகி முனிவர் மூன்று விதமாக வகுக்கின்றார்:—

(1) போகாபரணங்கள்

(2) மங்களாபரணங்கள்

(3) விவாக முஹூர்த்தாபரணங்கள்

காதலனுடன் இணைபிரியாதிருந்து இன்ப வாழ்வு நடத்தி வருங் காலத்திலும், உற்சவ காலங்களிலும், மற்றும் பல விசேஷங்களிலும் சுமங்கலிகள் சந்தோஷமாக அணிந்து கொள்ளும் நகைகள் போக ஆபரணங்களாம்.

காதலனைவிட்டுப் பிரிந்து உண்பன தின்பனவாகிய போகங்களையும் வெறுத்துக் காதலி தனித்து வாழுங்காலத்தில் ஸௌமங்கல்யத்தை (கணவனுடைமையை) மாத்திரம் குறிக்கும் ஆபரணங்களையே உத்தம ஸ்திரீகள் அணிந்திருப்பராம். இப்பொழுது அந்த அசோக வனத்திலே அண்ணலைப்பிரிந்து வாழ்ந்த கற்பரசி சீதையின் நினைவு வருகின்றதா? அல்லது எவர் கண்ணுக்கும் புலப்படக் கூடாதென மறைத்திருந்த அச்சந்திரமதியின் திருமங்கல்யத்தை எவ்வாறோ கண்டு கொண்ட அரிச்சந்திரன் நினைவு வருகின்றதா? அக்கற்பரசிகள் என்றுங் கைவிடாத திருமங்கலியம் போன்றவை தாம் மங்கள ஆபரணங்களாம்.

இனி, பெற்றோர்கள் பொன் போலும் பெற்றெடுத்த தமது கன்னியா ரத்தினத்தைப் பொன்னாலும் பிறமணிகளாலும் அலங்கரித்து, தக்க அன்புடையானை நோக்கி "மண்ணும் விண்ணும் அறிய—அக்நிசாக்ஷியாக" நீரும் மலரும் பொழிந்து அக்கன்னிப் பெண்ணைத் தானஞ்செய்யுங்கால் ஆசிமொழியுடன் அளிக்கும் அரிய பெரிய ஆபரணங்கள்தாம் விவாஹ முஹூர்த்த நகைகளாம்: இந்த முறை இன்று கூடத் தெலுங்கர் நாட்டிலே நன்கு கையாளப்

பெறுகின்றது. இந்த மூன்றாவது வகுப்பில் கூறப் பெற்ற நகைகள் பெற்றோராலும் — மாமன் முதலிய மற்றோராலும் — அளிக்கப் படலாம். திருமங்கலியம், மோதிரம் போன்றன இந்த இனத்தைச் சார்ந்தனவாக இராமாயண உரையாசிரியர் ஒருவர் கூறுகின்றார். அப்படியானால், அநுமானிடத்தில் இராமபிரான் அந்தரங்கமாகத் தெரிவித்தனுப்பிய நகையடையாளங்களைக் கொண்டு, இதோ இந்த அசோகமரத்தில் தொங்குகின்ற 'ஜநக மன்னனது' திருக்குமரியின் நகைகளை நாம் எவ்வாறு வகுக்கலாம்? சீதை அனுப்புகின்ற "மங்கள சூடாமணியை" எந்த வகுப்பில் சேர்க்க வேண்டும்?

அநுமான் சிம்சுபா விருக்ஷத்தி லமர்ந்திருக்குங்கால் கண்ணேட்ட மிட்ட 'தோடு, கொசை, மாட்டல், கைவளை' போன்றன எந்த இனத்தைச் சார்ந்தன? தனது சக்களத்தி மகனை இளவல் ராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதாக மன்னன் தசரதன் மனத்தில் நிச்சயித்து மங்கை கைகேயி யிடம் சென்று அந்தரங்கமாகத் தெரிவிக்கச் செல்லுங்கால், கட்டழகி கைகேயி முத்து முத்தாகக் கண்ணீர் சொரிந்து லக்ஷக்கணக்காக—மதிப்பிடற்குமரிய முத்து மாலைகளை யெல்லாம் கழற்றியெறிந்தாளல்லவா? அந்த நகைகள் எந்த இனத்தைச்சார்ந்தன?

## 20. இந்திர ஜாலம்—Art of magic.

விஷயத்தை முன்பின் அறியாத சிலர் இந்திர ஜாலம் என்பது வழக்கம். வேறு சிலர் இதை சாதாரணமாகக் கண் கட்டு வித்தை என்பார்தமிழர். இந்திர என்றால் கண் முதலிய இந்திரியங்கள் [அறிகருவிகள்] அவைகளை ஜாலம் செய்வதுபோல பிரமிக்குமாறு செய்யத் தக்க வேலைஎதுவோ அது இந்திர ஜாலமாகும். இனி, இதையே வேறோர் விதமாக அர்த்தஞ் செய்வோரு முண்டு. அவர்கள் கூறும் கருத்தும் கவனிக்கத் தக்கது. இந்த இந்திர ஜாலம் என்ற பதத்தை அவர்கள் 'ஐந்திர ஜாலம்' என்று மாற்றிப்பேசுகின்றனர், இந்திர என்றால் ஈசனும். [கடவுளாம்] அவர் செய்யும் [மாயா] ஜாலம் போல் செய்யும் வேலை ஐந்திர ஜாலம் என்றாயிற்றாம். இந்திர ஜாலத்தைப் பற்றி நமக்குத் தெரிவிக்கும் நூல்கள் தமிழில் "தவலை" போயிற்று என்ற வார்த்தையைத் "தலை போயிற்று" என்று

எழுதிய கதையாக இங்குமங்கும் விழுங்கிய கருத்தோடு காணப் படுகின்றன வாயினும், ஸம்ஸ்கிருதத்தில் அவை தெளிவாக அச்சிடப் பட்டிருக்கின்றன. அவை இந்திர ஜாலவித்தியா சங்கி சிரகம், உட்டீசம், ஜாலக் கடல் முதலியன. இந்திர ஜாலத் திறமையினால் ஒருவன் அடமாக [பலாத்காரமாக] சேனைகளைக் கொண்டு காட்டுகின்றான்; தேவாலயங்களை ஆகாய வீதியில் கொண்டு நிறுத்துகின்றான்; அதனைக் காண்போர் அவனது அற்புதத் திற மையை வியந்து மகிழ்கின்றனர்.

[இவ்விதக் கலையை மாதர் அறிந்திருக்குமாறு இன்ப நூலாசிரி யர் கூறுகின்றார். இதனால் விநோதப் பொழுது போக்கும் தற்பெரு மையுந் தான் பலன் என்று மட்டுமல்ல: உத்தம மாதரின் தற்காப் புக்கும் பயனுண்டாம்.

சீதை இதை அறியாததால் வருந்திய கதையை மகேந்திரஜாலக் குறிப்பில் காணலாம். ஞானியானபிறகும் சூடாலை தனது காதலனுக் குக் காட்டியயோகலீலைகள் எத்தகையன? அவை படிக்கவேண்டுமா?]

கோபுரந் தாங்கி: இது கோபுரங்களைத் தாங்கும் சங்கதி எப்படி யாயினும், கோபுரங்களில் வந்துமுளைத்து அந்தகோபுரமே தன்னைத் தாங்கும்படி செய்து கொண்டிருக்கின்ற இந்த மூலிகையைச் விழுதி யிலையுடன் சிறிது வாயில் போட்டு மென்று அடக்கிக் கொண்டால் கண்ணாடிகளையும் தின்னலாமாம். இந்திர ஜாலம் [கண் கட்டு] வித் தை செய்வோர்க்குஏறழிஞ்சி விதைத் தைலமுறை கட்டாயம் தெரிந் திருக்க வேண்டும். ஏறிக்கரைகளில் காணும்அழிஞ்சிகளில் இரண்டு வகையுண்டு. ஒன்று ஏறழிஞ்சி, மற்றொன்று இறங்கழிஞ்சி. நன்றாக பழுத்து நிலத்தில் விழுந்த அழிஞ்சி விதைகளில் சில மீண்டும் மரத் தை நோக்கி நத்தை போல் ஊர்ந்து சென்று ஒட்டிக் கொள்ளும். அதுதான் ஏறழிஞ்சி மரம். புதுக்கோட்டை சமஸ்தானம் நாரத மலை என்ற நார்த்தாமலைக் காட்டில் இது காணப் படுகின்றது. ஸ்ரீ சங்க ராசாரியாரும் இதன் அருமையைத் தமது நூலில் விளக்குகின்றார். இறங்கழிஞ்சி யென்பது மீண்டும்மரத்தில் சென்று ஒட்டாத சாதா ரண விதையுள்ளஅழிஞ்சிச் செடி. இதன் தைலம் இறக்கும் முறை இரண்டு வகைப்படும். ஒன்று இந்தவிதையைப் பொடித்து தட்டத்தில்

பாத்தி வெயிலில் வைத்து சுயமான தைலம் இறக்குதல். மற்றொன்று குழித் தைலமிறக்குதல். இவற்றின் முறை 20வது புத்தகத்தில் வெளி யிடப்படும்.

இந்த ஜால வித்தை யறிதல் பிறரால் ஏமாற்றம் பெறுதிருக்க நல் லுதவியாகும். கைச் சாலக்கும், பலவகை மருந்துகளின் குணச்செய லறிதலும் இக்கலைக்குத் துணை செய்யும். சித்த நாகார்ஜுனர் என்பார் இக்கலையைக் குறித்துச் சிறந்த நூலொன்று வரைந்துள்ளார். வேறு பல நூல்களும் வட மொழியில் உள்ளன. தமிழருக்கு அவை விரை வில் விருந்து செய்விக்கப் பெறும்.

21. கௌசுமார கலைத் தேர்ச்சி.

## Knowledge of Kauchumaracharya's art.

குசுமாராசாரியர் என்பவர் மாதர்க்கான கலைகளில் மிகத் தேர்ந்தவர். அவரால் செய்யப் பெற்ற ஒருதனிக்கலை கௌசுமாரம் எனப் படும்.

கௌசுமாரக் கலைத்தேர்ச்சி: தேவையா? ஒருவன் நல்ல பாக்கிய வானாக வாழ்தற்கு அவனது இனிய வாக்கின் நன்மையே காரணமா கும் என்றார் வராக மிஹிர ஜோஸ்யர். ருக் வேதமும் அது சரிதான் என்று தலை யசைக்கின்றது. குசுமாராசாரியரும் ஒரு ஆண் அல்லது பெண் சகல பாக்கியங்களும் பொருந்திய பாக்கியவான்—பாக்யவதீ என்று பேர் அடைவதற்கு இந்த நற்குணந்தான் ஆணிவேர் என்கின்றார். இந்த நற் குணத்துடன் வேண்டுமானால் சில மருந்து முறைகளையும் வசியமுறையாகக் கையாளுங்கள் என்றும் சிபார்சு செய்கின்றார். குமாரனோ, வாலிபனோ, கிழவனோ அல்லது சிறுமியோ குமரியோ கிழவியோ யாராயினும் 'முக வசியம்' என்பது தனி சங்கதி. அதை செயற்கையால் சிறிது அடையலாம் என்பதும் அடைய வேண்டு மென்பதுந்தான் இந்தக் கலையின் உத்தேசம்.

நல்ல எள்ளு, தக்கோலம் அசல் கஸ்தூரி, மஞ்சள், மரமஞ்சள் கடுக்காய், கோரோசனை (அசல் தான்) கோட்டம் இவை சமனெடுத்து ஆட்டு மூத்திரத்திலும் மோரிலும் சமன் விட்டு அரைத்து, "நீங்கள் வழக்கமாகத் தேய்த்துக் குளிக்கும் தைலத்தின் வழவழப்புப் போக"

இதையே உபயோகித்து வந்தால் உங்கள் உடம்பு ஒப்பற்ற காந்தி பெற்று மினுக்கும். இயற்கை விநோதமான குணங்களையும் செயல்களையும் „தற்கால மேல்நாட்டார் அறிந்து மகிழ்வது போல" முற்கால இந்திய மாதரில் சிலரும் அறிந்திருந்தனராம். உதாரணமாக" ஒரு கிழவி குமரியாக விரும்பு கின்றாள்" என்பதை நாமிருவரும் அங்கீகரிக்கலாம்! ஆனால், குமரி திடீரென்று கிழவியாக மாறும் முறை—மாற்றும் முறை—இருக்கின்ற தென்றால், அதனைக் குறித்து நாம் ஆச்சரியப்படாமலிருக்க முடியுமா? ஆச்சரியந்தான், அவ்வித முறைக்கு "ஆச்சரியமருந்துச் சேர்க்கைக்கலை" என்று நீளமாகவே பேர்வைப்பது பொருந்துமா? அவ்வாறு செய்தாலும் அது வைத்ய கலையில் சேருமன்றி தனிக்கலையாகாது. அக்காரணமாக இந்தக் கலையைப்பற்றிப் பிற நூலாசிரியர் எவரும் வேறு பேர் வழங்கவழியின்றி இதைக் கண்டுபிடித்த குசுமார ஆசாரியரின் பெயரையே போதுமெனச் சூட்டிவிட்டனர். அதுபோல் இதற்கு, கௌசுமார கலையென்றே நாமும் வழங்குவோம். குசுமார ஆசாரியர் மிகக்கைதேர்ந்த பேர்வழிதான்! காதலிக்கு ஒரு சக்களத்தி இருந்தால் என்ன மோசமாம்? உடனே அவள் தலை நிறைத்து அவளது அவயவங்கள் தளர்வுற்று அவளைக் காணும் பொழுதே தனது காதலனுக்கு வெறுப்பும் பயமும் உண்டாகும்படி செய்ய விரும்பினால், இந்தக்கலையறிவு அவளுக்குத் துணைசெய்யுமாம்!

இனி, காதலன் அயலூருக்கு—வெளிநாடுகளுக்குச் சிலகாலம் போய் வரவேண்டுமானால், அவனது காதலியை "யௌவனப் பருவத்தினின்று கன்னிப்பருவத்திற்கு மாற்றிவைத்துச் செல்வதாம்! இது என்ன விநோதக் கூத்தாயிருக்கிறது? காரண காரியங்களைத் தெளிவாக அறியும்வரை எல்லாம் விநோதந்தான்! மஞ்சளையும் சுண்ணாம்பையும் நன்றாக அறிந்தவர்க்கு அவ்விரண்டுஞ் சேரும் பொழுது உண்டாகின்ற சிவப்பு நிறத்தில் எவ்வித அதிசயமுந் தோன்றாதல்லவா?

கண்ணன் இந்தக்கலையில் தனக்குள்ள திறமையை விளக்க என்ன செய்தான் தெரியுமா? ஒரு கிழவியைப் பிடித்துக் குமரியாக மாற்றி—அனைவரும் கண்டு மோகிக்கத்தக்க சிறக்கியாகச் செய்து

விட்டாலும்! இந்த 64 இன்பக் கலைகளையறியும் இந்தியர்கள்—மாதர்கள்—சிறுவர்கள்—வாலிபர்கள் அத்தகைய விநோதங்களை யெல்லாம் வாழ்வின் பல நலனுக்கும் செய்து களிக்கலாம் போலும்! அது ஒரு அழகான காய கற்பந்தானே!

இந்தக்கலையறிவு காதலர் காதலிகள் இருவருக்கும் நல்லது; பிறருக்கும் நல்லது; அனைவருக்கும் நல்ல பாக்கிய வாழ்வை அளிப்பது. உதா: தினந்தோறும் குளித்து நீராடுதல், அழகாகத் தோன்றும் தூய ஆடையணிதல், பரிமளம் மிகுந்த—சுகந்த வாசனை வஸ்துக்களணிதல், எப்பொழுதும் நல்ல வேஷத்தோடு—முக வசீகரத்தோடு விளங்குதல், நல்லொழுக்கத்தைக் கைவிடாதிருத்தல், ஒரு நாள் விட்டு ஒரு நாள் எண்ணெய் தேய்த்துக்குளித்தல், முதலியன. [ஆடவர்கள் நான்கு நாளைக்கு ஒருமுறை க்ஷௌரஞ் செய்து கொள்ளுதல் முதலியனவாம்.] இவை நல்ல பாக்ய வாழ்வின் அறிகுறிகளாம். தங்களைத் தாங்களே பாக்கிய சாலிகளாக்கிக் கொள்ளும் முறைகள் பல இருக்கின்றனவாம் இந்தக் கலையில்.

22. ஹஸ்த லாகவம்:—விரைந்து தொழில் செய்யுங் கை வன்மை.—Dexterity of the hand.

தற்கால இந்தியச்சிறுமியர் சிறுவர் இருபாலரும், தேர்ந்த கைத்திறமையை "சுருக்கெழுத்து வரையும் மட்டில்" வளர்த்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். முற்காலக் கைத்திறமை எத்தகையது? அர்ஜுநன் இரு கைகளாலும் ஏககாலத்தில் சரந் தொடுத்துப் போர் செய்ததையும், ஸத்தியபாமை கைகேயி—விச்பலை என்னும் பெண் பாலர் செய்த வெற்றிக்கதையையும் அறிவூட்டுகின்றது.

கைச் சுறுசுறுப்பு: கத்தி சுழற்றுதல், சிலம்பம் பழகுதல் முதலியன கைச் சுறுசுறுப்புக்குரிய கலைகள். யுத்த காலத்தில் முற்கால இந்தியர்க்கு—இந்திய மாதர்க்கு—இக்கலை தற்காப்பிற்கும் (கற்பின் பாதுகாப்பிற்கும்) நாட்டைப் பாதுகாத்தற்கும் நல்லுதவி செய்ததாம். ராஜபுத்திர ராணியர் சரிதை போதிய உதாரணமாகும். இத்தகைய வீரம் இந்தியச் சிறுமிகளுக்கும் அவரது சந்ததியினர்க்கும் நாடி நரம்பில் ஊறிவளரவேண்டும். இக்கருத்தை மனத்திற் கொண்ட

திலகர் பெருமான் மகாராஷ்டிர தேசத்திலே 45 நாள் வரை நடை பெறும் விநாயகத் திருவிழாக் காலங்களில் "சிலம்பம்—கத்தி—விளையாடல்களையும்" சேர்த்திணைத்தாராம். வீரக் கத்திகொண்டு வைரவன் மகனை—தேவகணபதியை—விநாயகனை—வீரசந்ததிகள் போற்றுவது வழக்கத்திற்கு விரோதம் அன்று, நியாயமேயாம்!

சில சங்கதிகளை நமபிக்கையான ஜோஸ்யரிடம் கேட்டுத் தெரிய வேண்டுமென நீங்கள் விரும்பலாம். அதைச்சரியென்று நாமும் ஏற்போம். ஆனால் ஜோஸ்யரின் தொல்லையில்லாமல் நாமே தெரிந்து கொள்ளக் கூடிய குறி யொன்று நமது கடவுள் படைத்து (நமக்குக்) கொடுத்த இந்த மானிட கெடியாரத்திலேயே அமைந்திருக்கின்றதாம். அதுதான் சோம்பலும், சுறுசுறுப்பும்! சோம்பல் சொர்க்க வாசிகளைக் கூட விழுங்கி—தரித்திர ராக்கிவிடும். சுறுசுறுப்பு சொர்க்க இன்பத்தை நமது வாழ்வின் ஒவ்வொரு படிகளிலும் கொண்டு நிறுத்தும். அதை ஓரே வாக்கில் சொல்வதானல் "சோம்பல்தான்" வருங்கால அக்காள் (வறுமை) வாழ்வின் அறி குறி! சுறுசுறுப்பு அவளது தங்கை (திருமகளின்) விஜயத்தை முதலில் அறிவிக்கும் நற்குறி என்னலாம். "யானை வரும் பின்னே மணியோசைவரும் முன்னே" என்பார்களே, அதுபோல் தான் இவ்விரண்டு குறிகளும் முதலில் விஜயஞ்செய்வன. ஏன்? இந்தக் கைச் சுறுசுறுப்பு அந்தத் திருமகளுக்கு வரவேற்புமாலை செய்ய உதவுமாம். வருங்கால வாலிபர்கள் அந்த அர்ஜுனனைப்போல் சுறுசுறுப்போடு "வாழ்வில் வரும் சங்கடங்களையெல்லாம் எதிர்த்தழிக்கும் திறமையைப் பெற" இந்தக் கலை இன்றியமையாதது!

இந்தப் பெரிய காரியங்களெல்லாம் தற்கால வறுமை இந்தியாவில் வாழும் பெண்மணிகளுக்குக் கனவாகவும் தோன்றலாம். ஆனால் இந்தியப் பெண்மணிகளின் நித்திய சுக வாழ்வுக்கேனும் இந்தக்கலைத் திறமை—கைச்சுறுசுறுப்பு—இன்றியமையாதது தான். உதாரணமாக: 'வனஜாவுக்கு' வயது 16. வாசம்வண்ணாரப்பேட்டையில். அகத்துக்காருக்கு பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை. சம்பளம் 25 தானாயினும், அதிகாலையில் கட்டாயம் பள்ளிக்கூடம் போக வேண்டும். மாமி செவிடு! 'பால் வேண்டுமெ'ன்றால் தபால்காரன் பத்துமணிக்கு

வருவானென்பாள்! உடன்குடியிருப்போர் 9 தரக் காரர். குழாயில் ஜலம் சொட்டுச் சொட்டாக வருகின்றது, உலோபியின் கைப்பணம் போல! இந்த அழகில் வனஜாவுக்கு கைச் சுறுசுறுப்புக்கலைத் தேர்ச்சி வேண்டுமா, வேண்டாமா என்பதை நாமே முடிவு செய்யவேண்டியது தான்! ஐயோபாவம், சிறுகுடித்தனம்; எல்லாவற்றிற்கும் இந்தச் சமத்துச் சுறுசுறுப்பு கையிலிருந்தால் நல்லதல்லவா?

## 23. பாக சாஸ்திர உணர்ச்சி.—Cookery.

சுவையறிந்து சாப்பிடத் தெரிந்தவர் சுவையற்ற உணவைப் பிறர்க்கும் அளிக்க மனமொப்பார். அவர் பேசும் சொற்களிலும் சுவையற்ற வாசகங்கள் காணப்படா. பஞ்சபாண்டவர்க்குள் பீம சேனன் இக்கலையில் தேர்ந்தவன்! நளபாகத்தைக்கூட நாம் மறக்க முடியாதாம். நளனது பெயர் சொன்னாலும் நமது கலி விலகு மென்றார் ஒரு முனிவர். அத்தகைய அரசரும் உள்நுழைந்து வேலை செய்த சமையல்பிறை எத்தனை பரிசுத்தமானது? தேவர்க் கெல்லாம் அர்ப்பணஞ் செய்யத்தக்க உணவு தயாராகும் இடம்வெறும் பாகசாலையா? அல்ல: விருந்தளிக்கு உதவுகின்ற அந்த அன்ன சாலை யாகசாலைதான்! அந்தக் கலாசாலையில் பிரவேசிக்கும் ஆண் களுக்கு — பெண்மணிகளுக்குப் பத்துவகையிலும் பயிற்சி யிருக்க வேண்டுமாம். பலவகைக் கிழங்குமுதல்—முள்வகை வரையுள்ள கறிவகைகளின் குணங்களையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டு மாம். பாக சாஸ்திரம் நன்றாகக் கற்ற ஸ்திரீ புருஷர்கள் வாழும் குடும்பங்களில் வைத்தியருக்கு அநேகமாகப் பிரவேச அநுமதி கிடையாதாம்! "நமனுருக்கிங் கேது நாமிருக்குமிடத்தே" என்றார் தேரையர். சுவை நிறைந்த உணவளிக்கும் காதலிகளின் மீது அவரது கணவர்க்கு என்றும் மறவாத அன்பு பிறக்குமாம்! மிக அடக்கமான பேர்வழியான திருவள்ளுவர்கூட "அடிசிற்கு இனி யாளே! அன்புடையாளே" என்று வாய்விட்டுப் புகழ்கின்றார். முன்னர் ஓரிடத்தில் சுருக்கமாகத் தெரிவிக்கப் பட்ட விக்கிரமாதித்தமன்னன் தனது நாட்டில் விளங்கும் கலா வல்லவர்களையும் ரசிகர்களையும் கண்டு பிடிப்பதில் வெகு ஜாக்கிரதையுள்ளவனாம்! ஒருநாள் ஒரு போஜன சுகி அந்த மன்னனைக் காணவந்தான். அவனுக்கு அறுசுவை அன்னம்

UNIVERSITY, MADRAS

தயாரித்து அமுதம் போலும் விருந்து செய்விக்குமாறு மன்னன் கட்டளையிட்டான். உணவைக் கையிலெடுத்த விருந்தாளி இந்த “இடுகாட்டு அரிசிதானா உங்களுக்குக் கிடைக்க வேண்டும்” என்று ஒரு கேள்வி போட்டானாம்! உண்மையை விசாரித்த பொழுது அவ்வரிசி இடுகாட்டுப் பாகத்தில் விளைந்த தெனத் தெரிந்த மன்னன் போஜன சுகிக்குத் தக்க சம்மானஞ் செய்தனுப்பினானும். மில்லரிசியைத் தவிர்த்து (ஒழித்து!) குத்தரிசியை உண்போர்க்கு மாத்திரமே உணவின் சுகம் உயர்வாகத் தெரியலாமாம்.

இனி, ஆரியவித்தியா ரகசியங் கூறுவதாவது— பாகசாஸ்திரம் அறிதல்: அல்லது விதவிதக் கறி கூட்டு சாம்பார் உண்பொருள் தின்பொருள் செய்யுந்திறமை; இந்தக்கலை உருவத்தில்கூட சமையல் கட்டுவரை நீண்டிருக்கின்றது! நாவுக்கினிய நாலுவித ஆகாரமும் வேண்டுமானால், சமையல் பிறைப் பக்கம் கவனித்துத்தான் ஆக வேண்டும். ‘போனகம் இருக்கின்றசாலை வேண்டுவ புஜித்திற்கிருக்கும்’ என்றார் தாயுமானாரும்.

நால்வகை யுணவுகளாவன: ‘உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன’ என்று இலக்கணப்படியே இவைகளைக் கூறுவோம். உண்ணத்தக்க அன்னமும் அதற்குத்துணை—வியஞ்சனமான—காய்கறி முதலானவையும் ‘உண்பன’வாம். முன் தெரிவித்தவாறு இந்தக் கறிகாய்கள் பத்து விதமாக விவரிக்கப்படுகின்றன.

(1) மூலப்பொருள்கள் (உருளைக் கிழங்கு முதலிய கிழங்கு வகைகள்.)

(2) இலைக்கறிகள் (கீரை முதலியன)

(3) முட்காய் வர்க்கங்கள் (தூதுளை முதலிய முள்ளுள்ள இனங்கள்)

(4) நுனிக் கறிகள் (புளியங்கொழுந்து வேம்பின் தளிர் முதலியன)

(5) பழக் கறிகள் (பறங்கி, பூசணி முதலியன)

(6) தண்டுக் கறிகள் (சேம்பின்மட்டை முதலியன)

(7) கிள்ளுக்கீரைகள் (கிள்ளுந்தோறும் வளரும் பசளை போன்றன).

(8) மேல்தோல் பட்டைக்கறிகள் (தேவதாரு, சன்ன லவங்கப் பட்டை முதலியன)

(9) பூக்கறிகள் (வாழைப்பூ அகத்திப்பூ முதலியன)

(10) முள்கறிகள் (பலா முதலியன) இவைகளின் பேதங் களையும் சுகாதார முறையில் இவற்றாலுண்டாகும் நன்மைகளையும் அறிதல் அவசியம். அவ்வாறு அறிந்து பெண்கள் செய்யும் உணவு பொருள்கள் எவையோ அவைகளைத்தானே ஆண்மக்கள் உண்ண முடியும்? "தாயைப் போல் பிள்ளை; நூலைப்போல் சேலை; உணவைப் போல்புத்தி! புத்தியைப்போல் அதிருஷ்டம்" என்றால், அத்தனை விதமாயும் காதலர்களைக் கைவசப்படுத்தும் கைத்திறமையும் பெரு மையும் காதலிகளிடம் அடங்கிக்கிடக்கின்றதல்லவா?

இனி, அதிரசம், வடை முதலியன 'தின்பன'வாம். கேட்டால் நன்னய்ய கவியின் பாரதம் கேட்க வேண்டும், தின்றால் தமிழன் செய்த வடையை தின்னவேண்டும்' என்பது ஒரு தெலுங்கக் கவிமொழி. அவருக்கு எந்தத் தமிழர் அத்தகைய வடை செய்தளித் தாரோ நாமறியோம்! விளாங்காய்ப் பச்சடி போன்றவை 'நக்குவன' என்ற பாகத்தில் சாரும். விளாங்கனியின் இனிமையும் குணமும் நீதிவினோதக்கதை * என்ற புத்தகத்தில் பார்க்கலாம். பருகத்தக்க இனிய பானங்களாக பாக சாஸ்திரத்தில் பல கூறப்படுகின்றன. அவற்றில் ஒரு ரசமுள்ள பானத்தை மேலேவிளக்குவோம். (இங்கு கூறத்தக்க அருமையான உணவு முறைகள் அடுத்த பாகத்தில்கூறப் படும். அதற்குள் போதிய காய்கறிகளை படிப்போர் தயாரித்துக் கொள்ளலாம்!)

பதார்த்த குணமறிதல்: நாம் வெளியே உபயோகிக்கின்ற பாத்திரங்களும் படுக்கை, இருக்கை (ஆசனம்) முதலிய சாமான்களும்

---

* இந்தப் புத்தகத்தில் 103 கதைகளுண்டு. விலை—6 அணா. படிக்கப்படிக்கத் தெவிட்டாத இன்பரசம். வேண்டுவோர் நமது ஆபிசுக்கு முன்பணமனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளே தின்பண்டமாக உபயோகிக்கின்ற வஸ்துக்களும் ஆகிட இவையாவும் பதார்த்தங்களெனப்படும். பித்தளைப்பாத்திரத்தில் சோறு சமைத்தல் பித்தமளிக்கும். நாம் உபயோகிக்கின்ற வேங்கைமரம், சந்தனமரம், தேவதாரு, மருது, தேக்கு, குமிழ், அகில் போன்றன உத்தம மரங்கள். தூங்குமூஞ்சி மரம்போன்றவை ஆசனங்களாகவோ கட்டில்களாகவோ உபயோகிக்கப்பட்டால் அதே குணந்தான் தருமாம். ஏழைகளுக்கு தர்பப்புல்லினலான ஆசனம் நன்று; மூலாசன ரோகங்கள், அண்டவாயு முதலியன போகுமாம்.

பெண் யானைத்தோல் பெரியரோகங்களையும் போக்கும் என்றார் ஒரு முனிவர். "மான்தோல் மன அமைதிவளர்க்கும்; புலித்தோல் (துறவிகளாயின்) பேரின்பமும் தரும்; தர்ப்பத்தினலான ஆசனம் எவருக்கும் நல்ல ஆரோக்கியமாம்: சித்திரகம்பளம் யாவர்க்கும் நலம்". (வியாசர்).

இனி ஆறுவகைச் சுவைப் பொருள்களையும் கூடுதல் குறைதல் சமமாகச் சேர்த்தல் என்ற முறையினல் நளமகாராஜன் 18 வித வடகம் செய்தானென்று ஆரியவித்யை என்னும் தெலுங்கு நூல் தெரிவிக்கின்றது.

அரிசியில் 2000 வகை ஆசியாகண்டத்தில் மட்டும் உண்டாம். 1000 வகை நெல் கோவை விவசாயப் பண்ணையிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாம். ஒரு வைத்தியரையுங்கூட வைத்துக்கொண்டு, அவற்றின் குணங்களை (பண்டைக்கால பதார்த்தகுணபோதினி யுணர்ந்தோர்) கண்டு வெளியிட்டால் நாட்டுக்கு நலம்:

வேறு ஐவகை யுண்டி:— கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல் மெல்லல் என்பன.

அறுசுவை (ஷட்ரசம்):—உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு துவர்ப்பு, புளிப்பு என்பன.

சமையல் நன்றாக அமைந்திருந்தாலும் வயிறு நிறைய போஜனஞ் செய்யத் தெரிந்து கொள்வதும் பாகசாஸ்திர— சுகாதாரங்களின் ஒரு அங்கமாம். "சில அந்தணர்கள் பருப்பும் நெய்யும் சேர்ந்த போஜனம் தங்களுக்கு வயிறு நிறைய அளிக்கும்படி உத்தரவாக

வேண்டு" மென்று போஜ அரசனிடஞ்சென்று கேட்ட பொழுது காளிதாசன் "கார்த்திகை மாசத்து எருமைத்தயிரையும் சேர்த்துக் கேளுங்கள்" என்று ஞாபகப்படுத்தினும்!

பருப்பும் நெய்யும் சேர்ந்தஉணவின் மேல் எருமைத்தயிரும் கட்டியாக விழுந்தால் வயிறுவிண்ணிட்டுப் போம். அப்பொழுது தான் பசியிருந்த இடந்தெரியாது, என்பது காளிதாசனது குஷ் வாக்கு!

மாதர்க்குரிய 64 கலை நூலின் உரையாசிரியரான ஐயமங்களர் என்பார் இந்தக் கலையைக் குறித்துச் சில குறிப்புகள் தருகின்றார். அவை வருமாறு:—

பாக சாஸ்திரம்:—உணவு பொருள்களாகிய வஸ்துக்களின் உற்பத்தி, அவற்றின் லட்சணங்கள், குணங்கள், குற்றங்கள், சுவைகள், அவைகளைப் பக்குவஞ் செய்யும் முறைகள், உண்ண வேண்டிய விதங்கள் இத்தனையும் தெரிவிப்பது பாகசாஸ்திரம்.

உணவில் உபயோகிக்கத்தக்க பொருள்களையும் அவற்றின் குணங் களையும் அறிய வேண்டும். அவற்றின் மாதிரிக்காக இங்கு சில கூறுவோம்.

நரை வாராதீ வயதை நிருத்துபவை: நெல்லிக்காய், கடுக்காய் (ஊறுகாயும் நலம்,) சீனுக்கற்கண்டு, லவங்கப்பூ முதலியன.

திரையை மாற்றி — வாலிபந்தருபவை: உருக்கு பஸ்மம், அயக்காந்த பஸ்மம் முதலியன. சாதுரியப் பேச்சு வன்மை அளிப்பவை: பச்சைக் கற்பூரம், வசம்புப்பொடி, தங்க ரேக்கு முதலியன. தேக காந்தி தருபவை: எலிமிச்சம் பழம், இஞ்சி, பசு வெண்ணெய், ஓமம், கருவேப்பிலை, கற்பூர தைலம், கஸ்தூரி, குங்கு மப்பூ, கோரோசனம், புளியம்பூ, ஜாதிக்காய், பொன்னுவாரை, கோரைக்கிழங்கு, தித்திப்பு மாதளை, உள்ளி, பெரு நெருஞ்சி, வெந்த யக்கீரை, சுக்கு முதலியன.

துர் நாற்றம் நீக்குபவை: அகில், கிற்பூரம் (ஆரத்திக்கு உப யோகிப்பது) மருக்கொழுந்து, கோரை கிழங்கு முதலியன.

## பருவங்களுக் கேற்றவாறு பருகத்தக்க பல நீர்களாவன:—

| | பருவங்கள். | மாதங்கள். | பருக வேண்டிய நீர்கள் |
|---|---|---|---|
| 1 | இள வேனில் (வசந்த) காலம் | ... சித்திரை—வைகாசி | ... ஓடை நீர் |
| 2 | முதிர்வேனில் (கிரீஷ்ம) காலம் | ... ஆனி—ஆடி | ... அருவி நீர் |
| 3 | மழை (வர்ஷ) காலம் | ... ஆவணி—புரட்டாசி | ... பூமியிலுள்ள ஏரி—குளங்களின் நீர் |
| 4 | கார் (சரத்ரிது) காலம் | ... ஐப்பசி—கார்த்திகை | ... மழைத் தண்ணீர் |
| 5 | கூதிர் (ஹேமந்தம் இலை யுதிர் காலம்). | மார்கழி—தை | .... ஆற்று நீர் |
| 6 | குளிர் (சிசிருது) காலம் | ... மாசி—பங்குனி | ... கிணற்று நீர் (ஊற்று நீர்) |

குறிப்பு:—இந்திரியக் கட்டுக்காக ரசாயனம் உட்கொள்வோர் "ஹம்ஸ ஜலம்" உட்கொள்ள வேண்டும். ஹம்ஸ ஜலம் என்றால், பகல் முழுதும் சூரிய கிரணம்பட்டு, இரவிலே சந்திர நட்சத்திரங்களின் ஒளி—கூடுமாயின் அகஸ்தீய நட்சத்திரத்தின் தனிப்பிரகாசம்—நன்குதாக்குமாறு வைக்கப்பட்ட ஜலமாம். ஆவணி புரட்டாசியில் அகஸ்திய நட்சத்திரத்தை இரவிலே காணலாம். அது உதய மானவுடன் சகலநீரும் பரிசுத்தமாகின்றதெனக் காளிதாசனும் கூறுகின்றார். மழை ஜலத்தை அதே சுவையில் பருகலாம். பிறஜலங்களில் இனிய பரிமளமலர்ப் பொடிகளிட்டு, வடிக்கட்டி இன்பமாய்க்குடிக்கலாம் அதன் பெயர் "பானபோகம்" எனப்படும்.

மனோஹர பானம் அல்லது மனம் வரை மணக்கும் வாசனைப் பொடி: 1 இலவங்கம் (கிராம்பு) 2 வெட்டிவேர் அல்லது இலாமிச்சை வேர், 3 பச்சைக் கற்பூரம், 4 குங்குமப்பூ, 5 அகில் 6 சந்தனம், கல் மத்து, 8 நெல்லி முள்ளி, 9 தக்கோலம் (கச்சோலம் கலம்) 10 பாதிரிப்பூ. இவை சம எடை எடுத்து ஜில்லென்றிருக்கின்ற பானைத் தண்ணீரில் போட்டுவைத்தால் அதன் மணமும் குணமும் சுவையும் ஜிலுஜிலுப்பும் ஆகா! எவ்வளவு குஷியாயிருக்கும்!

24. தையல் வேலை.

## Sewing (needle work and embroidery)

பெயராலும் இதுமாதர்க்குரிய கலை யென்றே தெளிவாகின்றது

வட மொழியில் இதை ஊசிநூல்வேலை என்றார் ஒருவர். ஆனால் தமிழர்கள் மிகப்புத்திமான்கள். இந்தக்கலைக்கு அவர்கள் என்ன பெயரிட்டிருக்கின்றார்கள் என்பதை கவனியுங்கள். தையல் வேலையாம்! சரி, இது தையலார்க்கு உரியது தானே! மெல்லியலாரான தையலார் நிழலிலமர்ந்து தைக்கும் வேலையினால், ஆடவர்க்கு வரும் பொருள் அத்தனையும் லாபம். இத்தையல் வேலை மூன்று விதமாகக் கூறப்படுகின்றது.

(1) சொக்காய் ரவிக்கை முதலியனதைத்தல் கூட்டித்தைத்தலாம்.

(2) துண்டு துண்டாகக் கத்தரித்துத் தைக்கப்படுகின்ற தையலுக்கு இழைப்புத் தையல் என்று பேராம்.

(3) கீழ்விரிப்பு முதலியன தைக்கும் தையலுக்கு அமைப்புத் தையல்என்று பேராம்.

தையல் வேலையில் ஈடுபட்டோர்க்கு ஆயுள் அதிகம் வளருகின்றதாம். அது வளராவிடினும் மூச்சு மெதுவாகச் செல்வதால் அதன் 'செலவு சுருக்கத்தையே' ஆயுள்பெருக்கமாகவுங் கூறலாம். மனிதர் நாள் 1க்கு 21600 மூச்சுக்காற்றுகள் விடுகின்றனர்.

நாதசுரம்—புல்லாங்குழல் வாசிப்போரும், உறக்கப்பேசிப் பேசிப் பிரசங்கிப்போரும் பள்ளிக்கூட உபாத்தியாயர் உபாத்தியா

வினிகளும் தபால் மூட்டையைத் தலையில் தூக்கி ஓடும் ரன்னரும் இந்த மூச்சுக்காற்றை அதிகஞ் செலவிடுவோராவர். இவர்களில் 'செலவுக்கேற்ப'-மூச்சைச் சேகரித்துக் கொள்வோரும் பிராண சக்தியை வளர்க்கும் புஷ்டியான ஆகாரங்களையுட்கொள்வோருமன்றி, மற்றவர்கள் காசம் முதலிய ரோய்களுக்கு ஆளாகின்றனர். ஜன கணிதத்தினர் தையல்வேலை செய்வோர் அதிக ஆயுளுடையவர் களாகவே கண்கிடுகின்றனர். ஆகவே, தையலார் தையல் வேலையில் அதிகம்முனைவது தமது ஆயுளை "இன்ஷியூர்" செய்து லாபம்பெறு வதுபோலாம்!

தையலார்க்கான ஞாபகக்குறிப்பு: 'திங்கள் கிழமை ஆடை தைக்கக்கூடாது' என்ற கருத்தை ஒரு கவிராயர் தமது காதலியை ரோக்கிக் கற்பனையாகக் கூறுகின்றார்: "சோமனுக்குத் தையல் அதிகம்" என்று.

இதன் கருத்து யாது? சோமனுக்கு (சோமன்என்று பெயருள்ள வனுகிய சந்திரனுக்கு) தையல்=பெண்கள் (தினந்தோறும் அவன் அடைய வேண்டியதாயிருக்கிற 27நட்சத்திரங்களும்,) அதிக மாதலால்(!) அவனது பெயர்கொண்டதான திங்கள்கிழமையில்ஆடை தைத்தால் அது போல் பல தையல் சேர்த்துக்கட்டிக் கொள்ள வேண்டிய ஒருவகை யோகம் வரும்; அன்று தையாதே, என்பதாம்.

ஞாயிற்றுக் கிழமை பழையஆடையும்-புடவையும் ரவிக்கையும் தைக்க, வெகு சீக்கிரத்தில் புதிய ஆடைகளும் புடவைகளும் கிடைப்பதைக் காணலாமாம் .சனிக்கிழமை யன்று கிழிக்கலாமல்லாது தைக்கக்கூடாதாம். இது தையல் சாஸ்திரம். தையல் தொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டவர்களை இவ்விதி பாதியாது!

25. நூல் கொண்டு காட்டும் வேடிக்கை.

Performing wonderful works with the help of thread—like tele-speech etc.

நூல் கண்டைக் 'குழல்களில் இட்டு' முறிந்தது போல்காட்டுதல், சேர்ந்தது போலும் ஜாலம் செய்து அப்பால் இயற்கையாக எடுத் தளித்தல் முதலிய விளையாடல்களும் இக்கலையில் சேர்ந்ததென்பர்

தெலுங்க நாட்டார். பொம்மலாட்டம் என்ற கலை இதனைச் சார்ந்த தெனவும் தமிழ்நாட்டினர் கருதுகின்றனர். தமிழ் நாட்டின் நூல் கோலாட்டம் பிற நாட்டார்க்குத் தெரியுமா? புதுக்குடி சாமிநாதக் குருக்களின் பொம்மலாட்டச்சாதுரியந்தான் வருமா?

26. வீணை டமருகப் பயிற்சி,

Learning Veena and tabour a small drum shaped like horn-glass.

வீணையும் உடுக்கும் வாசிக்கத் தெரிதல் வீணை டமருகப் பயிற்சியெனப்படும். வீணை சாமண்ணா ரவிவர்மாவின் "சரஸ்வதி வீணையை" படத்தில் பார்த்த பொழுது தமக்குத்தான் காது சிறிது மந்தமாகி விட்டதோ என்று கவலைப்பட்டாராம். வீணை அத்தனை நுட்பமாக (செவி கொண்டு கேட்கத்தக்க) மெல்லிய நாதம் அக்ஷர அக்ஷரமாகப் பேசுவதாம்! ஆனால், உடுக்கு மிகமிகக் கடினமான தோல் வாத்தியம்! 'அடி' சரியாக விழுந்தால் தான் சரியானபடி நாத எழுத்துப் பேசும்! அதை எப்படியோ சரிபடுத்திக்கொண்டு சிதம்பரம் நடராஜ ஆசாரி ஒரு 14 சத்தத்தில் வியாகரண (இலக்கண) சாஸ்திர முழுதை யும் வெளிப்படுத்தி விட்டார்! வல்லவனுக்கு எடுத்த தெல்லாம் ஆயுதந்தான்! அந்த ஒரு கூத்தாடிக்காரன் தனது உடுக்கில் ஒரு நாள் மாலையில் ஒரு மாதிரி! (யார்?—கூத்தாடி நடராஜன் தான்!) போட்ட சத்தத்தை இன்னதென்று பொருள் செய்து கொள்ள இயலாது, தேவரும் முனிவரும் விழித்தபொழுது 'ஆதிசேஷன் கூட' வர வேண்டிய தாயிற்றும்! அம்மட்டோ? அவர் அங்கு வந்து ஆயிரக் கால் மண்டபத்தில் திரை போட்டு 'டிகானு' செய்து கொண்டு இரண் டாயிரம் நாவினும் பொருள் விளக்கித் தீரவேண்டியதாகி விட்டதாம். நடராஜ ஆசாரியின் உடுக்குச் சத்தம் அத்தனை கருத்துடையதாம். அந்த வியாகரண சாஸ்திரம் கடினமானதென்றால் உடுக்கும் கடின மானதுதானே! ஆனால் வீணையின் ஓசை மிக மிக மெல்லியதே! வீணை யின் நரம்பை மீட்டும் ஒரு கை 'சிறு பருத்திக்கொட்டைக்குள் அடங்கி விடுகின்ற' டக்காமஸ்லினில் சொகுசான வேலை செய்த கைபோல்— வெகு நாசுக்காக இழைய வேண்டும். அதற்குத் தகுந்தது மெல்லிய லார்கைதானும்! உடுக்கில் பழகவேண்டிய கை ஆதிகால முறட்டுக்கதர்

நூலில் தேர்வடம் திரித்துப் பழகும் கை போன்றதாம்! எனவே, இத்தகைய முறட்டு வாத்தியத்தில்—முறட்டு நூல் கயிறில்—பழகிய கைகொண்டு 'மெல்லிய வீணை நரம்பில்' டக்காமஸ்லீன் இழைப்பு வேலை செய்து காட்ட வேண்டுமென்றால், அதற்கு எத்தனை திறமை வேண்டும்? அது இயற்கையாகவே முற்கால இந்திய மாதர்க்கு அமைந்திருந்தது, அமைந்திருக்க வேண்டும் என்றார் வாத்ஸ்யாயன உபாத்தியாயர்! அதாவது "முறட்டு" உடுக்கைக் கையிலெடுத்தாலும் கச்சேரியில் ஒரு கைவரிசை காட்டவேண்டுமாம்! உடனே "மெல்லிய" வீணையையளித்தாலும் இணையற்ற மெல்லிய நாதம் எழுப்ப வேண்டுமாம். இந்த இரண்டு திறமையும் ஏககாலத்தில் வெளிப்பட வேண்டுமானால், அத்தகைய மாதர்களின் திறமை வியக்கத் தக்க தன்றோ?

27. பிரேளிகை—விடுக்கும் பிதிர்—Riddles.

இது விளையாட்டின் பொருட்டும் விநோதார்த்தமாகவும்—சிங்காரத்தின் பொருட்டும் வாதத்தின் பொருட்டும்—பயன்படும் கலை. ஒரு உட்கருத்தை மனத்தில் வைத்து அதை மறைத்து வெளிப்படையாக வேறு ஒரு அர்த்தமுந் தோன்றப் பேசும் சாதுரிய மொழி. "தாமரை மலர் போலும் அழகிய கண்ணுடையாய்! உன்னிடமிருந்து பருகத்தக்க இனிய நீரைப்பருக விரும்புகின்றேன்; ஆனால், நீ அளிப்பதனால் நான் பருகவிரும்பேன்! நீ அளியாவிடில் நானே சுதந்தரமாகப் பருகிக் கொள்வேன்" இங்கு தனது காதலியின் அதரபானத்தை விரும்பிக் குறிப்பாக—மாறுபொருளாக—அக்காதலன் பேசுகின்றான்! இதை "பிதிர் விடுக்கை" யென்பர் தமிழர். பல இனிய பிதிர்க்கவிகளை எங்கள் 27வது கலைப் பிரகரத்தில் விளக்குவோம்.

28. ஈற்றெழுத்துக்கவி கூறுகை. ஒருவர் கூறிய பாட்டின் கடையெழுத்தை முதலாகக் கொண்டு பிறர் கவியை ஒப்பித்தல்.

Exhibition of memory in which, after one has recited a verse, another must recite a verse beginning with the last letter of that verse or the letter next to it.

அந்தாதி கூறிப்பழகும் சிறுவர் சிறுமிகளுக்கு படிப்பில் ஞாபகசக்தி அதிகமாவதோடு 'திடீரென்று ஒருவர் கேட்கும் கேள்வி

களுக்கு மகாத்மா காந்தியைப்போல் விடையளிக்கும் சக்தி அமையும். பள்ளிக்கூடங்களில் இத்தகைய கலைகளில் போட்டி முறை அமைத்தல் மனத்தத்துவ சாஸ்திர முறைப்படி (மாணவர் மணவிகளின் மனப்) பயிற்சிக்கு மிக மிக நலம். உதாரணமாக: ஒரு சிறுவன்

"நெடுமால் திருமருக! நித்தன் மதலாய்!
கொடுமா வினையறுக்குங் குன்றே—தடுமாறுது

எண்ணும் எழுத்தும் முப்பதுவாயும்
என் சித்தத்தே நிற்கப் பண் உத்தமனே பணிந்து

என்ற பிள்ளையார் பாடலைக் கூறுவதாக வைத்துக் கொள்வோம். உடன் அவனது சகோதரி—(சிறுமி)

" துதிப்போர்க்கு வல்வினைபோம்; துன்பம்போம்! நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித் தோங்கும்

நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
ஷஷ்டி கவசந்தனை.

என்ற முருகன் பாடலால் விடையளிக்கவேண்டும். முதல் பாட்டின் அந்த (கடைசி) யெழுத்தென்ன? 'து' என்பது. அதையே ஆதியாகக் கொண்ட பாடல் மூலமாக இச்சிறுமி விடையளித்தது சரியல்லவா? இது தான் அந்தாதி சொல்லும் முறை.

29. நெருட்டுச் சொல் தொடரமைக்கை.

Bombastic style.

நெருட்டுச் சொற்றொடரமைத்தலைக் குறித்து ஒரு உதாரணக் கவி வடமொழில் உண்டு. ஒரு காதலனும் காதலியும் மாலை நேரத்தில்—குளிர்ந்த காற்றில்—உலாவச் செல்கின்றனராம். அப்பொழுது காதலன் ஆகாயத்தை உற்று அண்ணாந்து—பார்த்தானும். அங்கு "மரத்தின் பகைவனது கொட்டத்தை யழிக்கும் பொருளைத்தன்னுள்ளே தாங்கிய ஒன்று" மிகக்கக் கண்டு மனம் மகிழ்ந்தவனாய், காதலியை நோக்கி இன்ப வாக்கு வழங்கினானும்.

இங்கு கூறிய வாக்கின் பொருள்யாது? "மரத்தினது பகைவன் அக்கினி; அதன் கொட்டத்தை யடக்குவது தண்ணீர்; அதைத்

தன்னுள்ளே தாங்கி மிதப்பது மேகம்! எனவே நீருண்டமேகத்தைக் கண்டான் காதலன்" என்று தலை சுற்றிப் பேசுகின்றார் இக்கவி. இது தான் நெருட்டுச்சொல் உதாரணம். இந்தக் கலைத்திறமையை விளக்கும் பல விநோதப் பாட்டுகள் 29வது கலைப் பிரகாரத்தில் காணலாம்.

30. சுவை தோன்றப் பண்ணுடன் வாசித்தல்.

Reading with a musical tone, so as to be pleasing to the hearers.

புஸ்தகம் படித்தல்: கேட்போர்க்கு இனிதாகப்படித்தல் ஒரு சிறந்த கலை. பண்ணுடன் வாசிக்கப் பழகுதலும் இக்கலையைச் சார்ந்ததுதான். பாடும்பொழுது—புத்தகம் படிக்கும்பொழுது—பயந்து நடுங்குதல், எழுத்துப் புலப்படாது அறைகுறையாக உச்சரித்தல், மூக்கின் நுனியில் சத்தந் தோன்ற 'ஙொணஙொண' என்று வாசித்தல், காகங் கரைவது போல் மண்டை வெடிக்கக் கத்துதல்—அபஸ்வரம்! அவசரம்—கால அளவில்லாது வாசித்தல் முதலிய 14 குற்றங்கள் இல்லாது, அழகாக—இனிதாக—கம்பீரமாக வாசிக்கவேண்டுமாம். குரல் இனிதாக அமையாதவர்களைப் பிடித்து 'இனிதாக வாசியுங்களேன்' என்றால், குருடனைப் பிடித்து அரசனைப்போல் விழி என்பது போலாகுமல்லவா என்பர் சிலர். ஏன்? குயிலினும் இனிய குரலுண்டாகும்முறையை எங்கள் "காந்தர்வ வேதக்கலையில்" கண்டு கொள்ளலாமே!

நாம் படிக்கின்ற புஸ்தகம் சிங்கார ரசத்தில் அல்லது ஹாஸ்யச் சுவையில் அமைந்திருந்தால், அதை பஞ்சம ஸ்வரத்திலும் மத்திம சுரத்திலும் படிக்கவேண்டுமாம். வீர, ரௌத்திர, அற்புதச்சுவைகளை விளக்க ஷட்ஜமும் ரிஷபமும் சிறந்ததாம். காந்தார நிஷாத சுரங்கள் கருணரசக் கதைகளுக்கு எடுத்ததாம். இதுபோல பிற சுரங்களும் பிற ரசங்களுக்கு உரியனவாம். இப்பொழுது பெரும்பாலும் கருண ரசத்திற்கு நீலாம்பரி, ஆனந்த பைரவி முதலியவை உபயோகிக்கப் படுவதுடன் சிங்காரச்சுவைக்குத் தோடியும், மோஹனமுந்தானே முன்வந்து நிற்கின்றன?

இனி, நவரசங்களையும் அநுசரித்துத்தாளங்களும் வேற்றுமைப் படும். அவற்றை 30வது கலைப் பிரசுரம்விளக்கும்போலும்!

31. நாடகம், வசனம் இவற்றின் உணர்ச்சி.

Knowledge of Drama and prose.

நாடகம்: ஐம்புலன்களும் அழகாக அமைந்த மனிதருக்கு ஆபரணம் போன்றது இக்கலை. மூன்றாவது கலையிற்குறித்த பாவம் முதலிய 18வகைச் செய்கைகளையும் பிம்போகம் முதலியவற்றையும் அறிதல் இக்கலையின் ஜீவனும்.

பாவம்: அதாவது, பிறந்தது முதல் அதுவரை கண்டறியாதது போலும் 'அப்பொழுது புதிதாகத் தோன்றுகின்ற மன உணர்ச்சிக்கு' பாவம் என்று பெயர். "அதே காற்றுத்தான்! அதே மல்லிகை மணந்தான்! அதே பெண்தான்! ஆனாலும் அப்பருவகாலத்தில் பார்க்கும் பொழுது, அதது புதிதாக—வேறு வேறாகவே தோன்று கின்றது" இந்த உணர்ச்சியை மனதினால் அநுபவிப்பது தான் 'பாவம்' என்று கூறப்படும். இதை அபிநயப்பது நடிகரின், திறமையில் அடங்கியதாம். இனி, பிம்போகம்: உண்மையாகக்காதலன் கொண்டு அளிக்கின்ற பொருள் தனக்கு மிகவும் விருப்பமுள்ளது தான் என்றிருந்தாலும், யௌவன கருவத்தினால் அதை வேண்டாமென்று ஒதுக்குதல்— தடுத்தல்— பிம்போகம் என்று கூறப்படுகின்றது. இதோ ஒரு காதலனைக் குறித்து அவனது உயிர்த்தோழன் செய்யும் ஆசி மொழியைக் கேளுங்கள்: "உனது நற்குணங்களைப் பின்பற்றி நடந்துக் கொள்ளும் இயல்புள்ள நற்குண வதிகள் தானாயினும், எவர்கள் உன்மீது தோஷங்களையே வேண்டுமென்று பிடிவாதமாகத் தேடுகின்றனரோ, எவர்கள் உனக்காகத்தமது பிராணனைக் கூட அளிக்த்கதயாராக இருப்பினும்' உன்மீது காதல்பார்வையைச் செலுத்தா திருக்கின்றனரோ, எந்தவஸ்துக்களின் மீது அவர்களுக்கு மிக மிக விருப்பமிருப்பினும் நீ அளிக்கின்ற காரணத்தால் மறுக்கின்றனரோ அத்தகைய—மூன்று உலகங்களிலும் காணப்படாத—விசித்திர சுபாவம் வாய்ந்தஉனது பிணங்கிய காதலிகள் உன்மீது அநுக்கிரகம் செய்வார் களாக." இந்த ஆசி பெற்ற பிறகு, காதலனின் குறைகள் யாவும் தீரக் கடவன! இந்த செய்கையையும் நடிகர் நடித்துக் காட்டவேண்டும்.!

இத்தகைய நாடகக்கலையை பரத முனிவர் தமதுநாட்டிய சாஸ்திரத்திலே அழகாக விவரிக்கின்றார். அதனைத் தமிழன்பர்களும் கலை நேயர்களும் படித்தல் நலமன்றோ? இயல் இசை நாடகம் என்ற முத்தமிழில் நாடகத் தமிழ் தமிழ்மொழிக்கு அமுதச்சுவை யளிப்பதாம்.

ஸ்ரீ சுந்தரம் பிள்ளை யவர்களின் மனோன் மணீயம் நம் காலத் தமிழரின் தேர்ச்சிக்கு ஒரு சிறு உதாரணமாம்!

இங்கு வடமொழி முறையில் சிறிது ஆராய்வோம். நாட்டியம் இரண்டுவிதம். ஒன்று தேவலோகத்திலோ அல்லது பூலோகத்திலோ பாதாளத்தில் தானே வசிக்கும் ஒருவரது வாழ்வுச் செயலைப் பின் பற்றி நடிக்கும் நடிப்பை நாட்டியம் என்பர். நடிப்போரது திறமையை—நாட்டிய சக்தியை—அநாட்டியம் என்பர். (அதாவது நடிப்போர் தமது இஷ்டம்போல் உபயோகித்துக் கொள்ளத்தக்க கையிருப்புக் சரக்கு! கல்யாணராமய்யரின் திறமை போன்றது) நாட்டியத்தைத் தமிழில் நாடகமென்றே தற்காலம் வழங்குவோம். இந்த நாடகம் ஆதியில் பிரகாணம் முதலிய 10 பேதங்களாகவும், அப்பால் உபரூபகங்கள் என்ற பெயரால் 28 பேதங்களாகவும் விரிந்து, முடிவில் அவையும் 64 நாடகக் கலைகளாக விளங்குகின்றன. அவற்றின் தொகை, வகை, விரிவுகளை அடுத்த பாகத்தில் விவரிப்போம்.

நாகரிக முள்ள நவீனஉலகத்தைப்படைக்க விரும்பும் சினிமா ரசிகர்கள் முற்கால நாரிமகணிளின் கருத்துப்போக்கைக் கட்டாயம் அடுத்த பாகத்தில் படித்து ரசிக்கலாம்.

“பாரத முனிவர்”—நடிகர்களை நோக்கிப் பேசுகின்றார்:—
“செவி கொண்டு கேட்கத்தக்க சத்தம் எத்தனை இனிதாயிருக்க வேண்டும், தெரியுமா? எவ்வாறு நடித்தால் ரசிக ஜனங்கள் இன்பம் பெறுவார் என்ற கேள்விகளை ஒவ்வொரு நடிகனும் தானே மனத்தில் எடுத்துக்கொண்டு தனது செய்கையினால் விடையளித்துத் தெளிய வேண்டும்” என்றார். இதுதான் அரையிலாடும் முறை. தில்லைச் சிதம்பரத்தேவர் கூட அறையிலாடிய பின்னரே அம்பலத்தில் ஆடினராம்! சத்திய ஹரிச்சந்திரனது கதையை ஒருவர் நடித்த பொழுது

அதனைக்கண்ட மகாத்மா காந்தி "தானும் ஏன் அந்த அரிச்சந்திரனுகவே வாழ முடியாது ?" என்ற கேள்வியைப் போட்டுக்கொண்டு, இன்னும் அதற்கு விடை யளித்துக் கொண்டே இருக்கின்றாராம்! மகாத்மாவின் மனத்தை அவ்வாறு திருப்பிவிட்ட அந்த நடிகரின் நடிப்புத்திறமை எவ்வாறிருந்திருக்கும்? சிந்தித்துப்பாருங்கள்! இனி 'வசனம்' என்றால் பேசுதல், வருணித்தல்:

"சீதையை ராவணன் தூக்கிப்போனதாகப்" புராணப் பிரசங்கம் செய்தவர் வருணிக்கின்றார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மன்னன் சேனைகளைத் திரட்டுமாறு தமது மந்திரிக்கு ஆணையிடுகின்றான்! இது உண்மையாக நிகழ்ந்தது கேரள நாட்டில்! எந்த யுகத்திலோ நடந்த ராமகதையை அப்பொழுது நடந்ததாக நடித்துப் பிரசங்கிக்கும் திறமை எத்தகையது யோசியுங்கள்! நாடகக் கலையோடு இணைந்தது தான் இக்கலையும்! நாடகத்தில் நடிகர் உபயோகிக்கும் வாக்கு— நல்ல ஜீவ வாக்காக அமைந்தால் காண்போர் மனத்தை அது அவ்வாறே கவர்ந்துவிடும்!.

இந்திய நடிகர்கள் இக்கலையில் (அதாவது பரத நாட்டியம், வசனகலை என்ற தொடர் கலையில்), தேர்ச்சி பெறின், உதய சங்கரைப் போல உலகெங்கும் 'உண்மையான' புகழ்பெறலாம்! பெண்களுக்கு இக்கலை யறிவு எத்தகைய நலன் தருகின்றது? என்ற கேள்விக்கு எங்கள் "பரதநாட்யகலைப்" பிரசுரத்தில் விடை தருவோம்.

32. ஸமஸ்யாபூரணம்: பாடி முடிக்கும்படி ஒருவருக்குக் கொடுத்த கவிதை முடித்தல் ஸ்மஸ்யா பூர்த்தி செய்தலாம். அது தான் விடுகவி.

Incorporating the idea given by one person in a poetry (Stanza).

விடுகவிகள் ஒருவர் விடுப்பின் அவற்றைப் பூர்த்தி செய்யும் அறிவு வேண்டும் பெண்களுக்கு.

"தீ அழகிய சந்தனக் குழம்புபோலும் ஜில்லென்றிருந்தது"

என ஒருவர் விடுகவி விடுத்தார். அவனைப் பூர்த்தி செய்த கவி வருமாறு:—

"தான் ஆருயிருடன் பெற்று வளர்த்த செல்லக் குழந்தை! அது மெள்ளமெள்ளஊர்ந்து—நகர்ந்து—கணப்புச் செட்டியை யடுத்து 'திடீரெ'ன்று வீழ்ந்ததையும் நன்ருகப் பார்த்து விட்டாள் அந்தத் தாய்! ஆனல், அக்கற்பரசி தனது பதியை உறக்கத்தினின்றும் எழுப்பினளில்லை!

"நாம் தவறுதலாக (அவசரப்பட்டு) இக்குழந்தையைத் தீண்டி விடின், இக்கற்பரசியின் தவ நோன்பு நம்மை எவ்வாறு சுடுமோ எனப் பயந்து நடுங்கிய தீக்கடவுள் (தன்மீது இடப்படும் பொருள்களையெல்லாம் தின்னும் இயல்புடைய வனயினும்) ஒன்றுஞ் செய்தானில்லை என்பதைப் பார்க்கினும், உண்மையாகவே அவன் அக் கற்பரசியின் ஆசி பெற விரும்பியவனய், பசுஞ் சந்தனக் குழம்பு போலானன் என்பதே பொருந்துமாம்!

இது போன்ற பல—இந்தியக் கவிகளின் கற்பனை யமுதைச் சுவைக்க விரும்பினல் எங்களது 32-வது கலைப்பிரசுரமும் பார்க்கலாம்.

## 33. பிரம்பு முதலியவற்ருல் கட்டில் முதலியன அமைக்கை.

## Plaiting chairs and cots with cane etc.

பிரம்புவேலை நன்ருகத் தெரிந்தால் வீட்டுக்கும் நாட்டுக்கும் வேண்டிய சில்லரைச் சாமான் கருவிகள் பலவும் நாமே தயாரிக்கலாம். ஜப்பானிய மாதரும் சீனச் சிறுமியருந்தான் இக் கலையில் தற்காலம் தேர்ந்திருக்கின்றனராம். ஏன்? இந்திய மாதர் இத்திறமையை யிழந்ததனல்! திருச்சி இந்திய மாதர் இக்கலையை முன்னுக்குக் கொண்டுவர முயன்றிருக்கின்றனராம்! நன்று! நன்று! மிக நன்று!

பிரம்பு கொண்டு செய்யப்படுகின்ற கட்டில் பெட்டி முதலியவற்றின் அழகை மலையாளத் தொழிலாளரிடம் காணலாம். திருநெல்வேலி ஜில்லாவில் பனை ஓலையினலும் கோரைப் புல்லினலுஞ் செய்யப் படுகின்ற அரிய பொருள்கள் பெரிதும் வியக்கத்தக்கன.

34. கதிரில் நூல் சுற்றுகை.

## Winding thread in a stick.

கதிரில் நூல் நூற்றலும் கெய்தலும் வடமொழியில் தர்க்கு எனப்படும். இக்கலையில் முற்கால மாதர் எத்தகைய தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதைக் குறிக்கும் கதைகள் பலவாயினும், அவற்றில் ஒன்றை ஸ்வாமி ஸதானந்தர் தமது "இந்து ஸமுதாய வாழ்க்கை' என்றும் மலையாள புஸ்தகத்தில் ஒரு விநோத சம்பவமாகக் கூறுதல் கவனிக்கத் தக்கது:—

காச்மீர நாட்டில் ஏதோ ஒரு காரணமாக நியாயாதிபதியின் முன்னே ஒரு பெண்பால் சாக்ஷிசொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. சாக்ஷி மிக மரியாதையும் கௌரவமுமுள்ள குடும்பத்தைச் சார்ந்தவரென்று வழக்கம்போல் வக்கீல் சிபார்சு மொழி வழங்கியதுடன், குறித்த சாக்ஷி அது காறும் கோர்ட்டுக்கு வந்தறியாது அந்தப்புர வாழ்க்கை நடத்துபவரென்றும் அவருக்குத் தனிஸீட்டு அளித்து மாரியாதை செய்யவேண்டுமேன்றும் கேட்டுக் கொண்டாராம். நியாயாதிபதி சாக்ஷியைக் கூண்டில் ஏற்றினால் அவரது மரியாதை நிலையைத் தாமே அறிந்துகொண்டு உரியவாறு செய்வதாகக்கூறவே சாக்ஷி சாக்ஷிக் கூண்டின் முன்வந்தார். நியாயாதிபதியின் கண்ணுக்கு என்ன தோன்றியதோ? திடீரென்று சாக்ஷிக்கூண்டில் ஏறிய மாதை நோக்கி, "நியாயாதிபதியை அவமதித்த குற்றத்திற்காக நூறு ரூபா"வென்று அபராதம் விதித்தார். ஒரு காரணமும் அறியாத வக்கீல்கள் பிரமித்துப்போயினர். சாக்ஷியை அறிமுகஞ் செய்வித்த வக்கீல் மீண்டும் நியாயாதிபதியைப் பார்த்து "எங்கள் கருணையுள்ள நியாயாதிபதியே! இட்ட கட்டளையை நாங்கள் பொருள் செய்து கொள்ள இயலாது வருந்துகின்றோம்! சாக்ஷிக்கூண்டில் இப்பொழுது தான் ஏறிய இம்மாது, 'வாய்திறக்கு'முன் நியாயாதிபருக்கு விளைவிக்கப்பட்ட அவமானச் செயல் இன்னதெனத் தயவு செய்து விளக்கவேண்டும்" என்றார்.

உடன் நியாயாதிபதி யளித்தவிடை:— "இவ்வளவு வக்கீல்களின் முன்பாக எனது கோர்ட்டில் நிர்வாணமாய் சாக்ஷி கூற வந்த இம்மாதுக்கு நான் விதித்த தண்டனை அற்பமானது" என்று!

இதைக்கேட்ட வக்கீல் அந்த ஸ்திரீயை மற்றொரு கௌரவமுள்ள மாதருடன் தனியறைக்கு அழைத்துச்செல்லவும் அவர் உடையணிந்திருக்கின்றாராவெனப்பரீக்ஷித்துத் தெரிவிக்குமாறும் வேண்ட, முடிவில் அந்த கண்ணியமுள்ளஸ்திரீ தமதுபொன்மேனி நிற அழகுக்குப் பொருந்தத் தம் கையினாலேயே இழைத்த—'மஸ்லீன்' இழையினுஞ் சிறந்த—மெல்லிழைபால் நெய்த ஒருவகை மெல்லிய ஆடையை ஏழு சுற்றுகளாகத் தனது செம்மேனியில் அணிந்திருக்கும் உண்மையை மற்றொரு கௌரவமாது எடுத்து விளக்க, நியாயாதிபர் வியந்து—பயந்து மன்னிப்புங்கேட்டுக் கொண்டனராம்! இக்கதைக்குக்கருத்துண்டு. வேறும் தாராசங்கமன்று!.

"செய்யும் தொழிலெலாம் சீர்த்தூக்கி–நோக்குங்கால்,

நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை கண்டீர்" என்றபடி நெசவுத்தொழிலை நேயமுடன் செய்யலாமென்று ரிக்வேதம் ஜாடைசெய்கின்றது.

35. மரவேலை—Carpentry.

தச்சு வேலையறிதல்: வீட்டிக்கு வேண்டிய பொருள்களை மரத்தினால் செய்து கொள்ள இக்கலையறிவு மிக்க உதவியாம். இக்கலையறிவினால் வீடுகள் பல நூற்றாண்டுகள் வாழ்வும் சுகசெல்வங்களுடன் விளங்கவும் ஏதுவாகும். இவையல்லாது, மாதர்தம் இன்பவாழ்வுக்கான ஒரு சில ரகசியப் பொருள்களைச் செய்து கொள்ளவும் இக்கலை உதவியாக இருந்திருக்க வேண்டும்—'இருந்தது' என்று கூறுகின்றார் இன்ப நூலாசிரியர். இதனை அடுத்த பிரசுரத்தில் பார்க்கலாம்.

வீடுகளை 64 வகையாகக்கூறலாமாம். கற்களால் கட்டப்படும் வீட்டை 'மந்திரம்' என்று அழைக்க வேண்டுமாம். சுட்ட செங்கல்களால் கட்டியவீடு பவனமாக வழங்குமாம். பச்சைச்செங்கலால் கட்டப்பட்டவீடு ஸௌமந்தம் என்று வழங்கத்தக்கதாம். சும்மா சேறு கொண்டு குழைத்துக்கட்டிய வீடு 'ஸௌதாரந்' தானும்' மரங்கள் சேர்த்து வேலைப்பாடுடன் கட்டிய வீட்டை 'மானஸ்யம். என்று மரியாதையாகப் பேசவேண்டுமாம். மூங்கில் சேர்த்துக்கட்டிய

வீடு நந்தனமாம். ஆடைகளை—வஸ்திரங்களை—க் கொண்டு (கூடாரம் போலும்) கட்டிய வீடு விஜயமாம். புற்களால் தயாரான வீட்டை காலிமா என்று கட்டாயம் குறிக்க வேண்டுமாம். பொன்பணி சேர்ந்த பட்டணமானால் அதை—"புஷ்கரம்" என்னலாமாம்! வெள்ளியினால் செய்த வேலைகளமைந்த வீடானால் அது ஸ்ரீபவமாம். தாமரத்தினால் செய்த பணி சேர்ந்தால் அதை சூரியமந்தமென்று சொல்லக் கூடுமாம். இரும்பு வீடானால் "பண்டவம்" என்றே போரும் அரக்கு மாளிகை அமைத்தால் அதை 'ஆகிலம்' என்று சொல்லி விடலாமாம். பித்தளை வீடானால் வாரிபந்தானும். இவைகளில் படுக்க, இருக்க, உடுக்க, உண்ண, வாசிக்க, களிக்க, எந்த எந்த பாகம் நல்லது என்பதை அப்பால் ஆராய்வோமா?

## 36. வாஸ்துவித்தை.—Selection of house-site.

மனையடிசாஸ்திரம், நகரமைப்பு முதலியன பலவும் இதில் அடங்கும். முக்கியமாகப்பெண்கள் இதில் தேர்ச்சிபெற வேண்டும்.

இந்திய மாதர்கள் மனையடி சாஸ்திர மறிந்திருந்தால் புதையலிருக்குமிடமும் பெட்ரோல் ஓடும் தைலதாரையும் அவர்கள் கண்களுக்கே எளிதில் புலப்படும். மனிதர்களின் சரீரத்தில் இரத்த நாளங்கள்—இரத்த நாடிகள்—குறுக்கு நெடுக்காக அமைந்திருப்பது போல், பூதேவியினது சரீரத்தில் ஜலநாடிகள்—தைல தாரைகள்—அமைந்திருக்கின்றனவாம். இராமநாதபுரம் ஜில்லா கோட்டையூர் செல்லம் அய்யர் என்பார் நிலத்தின் மீது தமது செவியைச் சாய்த்து மர்த்தி, நிதானித்து—அந்த—பூமியிலே நீரோட்டம் இருப்பதையும் இல்லாததையும் எளிதில் தெரிவிப்பாராம். கிணறு வெட்டுமுன் அந்த அய்யரின் உதவியைப் பலரும் கோருவதுண்டு. இந்தக் கலை வாஸ்து சாஸ்திரம் என்ற சல்லிய தந்திரத்தைச் சார்ந்தது தானாயினும், பூமியிலுள்ள நீர்த்தாரையை—பாதள கங்கை யோட்டத்தை—கண்டுபிடிக்கும்பாகத்திற்கு "நீர்த்தாழ்ப்பாள் அறிவு" என்பர் வட நூலார். 'உதகார்க்களம்' என்ற பாகத்தில் வராக மிஹிரர் தெரிவிக்கின்ற புற்று—செடி—கொடி—ஆல்—நெல்லி முதலிய அடையாளங்களைக் கொண்டு பூமியின் கீழ் மறைந்துள்ள பற்பல அரிய பொருள்களையும் எளிதில் அறியலாம். இக் கலையின் மற்றோர் பாகந்தான் "புதையல்

இருக்கும் இடம்" அறிதலும்! அடுக்குத் தென்னை, அடுக்குப்பனை, கருங்குருவிச் சேர்க்கை, இயற்கை விநோதச் செழுமை முதலிய 21 அடையாளங்கள் உள்ள இடத்திலே பற்பல நிதிகள்—புதையல்கள்— இருக்கின்றன என்றார் போஜமன்னனும் அதிவீர ராம பாண்டியனும்! எனவே, தமது மனோரதங்களெல்லாம் ஈடேறப் பெற விரும்புவோர்— மனையடி சாஸ்திரம்—படித்தல் நன்றாம். அதை 36ல் காண்க.

37. நாணய, ரத்தினங்களின் சோதனை.

## Testing coins and precious stones.

இரத்தின பரீட்சை: இந்தக் கலை தமிழில் ஒன்றாக வழங்குகின்றதாயினும், வட மொழியாகிய ஸம்ஸ்கிருதத்தில் "ரூப்பியரத்தின பரீட்சை" என்று இதனை ஒரு தொடர் கலையாகக் கூறுகின்றனர் (பாமஹறன் முதலியோர்). ரூப்பியம் என்றால் ரூபாய் சம்பந்தமானது என்று மட்டும் அர்த்த மல்ல: தீயிலிட்டுக் காய்ச்சி அடித்த தங்கம்—சுவர்ணம், அல்லது அதுபோன்ற நாணயங்களின் மெய் விலை, பொய் விலை அறியும் அறிவாம். கள்ள நாணயம் மலிந்து வருகின்ற இக்காலத்தில் ஒவ்வொரு மாதருங்கூட இக் கலையை அறிதல் நலமன்றோ? இது போலவே ரத்தினங்களையும் அவை இயற்கை ரத்தினங்களா, அன்றிச் செயற்கைக் கற்களா என்று அறிதலும் முக்கியமாம். உலகத்திலே விலையேறப் பெற்றபொருள்கள் தங்கமும்வைரமுமாகும். ஆகவே, அவை இரண்டுஞ் சேர்ந்து ஒரே கலையாகும் போலும். அவ்வாறு விலைமதிக்க முடியாத பெருமை நவரத்தினக்கற்களுக்கு ஏற்பட்டதேன்? அவை வெறும் மினுக்குக்கற்களல்ல: தேவர்களின் பொருட்டு (பரோபகாரத்தின் பொருட்டு) தமது முதுகெலும்பையே அளித்த ததீசி முனிவரின் எலும்புகளினின்று உண்டானதால்தான், என்று இந்திய புராணங்கள்பேசும்!

ஒருவரது பரோபகாரச் செயலினாலுண்டாகும் பொருள்களுக்கு அவ்வித மதிப்பு ஏற்படுதல் இயற்கையா, இயற்கை விநோதமா? அந்த ரத்தினங்களின் இயற்கை யமைப்பும், குணமும் செயலும் உணரத்தக்கன; அறியத்தக்கன; மதிக்கத்தக்கன! இன்றுகூட இலங்கையிலே— ராவணகங்கைப் பள்ளத்தாக்கிலும் — ரத்தினகிரியிலுமுண்டாகின்ற ரத்தினங்களைப் பாருங்கள். நவரத்தினங்களைக்குறித்து நாமறிய

வேண்டியன பல. காலங்காட்டும் கல்மணிகளும்—நாகரத்தினங்களும் ஜீவரத்தினங்களும் உண்டாம். நாகூர் ஆண்டவன் சந்நிதியிலே விளங்கும் நாகரத்தினம் கல்லிடைக்குறிச்சித்தாலுக்காவில் கிடைத்த தென்றூர் ஒருவர். கோல கொண்டாரத்தினம், உலகமறிந்ததே. நாம் இந்த நவரத்தினங்களேயும் முறையறிந்தணிந்தால், நமக்கு நவகிரகங் களும் அருள் புரியுமாம். அவற்றை அழகாகத்தான் போட்டுப் பார்க்கலாமே என்றூர் ஒருசெல்வர்.

கர்நூல் கடப்பை ஜில்லாக்களிலும் நல்கொண்டா—தெல்ல கொண்டா பக்கங்களிலும் கிடைக்கும் கற்களில் வைரங்களும் சேர்ந்திருக்கின்றனவாம். இந்தியாவில் இரத்தினக்கற்கள் உண் டாகும் இடங்களை நவரத்தின சாஸ்திரத்தால் அறியலாம். இரத்தினங்களுக்கு உள்ள நிறம் இயற்கையா, செயற்கையா? அவை எந்த எந்த பூமிகளில் எவ்வாறு விளேகின்றன என்ற சங்கதிகளே யெல்லாம் இந்தக்கலை நூல் சிறிதேனும் விளக்க வேண்டுமல்லவா?

மாணிக்கம், முத்து, பவளம் மரகதம், புஷ்பராகம், வைரம், நீலம் கோமேதகம், வைடூரியம் இவை ஒன்பதும் ஒன்பது கிரகங்களுக்குப் பரிகாரமாம். நமக்கு சூரியதசை நன்றா யில்லை யென்றால், நாம் பிறக்குங்கால் சூரியனது நிலை சரியாகயில்லை யென்றே பொருளாம். அதற்காக நாம் நம்மையோ, நமக்கு உதவி செய்தே வருகின்ற சூரியனேயோ திட்ட வேண்டிய அவசியமில்லையாம்! ஆனல், நல்ல தருணம் பார்த்து நமக்கு எந்தகிரகங்கள் அநுகூலமாக இருக்கவேண்டுமோ அந்த கிரகங்களின் ரத்தினங்களிழைத்த மோதிரத்தை— (மாதர்களானல்— தகுதியான ஆபரணங்களை) அணிந்துகொண்டால் நவக்கிரகங்களும் நன்மைசெய்யுமாம்! மனமும் இடமும் அன்பும் அக்கரையுமிருந்தால் அவ்வித நகைகளையணிவோர் பிறர்க்கும் ஒவ்வொன்று செய்தளித்து, அப்பால் தாமும் அணிதல் அளவற்ற நன்மை தருமாம்!

மனம் சிறிது சஞ்சலமாயிருந்தால் சந்திர காந்தக்கல் மாலையை அழகாக அணியலாமாம். ஏன்? மனம் இன்னும் தெளிவாக விளங் கத்தான்!

முத்து உண்டாகும் இடங்களாவன:—

இப்பி (சிப்பி) உடும்பு, கடல் மீன், கதலி, கமலம், கமுகு, கரும்பு, கொக்கு, சங்கு, செந்நெல், சந்திரன், நத்து' நாகம், பசுவின் பல், பன்றி மருப்பு, மடந்தையர்கந்தரம், முதலை, மூங்கில், மேகம், யானைத்தந்தம் என்பன. கரும்பிலிருந்து விளையும் முத்து கன்னல் முத்தாகும். அது சென்னை கண்காட்சிசாலையில் காணப்படும். சிப்பியிலிருந்தெடுக்கும் முத்துதான் ஆணிமுத்தாம். அது தென் கடலாகிய நமது தமிழ்நாட்டுப் பாண்டி மன்னது கடலிலே விளைகின்றதாம்!

## 38. தாதுவாதம்—Metallurgy.

தாது வாதம்:—என்றால் தாதுக்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல். தாது என்பவையாவை? தாது என்ற சொல்லுக்கு தாங்குவது என்று பொருளாகும். எதைத்தாங்குவது? உயிரைத் தாங்குவது உடலைத்தாங்குவது என்று அதை இருவகையாகக் கூறலாம். உயிரைத்தாங்குவது உடல்; உடலைத்தாங்குவது தாதுக்கள். அதாவது வாதபித்த நாடிகள். அவற்றின்பலம் (தென்பு) அறிதலே தாது (நாடி) பார்த்தலாம். ஆனால், சரீரநாடிகளின் பலஈனத்தைப் போக்கி உறுதியையும் ஆரோக்யத்தையும் அளிப்பவை பொன் முதலான உலோகங்கள். ஆகவே, இவைகளும் தாதுக்களாம். முதலில் தெரிவித்த சரீர நாடிகளின் நிலையறியும் கலை வைத்யசாஸ்திரத்தைச் சார்ந்தது. அதை வேறோரிடத்தில் காணலாம். இங்கு உலோகப் பொருள்களின் இயற்கை செயற்கைகளால் உண்டாகும் நன்மை தீமைகளையறிவதே தாதுவாதமாகும்.

தங்கம், வெள்ளி, செம்பு, வெள்ளீயம், காரீயம், நாகம், இரும்பு என்பன சப்த (7) தாதுக்களாம். தங்கத்தின் சத்து ஆயுள் ஆரோக்யம் முதலியன அளிக்கும். இதுபோல இந்த 7 தாது (உலோக)ப் பொருள்களுடையவும் அம்சங்கள் சரீரத்தில் ஏறுந்தோறும் மனித சரீரத்திற்கு உண்டாகின்ற நன்மை தீமைகளைக் குறித்தும், இவற்றை வெளிப்பண்டமாக— பாத்திரங்களாக— உபயோகிப்பதால் விளையும் பலன்களைக் குறித்தும் 38வது கலைப் பிரசுரத்தில் விளக்குவோம்.

• •

போளூர் தாலூகாவில் உலக முழுதுக்கும் ஸப்ளை செய்யத்தக்க அளவு கந்தகம் இருப்பதாக விநாயகராவ் (எபிக்ராபிஸ்டு) 1927ல் கூறினாராம். இதுபோல் இன்னும் ஆராய்ந்தால் அநேக இடங்கள் தென்னிந்தியாவிலும்—வட இந்தியாவிலும் இருப்பது தெரியவருமாம். இச்செய்தியை நமக்கு நேராக அறிவித்த பெரியார் அசல் ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியார் (ஆவணி மடாதிபதிகள்) அவர் வாழ்க! இன்னும் இக்கலை சம்பந்தமாக அறியத்தக்கன பலவும் "ஆண்களுக்கான 64 கலைகள்" என்ற நூலில் காணலாம்.

39. மணிக்கு நிறம் அமைக்கையும் மணி (ரத்தினங்)களின் உற்பத்தி ஸ்தானம் அறிகையும்.

Giving colour to precious stones and knowing the places where they can be got.

நவரத்தினங்களின் உற்பத்தி— "இரத்தினக் கனிகளிருக்குமிடம்" நவரத்தின பரீட்சை யென்ற நூலில் தெளிவாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனைப்படிப்போர்க்கு அசல் ரத்தினங்களின் இயற்கையும் நலனும் தெரியலாம். ஆனால் இங்கு போலிரத்தினக்கற்களின் இயற்கை— செயற்கை முறையும் விவரிக்கப்படுகின்றது. அடுத்த 39 வது பிரசுரத்தில் 14 விதரத்தின பரீட்சையும் போலி ரத்தின முறையும் விவரமாகக்காணலாம்.

40. தோட்டவேலை.—Gardening

தற்கால மாதர்களுக்கு இதில் தேட்டமில்லாவிடினும் முற்கால மாதர் மணிகள் இதில் தேர்ந்திருந்தார்களெனச் சில பழமொழிகளுந் தெரிவிக்கின்றன.

இக்கலைநூல் தமிழிலும் உண்டு. அச்சுக்குவரா விருக்கின்றது.

இந்தக்கலை நன்றாக வளருமானால் தேசத்தில் பஞ்ச நோய் தலையெடுக்காது. மரங்களைக்கொடியாகச் செய்து உங்கள் வீட்டைச் சுற்றி சகுந்தலை செய்தது போல் ஒரு லதாமண்டபம் (கொடிவீடு) அமைக்க வேண்டுமா? மலர் மேல் மலர் தோன்றும் மனோரம்மிய வேலையை உங்கள் பூஞ்செடிகளில் பார்க்க விருப்பமா? அப்படியானால்

ஆறு பருவங்களிலும் அழகாகப் பூத்துக் காய்க்கும் அற்புத முறை யமைந்த எங்கள் தமிழ்ப் பூந்தோட்டக் கலையை எதிர் பாருங்கள்.

உங்கள் வீட்டில் அந்தக்கொய்யாவாதென்ன வடக்குப்பாகம் முண்டு தட்டியிருக்கிறது? ஓகோ வாத நோய் வந்தது போலும்! சரி, கீழே செத்தைகளைச் சேர்த்துப்போட்டு வாயு விளங்கப் பொடிகளைத் தீயிலிட்டு அந்தக் கோணல் வாதின் பக்கமாகப் புகைப் போடுங்கள்; 5, 6, நாள் போட்டால் வாதம் கரைந்து—கொம்பு நீண்டுவிடுகின்றது! இது விருக்ஷாயுர் வேதத்தின் வாக்கு!

இனி, பூஞ்செடிகளுக்கு—மரங்களுக்கு இயற்கையாக அமைந் துள்ள சில நுட்பமான குணங்களை மகாகவிகள் பின்வருமாறு எழுதுகின்றனர்:—

மாதர்களின் கைபட்டால் மா மரம் அதிகம் பூக்குமாம் ஆனல் மஞ்சாடிக்கு அதுகூட அவசியமில்லை! மாதர் 'கண் பட்டாலே. மஞ்சாடி பூத்துக்கொட்டுமாம். மகிழ மரத்தின் செய்கை இன்னும் வேடிக்கை! பாருங்கள் மல்லிநாதர் சொல்லுகிறார்: 'மாதர் காறியுமிழ்ந் தாலே மகிழமரம் மகிழ்ந்து பூக்கும்'' என்று. அங்கனைகளின் (கால்) அடிபடுந்தோறும் அசோகுக்கு வெகு குஷியாம். அப்பொழுதுதான் அது ஒரே பூவாகப் பூத்துத்தள்ளுமாம்! சம்பகம் இன்னும் கொஞ்சம் அதிக மதிப்பிலிருக்கின்றது. இந்த வேலைகளொன்றும் சம்பகத் திற்குப் பிடியாதாம். ஆனல், சுந்தரிகளின் 'முக ஒளிபட' சடே ரென்று பூக்கத்தொடங்குமாம்! "கொங்கு மரத்திற்குச் செவி கூட உண்டா என்ன? அதனல் தான் அது மாதர்களின் இனிய சம்பாஷ ணங் கேட்குந்தோறும் அதிகம் மலர்கின்றது!'' என்றார் சார்ங்கதர முனிவர். ஏன் சுவாமி! நொசிக்கு என்ன நாரிமணிகளின் மூச்சுக் காற்றில் அத்தனைருசி? அவர்களின்மூச்சுக்காற்றுப்படுந்தோறும் அது அதிகம் பூக்குமாமே! நாரியர் சிரித்தாலே நமேரு மலர் செழிக்கு மாறுலும், காந்தைகள் கானஞ் செய்தால்தான் முரளை மனமுவந்து பூக்குமாம். இதை யெல்லாம் தெரிந்தவன் இராவணன் என்றார் எங்கள் வால்மீகி! அதை உங்களுக்குத் தெரிவிக்கப்போகிறோம்!

## 41. ஆடு கோழி முதலியவற்றின் போர் முறை.

Game-fight of cock, goat etc.,

ஆடு கோழிகளின் போர் முறை யறிவதால் அந்தப் பிராணிகளை மாத்திர மன்றிப் பிற பிராணிகளையும் கால் நடைகளையும் வளர்க்கும் அறிவையும் உண்டுபண்ணுமாம். ஆடுகளிலே கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் செல்வதும், தனியே சென்று தண்ணீர் பருகுவதும் ஒரு சிறந்த இனத்தை சார்ந்தது. அதன் பேர் குட்டகம். அது இருக்குமிடத்தில் திருமகள் வாசஞ் செய்வாளாம். அது போல் ஆடுகளில் நால்வகை ஜாதியுண்டு. அவை யாவை?

கோழிகளில் மஞ்சள் நிறமும் வண்டுபோன்ற வர்ணமும் உள்ள கோழி மிகச் சிறந்தது. வெற்றியோடு விளங்குங்குணம் அதற்கு அமைந்திருப்பதால் போலும் கந்தனும் அந்தக் கோழியைக் கொடியிலுங் கொண்டிருக்கின்றான். கௌதாரியின் கதை தமிழருக்கு புதிதல்ல.

42. கிளி, நாகணவாய்களைப் பயிற்றுகை.

Training porrots and minah to speak.

தற்கால இந்தியாவில் 100-க்கு 10-பேர் கூட இன்னும் கல்வியில் தேர்ந்தபாடில்லை என்றுபடிக்கின்ற நாம் "கிளி—நாகணவாய் போன்ற பறவைகளுக்குக் கூடப் பேச்சுக்கற்றுக் கொடுக்கும் முற்கால மாதர்களை" மறக்கவேண்டா மல்லவா? கிளிகளுக்குப் பேசக்கற்பிப்பதால் பயனென்ன? என்ற கேள்விக்கு இந்த சிறு பாடல் தக்க விடையளிக்கும். அதாவது:

"மாடு மனை போனாலென்ன!
மக்கள் சுற்றம் போனாலென்ன,
கோடி செம்பொன் போனாலென்ன—கிளியே!
(உந்தன்) குறுநகை போதுமடி!

என்று ஒரு காதலன் அந்தப் பசுங்கிளியினிடம் ஒரு செய்தி அனுப்பினானாமே! அவனது பேர் என்ன?

திக் விஜயத்திற்குப் புறப்பட்டு தேச தேச மெல்லாம் வெற்றிக் கொடிநாட்டிய சங்கரர் "மண்டன மிசிரரும், உபயபாரதி" யென்னும்

சகல கலாவல்லியும் மாஹிஷ்மதி நகரில் வசிக்குமிடம் எங்கே? என்று தேடினாரல்லவா? அப்பொழுது ஒருவர் தெரிவித்தாராம்: ஏன் இத்தனையே சிரமம்! தாங்கள் ஒருவரிடமும் விசாரிக்க வேண்டிய தேவை யில்லை! தாங்கள் இந்த ராஜவீதி வழியாகச் செல்லுங்கள்; அவ்விதஞ் செல்வீர்களானால் சில கிளிகள் "ஏன் ஸ்வாமி! இந்த உலகத்தின் உற்பத்திக்குக் காலம் காரணமா, கருமம் காரணமா, கடவுள் காரணமா?" என்று தாங்கள் (கிளிகள்) பரஸ்பரம் செய்து கொண்டிருக்கின்ற தர்க்க வாதங்களை உங்களிடமே பஞ்சாயத்திற்குக் கொண்டு விடும்! அதுதான் மண்டன மிசிரரின் மாளிகை! உபயபாரதி அம்மாள் தயாரித்த அக்கிளிகள் அம்மாளிகையின் இருபுறங்களிலும் இரவு பகலாய் உல்லாசமாக உலவுவன!" என்று.

இந்தக்கிளியும் மைனாவும் அழகிய பறவை இனத்தைச் சார்ந்தன [புறாவை இங்கு மறக்கமுடியுமா?] கசாப்புக்கடையில் விளங்கும் கிளி பார்வைக்கு அழகுதானாயினும் அது வசிக்கும் இடத்தில் வழங்கும் பழக்கச் சொற்களால் மாறுபடலாம். தவ முனிவரின் ஆசிரமங்களில் வளரும் கிளிகள் அஹிம்சா தர்ம உபதேசத்தையும் கடவுளின் மீது துதி மொழியையும் வழங்கலாம். மைனாவுக்குப் பேச்சு விரைவில் வரும். ஐரோப்பிய யுத்த காலத்திலே பழக்கப்பட்ட புறாக்கள் யுத்தச் செய்திகளைப் படம் பிடித்து வந்த கதை பலர்க்குத் தெரியும். ஆனால், காதலர் காதலிகள் தம்முள் 'காதல் கடிதம் கொண்டு செல்லும் பணியில் முற்காலத்திலே இம்மாடப் புறாக்களும் முனைந்திருந்தன' வென்பதில் ஆச்சரியமென்ன?

அரச மரத்துக் கிளி அழகாகப் பேசு மென்றார் ஒரு பறவை வளர்ப்பு நிபுணர். கலைமகளின் பக்கத்தில் அல்லது அன்னை பராசக்தி யின் கையில் விளங்கும் அந்தக் கிளி என்ன கிளி?

43. உடம்பு பிடிக்கையும்—எண்ணெய் தேய்க்கையும்.

## Masaging and annointing.

கால் கொண்டு மிதித்தல், கைகளால் பிடித்து விடுதல், தலை முடிக்கு எண்ணெயிட்டு அழகாக வாரித் தேய்த்துத் தலைமுழுக்கு வித்தல் ஒரு சிறந்த கலை. இந்தக் கலையாளருக்கு சரீரத்தின்

இயற்கை நுட்பம் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும். இதையே ஜீவனோபாயமாக—வயிற்றுப்பிழைப்பாக—க் கொண்ட ஜாதியாரின் பேர் சிலீந்தரர் என்று கந்த புராணம் பேசுகின்றது. அது தான் சைரந்திர ஜாதி போலும் என்றார் ஒரு நிகண்டு ஆசிரியர்.

இந்த முறையில் உடம்புக்கு எண்ணெய் தேய்த்துக்கொள்ளும் மனிதர்க்கு நோய்களே வாராதாம். அவை சிங்கத்தைக் கண்ட பிராணிகள் போல விலகி ஓடுகின்றனவாம்.

தலையில் தேய்க்கின்ற எண்ணெய் ரோம கூபங்களின் வழியாக உள்ளே சென்று தாக்க 300 மாத்திரை நேரமாகின்றதாம். 900 மாத்திரை நேரத்தில் நாம் தேய்க்கும் தைல சத்து மஜ்ஜை என்னும் தாதுவில் சென்று சேருகின்றதாம். இதில் தெரிவிக்கின்ற முறை யாக மாதர்கள் எண்ணெய் தேய்த்துக்கொள்ளின் அழகும் காந்தியும் பெற்று ஒரு நூறாண்டுகளேனும் குறையாது வாழ்வராம். வைத்ய ரின் மனஸ்தாபம் கட்டாயம் எற்படுமென்று பயந்து சிலர் சரியான படி எண்ணெய் தேய்த்துக் கொள்வதில்லை போலும்! மலையாள தேசத்து "ஞவரைக்கிழி" ஆளையே புதிதாக வார்த்து விடுமல்லவா?

44. சங்கேத அக்ஷரங்களமைத்துப் பேசுதல்.

Using code-words.

இந்த முறை குடும்பத்திலுள்ளோர்க்கு மாத்திரம் தெரியத் தக்க விஷயங்களுக்கும் பொருந்தும்! அத்துடன் அரசர் சம்மானம் பெறவும் நன்று. இவ்வித முறையை மாதர் அறிதல் நலமாம். இது வீட்டுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லதே.

இந்த சங்கேத பாஷை சில ரத்தின வியாபாரிகள் போர்வைக்குள் கைவைத்து ஒருவர்க்கொருவர் வெளிக்குத்தலையாட்டிய வண்ணம் ஏதோ கைவரைகளில் வரைந்து "அவரதம் (10) வைத்துக் கொள்ளுங்களேன்" "இல்லை, க்ரகமாக (9) பார்க்கலாம்" என்றெல்லாம் பேசுகிறார்களே! அந்த முணு முணுப்பு பாஷை போன்றது தான் இக்கலை. கன்னட பாஷையில் நிஜகுண சிவயோகியார் செய்த விவேக சிந்தாமணியில் இக்கலையின் பரிபாஷைகள் விளக்கப்படு கின்றன. தஞ்சை குப்புசாமிராஜு அதைத் தமிழ்படுத்தினர் போலும்!

கங்களின அல்லது வசனங்களில் காலியாக விட்டுவைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பொருத்தமான பதங்களைப் போட்டு முடித்தல் "பிடிவைத்துப் பாடுதல்" என்பர் சிலர். பெண்களுக்கு இயற்கையிலேயே பொடி வைத்துப் பேசுவதில் திறமை யதிகம்: படியாத பெண்களாயினும் அவர்க்கும் புத்தி சூட்சுமம் அதிக மென்றார் காளிதாசன். படித்த பெண்களாயின் கூறவும் வேண்டுமோ?

அபிப்பிராயத்தை உள்ளடக்கிப்பாடும் ஒருவகைக் கவிக்கு "பிடியெழுத்துக்கூறுதல்" என்பதாம். அந்தக் குறிப்பில் கிடக்கும் கருத்தை ஊகித்துப் பொருளைக் கண்டுபிடித்துக்கொள்ள வேண்டும்.

இதில் 'பிடி', விளங்கக்கூறுதல் 'பிடி விளங்காது' கூறுதல் என்று இரண்டு விதம். இதை ஆசாரியரவிகுப்தர் என்பவர் தாம் செய்த சந்திரப்பிரபா விஜய காவ்யத்தில் தெளிவாகக் கூறுகின்றார். ஸீல் வைத்து கருத்தின் 'பிடி விளங்கும்படிகூறு'ங் கவிக்குமுஷ்டி என்று பெயர். பொருளை மறைத்துக் கூறும் பிடிக்கவியும் ஆறுவகைப்படும்.

முஷ்டி, தளிர், சடை, சாரி, கொடி, ஈட்டிக்கொடி என்பன. இவற்றின் விபாங்களை உதாரணத்தோடு இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

45. இரகசியபாஷை —Secret message.

ஒருசுதேச சமஸ்தானத்தில் பூமியிலே கோடிக்கணக்கான செல்வப் புதையலொன்று இருக்கின்றது. அது இருக்குமிடத்தையும் அதிலடங்கிய செல்வத்தின் அளவையும் (தொகைவகைகளையும்) சங்கேத பாஷையில் எழுதிவைத்திருப்பதால் அதன் தற்கால அரசர் ஒன்றும் விளங்காது விழிக்கின்றாராம்! முற்கால இந்தியர் இத்தகைய ரகசிய பாஷைகளில் தேர்ந்திருந்தன ரென்பதற்கு இதுவும் ஒரு பயனுள்ள உதாரணமாகும்.

46. தேசபாஷை உணர்ச்சி.

Knowledge of national language.

45ல் தெரிவித்தபடி ரகசிய பாஷை மட்டுமறிந்தால் நமக்கு மாத்திரமே நாம் பயனுள்ளவ ராவோம்! நாம் அதற்காகமாத்திரம் பிறந்தவரன்று. நாம் உலகமுழுதுக்கும் பயனுள்ள வாழ்க்கை நடத்துதல் முக்கியமாகும். ஒன்று கவனிக்கலாம்! பாஷை யென்பது மனிதர்கள் ஒருவர்க் கொருவர் தம் மனத்திலுள்ள அபிப்பிராயங் களைப் பிறருக்குத் தெளிவாக எடுத்து விளக்கும் கருவி. அதை 'நாவு' என்றாலும் பொருந்தும். ஆதிசேஷனுக்கு 2000 பாஷைதெரிந்திருந்த தால் அவனை இரண்டாயிரம் நாவுடையவனென்றும் பூமியைத்தாங் குகின்றவனென்றும் புராதன இந்தியர்கள் வருணித்தனர். அத்தனை பாஷையையும் அறிந்தவன் உலகத்தைத் தாங்குதல் எளிதல்லவா?

நாமும் பலபாஷையறியுந் தோறும் நமது ஞானதிருஷ்டி—ஞான ப்பார்வை—அறிவின் லக்ஷியம்—அகண்டமாக விரிகின்றது; குறுகிய பட்டிக்காட்டு அபிமானம் கரைந்து, நமது தேசாபிமானம்—உலகாபி மானமாக—பூலோக சகோதர சமத்துவ—ஞானஉணர்ச்சி ஜொலிப்ப தாக வளர்கின்றது: எனவே, தமிழராகிய நாம் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்துஸ்தான், மராட்டி முதலிய பலதேச பாஷையிலும் இயன்ற அளவுதேர்ச்சி பெற வேண்டுமென இக்கலை ஞானம் நம்மை வற்புறுத்துகின்றது போலும்!

புராதன இந்தியாவில் 18 தேச பாஷைகள் பிரதானமாக வழங்கி வந்தனவாம். அநுமான் சீதையிடம் பேச நெருங்கும் பொழுது "நான் இப்பொழுது ஆரிய பாஷையில் பேசினால் சீதை என்ன நினைப்பாள்? மீண்டும் அந்த ராவண சந்யாசிதான் இப்படி வந்தானென்று தானே! ஆகவே, சீதை பிறந்த விதேக நாட்டு மொழி யில்—அயோத்தியில் வழங்கிய பாஷையில்—இராமன் தெரிவித்த முறையில்-பேசி விடுகின்றேன்! 'உனக்கு' இந்த மனித பாஷை எப் படித்தெரிந்தது' என்று சீதை கேட்டாலோ? ஆம், அந்தப் பெருங் கடலைக்கடந்து வந்த ராமதூதனுக்கு இதுவா ஒரு பிரமாத சங்கதி? 'தக்கவிடை கொடுப்பேனே!'' என்று தீர்மானித்தாராம் அந்த சமய சஞ்சீவி. 18 பாஷைகளையும் ஆந்தர அநுமந்தராவின் விஞ்ஞானக் களஞ்சியத்தினின்று கண்டெடுப்போமா? தமிழர்களே! தெலுங்க ரிடமுள்ள சிறந்த கலைநூல்களுக்குக் கைம்மாறாக நமது அரிய நூல்களை யளித்துப் பண்டமாற்றுக் கொள்வோமா?

47. புஷ்பரதம் அமைக்கை.

## Making flower-decked cars.

பண்டைக்காலத்தில் இயற்கை யழகை எவ்வளவு நன்றாக நம்மவர் அநுபவித்து வந்தனர் என்பதை இக்கலை விளக்கும். தஞ்சை ஜில்லாவில் இக்கலை வல்லோர் சிலர் இன்றும் விளங்குகின்றனர். மோட்டார் வாகனம் விரைவாக செல்லுகின்றதாயினும், "புஷ்ப ரதத்தின் அழகும் மணமும்" பலரது கண்களுக்கு ஆனந்த மளிப்பதுடன் சில தொழிலாளரின் உயிர் வாழ்க்கைக்கும் கலையறிவுக்கும் உதவி செய்வதாகின்றது. இப்பொழுது இக்கலையறிவு—சில தேவாலயங்களின் தேர்த்திருவிழாக் காலத்தில் மாத்திரமே சிறிது அறிமுகஞ் செய்விக்கப் படுகின்றது!

48. நிமித்தமறிகை.—

## Explaining omens.

தொழிலாளியின் நிலையில் கவனித்தால் சகுனகலை ஜோசியத்தின் ஒரு அங்கமான கிளைக் கல்விதான். ஆனாலும் அதை சிறிது தூரம் படித்து வைத்தல் நல்லதுதான். நமக்காகவும் படிக்கலாம்; பிறர்க்கு அல்லது பலர்க்குத்துன்ப முண்டாகாதிருக்கவேனும் படித்து மனதில் வைத்திருக்கலாம்; புஜங்கராவ் ஏதோபங்ககளூர் ரேஸுக்குப் போகிறார், லாபம் வந்தால் உங்களுக்கும் தருவதாகக் குஷியோடு சொல்லிக்கொண்டு போகிறார் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது சகாராம், "ஏன் ஸார் உங்களைத்தானே! நீங்கள் தான் போகிறது போகிறீர்களே பெங்களூருக்கு; நம்ம ஆத்துக்காரிக்கு அசல் சீயக்காய்த்தூள் என்றால் வெகுஇஷ்டம்! இரண்டு வீசை தயவு பண்ணலாமோ!" வெளியே—பணந்தேடச் செல்வோர்க்கு இதைப் பார்க்கினும் அவசகுனம் வேறுவேண்டியதில்லை என்று சகுன சாஸ்திரங் கூறுகின்றது. ஆகவே, கூடுமானால், வெளியே போகும் நேயரை உபத்திரவம் செய்யாமல் நாம் மௌனம் சாதிப்பது சர்வார்த்த சாதகம்! ஒரு கால் பேசவேண்டுமென்ற அன்பு அதிகமானால்! "ஸார்! பாலும் பழமும் தயார் செய்து வைக்கிறேன், ஒரு டீபார்ட்டி, நம்ம ரேஸ் ஜோஸ்யருக்கு நடத்துவோமா?" என்று ஒரு போடு

ப்பாடலாம். அப்படியானல் பங்களூர் ரேஸுக்குப் போகிறவரின் குதிரை வின் அடித்தாலும் சகுனக் குறையைப் பற்றிய புகார் நமக்கு எட்டாது! லாபம் வந்தாலோ, கட்டாயம் நமக்கும் விருந்துண்டு!

"சகுனம் நன்ருய் இருந்தாலும் விடிய விடியத் திருடாதே" என்பது "சோர" சாஸ்திரத்தின் பழமொழிகளில் ஒன்று. இதனல் திருடப் போவோரும், உளவு பார்க்கச் செல்வோரும் சகுன கலையில் தேர்ந்திருக்க வேண்டுமெனத் தெரிகின்றது. அதிகமான சந்தேகப் பேர்வழிக்கு சகுனம் சர்வகுழப்பத்தை உண்டுபண்ணுமாயினும் நிதான புத்தியுள்ளவர்களுக்கு "சகுன கலையறிவு" ஓரளவில் நன்மை செய்யுமாம். எதிராளியை வெல்ல விரும்புவோர்க்கு எல்லாம் வல்ல இறைவன் இயற்கைத் தோற்ற பேதங்களாலும் பிற பிராணிகளாலும் அவரவரது சரீர மனக் குறிப்புகளாலும் உணர்த்துகின்ருராம்.

அந்த நாரிமணி நாடி நிற்கும் நாதன் ஊருக்குச் சென்று நாலாறு மாதங்கள் ஆயினவாம்! அவன் விரைவில் வருவதாகக் கடிதம் பல வரைந்தானுயினும், குறித்த நாட்களில் வரவில்லையாம்! ஜோசியரிடங் கேட்டும் பார்த்தாள். அவர் சொன்ன நாளும் நெருங்கி விட்டது. ஒருகால் அன்று மாலை தனது கணவன் வருவானு? காலைக் காகம் கூவு கின்றதா, மாலைக்காகம் நெருங்கி வருகின்றதா? இதை யெல்லாம் கவனித்து மாலைத்தீபமும் இட்டு வணங்கிஞள் அந்த வநிதை. அத்தரு ணத்தில் அவளது மனத்திற்கு ஆறுதல் அளிக்கவே போலும் அங் கொரு பல்லி காணப்படுகின்றது! அதனை நோக்கித் தனது மெல்லிய குரலில் அவள் என்ன கேட்கின்ருள்?

இரவு பகல் ஒழிய வரும் இரவி வரும் ஆகில்,
இன்பவடிவான் நேயன் இங்ஙன் வருமாகில்,
'விரவி யெனை ஆள வல'வீரன் வருமாகில்,
மீள் ஒருகால் வரவு சொல்லு சிறு பல்லி!

பரிசுத்த ஆத்துமாக்களின் விஷயத்தில் பல்லி சொல்லுக்குப் பய னில்லாது போகாதென்று சகுன சாஸ்திரம் சமாதானங் கூறுகின்றது! அதையும் காரண காரியத்தோடு அடுத்து ஆராய்வோம்.

49. பொறி யமைக்கை.—

Manufacturing machines

சந்திரகுப்தனது மந்திரி சாணிக்கியன் உயிர் வாழ்கின்றானா என்பதை அறிய விரும்பி ஒரு பகையரசன் (குந்தலேச்வரன்) "சிங்கத்தை ஒரு கூண்டில் அடைத்து, கூண்டை உடையாது சிங்கத்தை வெளியே துரத்துங்கள், நீங்கள் அவ்வாறு செய்யத்தவறினால், உங்கள் நாட்டின் மீது படையெடுப்போம்!" என்று இறுகிக் கடிதமொன்றும் அனுப்பினான்! அதனைக் கண்ட சாணக்கியன் கூண்டோடு அச்சிங்கத்தைச் சந்திரகுப்தனுக்கு அனுப்பிவைத்து, சிங்கத்தை ஓட்டுகின்றாயா அல்லது நாட்டையிழக்கின்றாயா என்று தமாஷாகக் கேட்டுவிட்டரன்! புத்தி நுட்பம் வாய்ந்த சந்திரகுப்தன் "சரேலென்று ஒரு இரும்புத் துடுப்பைத் தீயிலிட்டுப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சிய வண்ணம் சிங்கத்தின் தலையில்" சூடிட்டான்! அரக்குச் சிங்கம் அப்படியே அழுது மறைந்தது! முற்காலத்தில் அரக்கினால் எத்தகைய கருவிகள் செய்யப்பட்டன என்பதை பாரத காலத்தின் அரக்கு மாளிகையில்கூட காணலாம்!

இது முற்கால இந்தியர் செய்து காட்டிய செயற்கை யந்திரங்களின் செய் அறிவாம். ஒரு குறிப்பிட்ட முறையில் தவறுதுதாமே இயங்கிக் கொண்டிருக்கின்ற பூமி, ஜலம், நெருப்பு, காற்று முதலியவற்றை "எவை தம் வழியில் இழுத்து வேலை செய்விக்கின்றனவோ அவை யந்திரங்கள்" எனப்படும். சந்திர யந்திரம், சூரிய யந்திரம், விமான யந்திரம் முதலிய பலயந்திரங்களை போஜராஜன் விளக்குகின்றார். யந்திரப் புரவிகளை நாம் தமிழ் நூலில் தாராளமாக படிக்கின்றோம். அதுபோல, பல நுட்பமான யந்திரம் அமைக்கும் முறை அபிலஷிதார்த்த சிந்தாமணி போன்ற நூல்களில் காணப்படுகின்றன. நமது விசுவகர்ம சாஸ்திரங்கள் புதிய பிரம்மனைக் கூடப் படைக்கவும் தயார். அப்படியானால், பழைய பழைய தமிழ்க்காவியங்கள் தெரிவிக்கும் யந்திரப் புரவிக் கலையை தமிழன் ஆகாய விமானம் வரை ஏன் வளர்க்கக் கூடாது என்பதை தேசிய வாலிபர்கள் தமக்குத்தாமே ஒரு கேள்வியாகப் போட்டுக் கொள்ள வேண்டும்! தமிழன் 'மொழி—வகுப்பு வேற்றுமை' யென்னும் பாழுங்கிணற்றினின்று வெளியேறி

வந்தாலன்றோ இப்பரந்த உலகத்தின் ஞானச் சுடரொளி அவனது கண் முன்னே பரிதியின் கிரணங்களை போலும் அவனுக்குப் பல்லாயிரம் கலைக் கிரண அறிவுகளைப் புலர்த்திவிடும்?

50. ஏகசந்தக்கிராகித்துவம்

## Repeating what is said once.

தாரணைசக்தி—அவதானசக்தி—பெறுதல்.—நளசரிதத்தை வடமொழியில் செய்த ஸ்ரீஹர்ஷ மகாகவி இந்தக் கலையில் வல்லவராம். அந்த ஹர்ஷகவி தாம் செய்த காவியத்தைக் காசிமன்னனிடங்காட்டிப் புலவர் ஆதரவுப் பரிசும் அரங்கேற்றமும் பெற விரும்பி அங்கு சென்றார். புலவர்களின் போக்குத்தான் எக்காலத்திலும் தெரிந்த சங்கதியாயிற்றே! யார்வீட்டுக்கு வந்த விருந்தோ என்று எல்லோரும் சும்மாயிருந்தனர். ஆயினும், அரசருக்கு அந்தரங்கமுள்ள ஒரு வித்துவானிடம் தமது காவியத்தை யளித்து அரசர்பேடி கிடைக்குமாறு உதவி செய்ய வேண்டுமெனக் கோரினார் நமது கவி. முடிவு பாழுங்கிணற்றில் கல் போட்டது போல் தான்!

கவி கொண்டு சென்ற பணமுழுதும் செலவாகி மணிபாக்ஸ் காலியாகவே, மனம் நொந்த மகாகவி காசியிலுள்ள ஒரு தேவாலயத்தில் சென்று கடவுளுக்காவது தம் கருத்தை அந்தரங்கமாக தெரிவித்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்து கங்கைக்குச் சென்றார்; நீராடினார்; கோயிலுள் புகுந்தார்; கண்ணைமூடினார்; சிவதியானத்திலும் தோத்திரஞ் செய்வதிலும் ஈடுபட்டார். இத்தருணத்தில் ஏதோ இரண்டு மாதர்கள் குடமுங்கையுமாக அக்கோயிலுக்குள் நுழைந்து சிறு சம்பாஷணத்தில் தொடங்கி, முடிவில் பிரபலமான வசைமொழிகளைச் சரமாரியாகப் பொழிந்து கொண்டனர். அப்பால் மாதர் குஸ்திவலுத்து, முடிவு அரசருக்கு எட்டிவிட்டது. கோயிலில் நடந்த விஷயமாதலால் அரசர் சாக்ஷியை அழைத்து வருமாறு கட்டளையிட்டார். வேறு சாக்ஷிகளில்லாது போகவே, ஹர்ஷகவி அழைத்துச் செல்லப்பட்டார் என்று கூறவும் வேண்டுமோ? நமது ஹர்ஷகவிக்கு ஸம்ஸ்கிருதம்— பிராகிருதம் 'முதலியபாஷைகள் தெரியுமாயினும், காசியில் வழங்கிய நாட்டுமொழி தெரியாது. தெரியாதென்று

கைவிரித்தாரா? அல்லது காயிதம், மைக்கூடு, ஒரு டைபிஸ்டு—ஒரு துபாஷி—தேவையென்று கேட்டாரா?

"தட தட வென்று அந்த மாதரிருவரும் எந்த தேச பாஷை யில் எவ்வாறு கலகந்தொடங்கி முடித்தனரோ அவ்வாறே அவர்கள் வழங்கிய வார்த்தைகளை-அவற்றின் ஓசைக்குறி-முறையாகத் தோன்ற, ஒன்று கூட விடாது ஒப்பித்து விட்டார். மன்னனுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. கவியின் கௌரவம் கடவுளாலும் காக்கப் பெற்றது! இத்தகைய ஞாபகசக்தியே அவதானசக்தியாகும். அஷ்டாவதானம்—எட்டுப் பேர்களின் கேள்விகளை மனத்திற் கொண்டு அவர்க்கு ஜவாப் சொல்வது. சதாவதானம்—நூறு கேள்வி யாளருக்கு வரிசையாக விடையளிப்பது.

இது போன்ற ஆச்சரியகரமான சக்திகளுண்டாவது இக்கலை யறிவின் தேர்ச்சியினுலாம். புத்திஸாகரன், சகஸ்ர புத்தி என்ற பெயர் தாங்கிய முற்கால இந்தியர் சிலர் மந்திரி பதவியிலும் இருந்தனராம். இந்த சக்தி இயற்கையினுலும் செயற்கையினுலும் உண்டாவதாம். செயற்கையினுல் உண்டாகத்தக்க மருந்து முறைகளை அடுத்த பாகத் தில் வெளியிடுவோம். அவற்றைப் படித்து இந்திய மாதர்கள் இந்தியத் தாய்மார்—யாவரும் நலம் பெறுவாராக!

51. துவிசந்தக்கிராகித்துவம்.

## Repeating what is said twice.

இது இரு முறை கூறுவதை மீண்டும் ஒப்பிக்கும் தன்மை: இதனையே துவிசந்தக்கிராகித்துவம் என்பர் வடநூலார். உதாரண மாக: முற்கூறியவாறு ஒரு விஷயத்தை—ஒரு பாடலை—ஒரு முறை கூறியவுடன் கிரகித்துக் கொள்ளும் புத்தி சக்திக்கு "தாரணவதீ" என்று பெயர். இரண்டாம் முறையில் தெரிந்து கொள்வோரையும் அந்தசக்தி யுள்ளவர்களாகவே இக்கலை அங்கீகரிக்கின்றது!

பண்டைக்காலத் தமிழ்ச் சங்கத்தில் இத்திறமை வாய்ந்த புலவர் மிகுதியாக விளங்கியதால்தான் சங்கம் மேன்மையுடன் துலங்கிய தென்பர் சிலர். இக்காலத்திலும் இதனைத் தேடுவோர் உண்டானுல்

சரக்குள்ளவர் வெளிவருவர். வாங்குவோர் உண்டானால் வலிய வலிய வீதியில் வாராத பொருள்களுமுண்டோ?

இத்தகைய சக்தியை வளர்க்கும் முறைகள் சில மருந்துகளுக்கு அமைந்திருப்பது போல, சில தாய்மார்களுக்கு கர்ப்பத்திலேயே அமைந்திருப்பதன் காரணமென்ன? எங்கள் இன்பநூலில் "ஆறி லொருபங்கு" என்ற பகுதியில் பார்க்க.

கதைகளும் பிதிர்களுந் தமிழ் நாட்டின் கலைத் தோட்டத்தில் வளர்ந்ததாகக் கம்பருங் கூறுகின்றார். அவை சிறுவர் சிறுமியரின் ஞாபகசக்தியை வளர்ப்பனவாம். ஆனால், நமது சிலேட்டும் பென் சிலும் காகிதச்சுமையும் நம்நாட்டு சிறுவர் சிறுமியரின் ஞாபக சக்தியைக் குறைக்கின்றன என்பது உண்மையா?

முன்னது (அதாவது ஏகசந்தக் கிராகித்துவமென்பது) தாய் தந்தையரின் மனம் காதலுலகில் ஐக்கியம் பெற்று அவ்விருவரது மனமாகிய சந்திரகலை 16ம்பரிபூரணப் பிரகாசம் பெற்றிருக்குங்கால் கருத்தரித்துப் பிறந்தோரிடம் பிறவிச்செல்வமாக அமைவது. அல்லது காளிதாசனைப் போலும் கம்பனைப்போலும் கலைமகளை மூக்கரணங்களாலும் வழிபட்டு அவளது அருள் எழுதமுண்ட தொண்டரிடம் காணப்படுவது. பின்னது (அதாவது இந்த துவிசந் தக்கிராகித்துவம்) உணவினாலும் மருந்து—மூலிகை—களாலும் ஞானுப் பியாச முறைகளாலும் உண்டாவது. இந்த பேதங்களையெடுத்து விளக்கவேம்பாலும் இந்தக் கலையை இரண்டாகக் கொண்டனர் பெரியோர்!

52. பிதிர்க்கவி விடுக்கை.—

Solving a Puzzle.

இதை அக்ஷர முஷ்டி யென்பர் வட நூலார். காதலனுக்கும் காதலிக்கும் மாத்திரம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம்; அதைத் தபால் காரர் உடைத்துப் பார்த்தாலும் பொருள் விளங்கக் கூடாது! அதை எப்படி எழுதுவது? பிறர்படித்தால் ஏதோ அர்த்தமாவது போலவும் இருக்க வேண்டும்! அவ்விதப் பொருள் படுமாறு ஒரே ஒரு எழுத்தில் ஒரு சிறு சீட்டு எழுதுங்கள்! அவ்விதந் தான் ஜோத்பூர் ராணி எழுதினு

ளாம்! போனால் போகிறது அந்தக் கதையை இப்பொழுது உங்களுக்குச் சொல்லிவிடுகிறோம். (நம்பக்கத்தில் இப்பொழுது ஜோத்பூர் ராணியில்லையல்லவா?) அக்பர் சக்ரவர்த்தி கானகத்திற்கு வேட்டையாடச் சென்றிருந்தார். மூன்று நாட்கள் தான் சென்றன ஆயினும், அன்றில் பறவைபோல் அன்புடையானை அரை நிமிஷமும் பிரிந்தறியாத இராணியாருக்கு அது மூன்று யுகம் போல் தோன்றியதாம். அதனால் ஒரு சிவப்புக் கடிதத்தை யெடுத்தாள் ராணி. அதில் ஏதோ ஒரு சிறு எழுத்தை வரைந்தாள். அந்தரங்கத் தூதனொருவனை அழைத்தாள். "இக்கடிதத்தை தில்லிபாதுஷா இருக்கும் அரணியஞ்சென்று கொடு" என்று ஆணையுமிட்டாள்! கடிதம் கடுவேகத்தில் சக்கரவர்த்தியிடம் சென்றது. "இது என்ன சிவப்புக்காயிதத்தில் "ஸா" என்று ஒரு எழுத்து மாத்திரம் வரையப் பட்டிருக்கின்றதே! (இதன் பொருளென்ன) என்று பக்கத்திலிருந்த புத்திமான்களிட மெல்லாம் அந்தரங்கமாகக் கேட்டார் அரச சக்கிரவர்த்தி! பலபுத்திமான்களும் யோசித்துப் பார்த்தனர். முடிவில் பண்டிதராஜ ஜகந்நாதகவியிடமும் கேட்கப்பட்டது. அப்பொழுது இருவரும் அந்தரங்கமாகச் செய்த சம்பாஷணம்:

கவி: "அரசே, இது தங்களுக்கு மாத்திரம் தெரியக்கூடிய விஷயந்தானே! சிவந்த நிறத்திலுள்ள இக்கடித்தின் ரங்கை ஹிந்தியில் கூறுங்கள்."

சக்கிரவர்த்தி: 'லால்'.

ஜகந்நாத்: "அத்துடன் 'ஸா' என்ற எழுத்தையும் சேர்த்துப் படியுங்கள்."

சக்கிரவர்த்தி: "லாலஸா" என்று ஆகிறது!

ஜகந்நாத்: "ஆம், தங்களைப் பிரிந்துள்ள உயிர்க்காதலி தனது காதலனைக் காண மிக மிக "லாலஸா" வாக இருக்கிறாள்-அடக்க முடியாத ஆவலுடையவள்—என்பதில் என்ன ஆக்ஷேபம்? இதை நான் தெரிவித்தால் மட்டும் தாங்கள் எப்படி நம்பலாம்! நேரில் ஜோதிபூரில் டிகாணா செய்துள்ள ராணியாரிடஞ் செல்லுங்கள்! இதன் பொருள்கள் செய்கையில் விளங்கி விடுகின்றன!" சக்கிரவர்த்தியின்

சந்தோஷம் கவிக்குப் பரிசாகவும் இராணியாருக்கு ஒப்பற்ற முத்தமாகவும் மாறியதாம்! இவ்வித சாதுரிய பாஷையை ஒருகலை யென்று கூறாமல் முடியுமா?

53. காவியம் இயற்றுகை.–

Making epic-poems.

காவியஞ் செய்தல்: இந்தியாவில் இக்கலை ஒரு காலத்தில் மிக மகோன்னதமான நிலையிலிருந்தது. போஜ மன்னன் ஒரு முறை பறைசாற்றுவித்தான் "நம் நாட்டில் கவி செய்யத் தெரியாதான் வாழக் கூடாது" என்று! "நல்லது அரசே! நானும் கவி செய்வேன்; ஆனால், நான் கவிபாடும் தொழிலிலேயே இல்லாமையால் மன்னர் எதிர் பார்க்கும் அளவு எனது கவியில் சுவை தோன்றாது; ஆயினும், முயற்சியுடன் தொடங்குவேனாயின், நன்றாக கவிபாடவும் வல்லேன்! புவி அரசர் முடி வணங்கும் பேரரசரான தாங்கள் என்னை இங்கு வசிக்க அநுமதி தந்தால் கவிசெய்கிறேன்; நெய்கிறேன்; அநுமதி தராவிடில் செல்கிறேன்" என்று கவியாகவே விடை யளித்தானும்!

காவியத்துக்குக் கற்பனைச் சுவை ஜீவன். மாதருக்கு அலங்காரப் பொருள்கள் பல அமைந்திருக்க வேண்டுவதுபோல, கவிதாதேவிக்குப் பல அணிகள் அமைந்திருக்க வேண்டும். சொல்லடுக்கு மோனை எதுகை முதலியன பொருந்தியிருக்கவேண்டும். 117 வித அலங்காரங்கள் கவிதா தேவிக்கு இருப்பதாக மந்தார மந்தசம்பூ சொல்லுகின்றது. இனி, சுவையிலே ஒரு கவி எப்படியிருக்க வேண்டும்? தேங்காய் போல் உடைத்துப் பார்த்தாலும் தித்திக்கலாம்; அல்லது அது திராக்ஷை போல் நாவில் பட்டவுடன் மனம்வரை சென்று தித்திப்பதாகவும் இருக்கலாம். காவிய வகைகள் பல. அவற்றை அப்பால் விளக்குவோம்.

இனி மனத்தில் நினைத்த கருத்தைக் கவிகட்டிக் கூறுதல் ஒரு முறை. இதுவும் காவியகலையைச் சார்ந்ததே. போஜன், காளிதாசன் முதலிய மகாகவிகள் இக்கலையில் தேர்ந்தவர்களாம். போஜசரித்திரம், தனிப்பாடல் திரட்டு முதலியவற்றில் இதன் பெருமை காண்கிறோம். இந்த சக்தியை அடையும் முறைகள் அடுத்த பிரசுரத்தில்

விளக்கப்படும் இதனைச்சார்ந்த ஒரு உதாரணம் மட்டும் இங்கே கூறுவோம்.

வேட்டைக்குச் சென்று திரும்பிய போஜன் ஒரு நாள் மாலையில் கவிகளை நோக்கிக் கூறுகின்றான்:—

மகா கவிகளே! "குளுகுக், குளுகுக், குளு!" என இவ்வாறு ஒரு சத்தங்கேட்டேன். அதுஎன்ன விஷயம்?"

"அது! தாங்கள் வேட்டைக்குச்சென்றிருந்த இடத்தில் நன்றாகப் பழுத்திருந்த நாவல் கனிகளைக் குரங்குகள் உலுப்புங்கால் அம்மரக்கிளைகளினின்றும் தண்ணீரில் வீழ்ந்த கனிகளின்சத்தந் தானே, குளுகுக் குளுகுக், குளு!" என்றான் காளிதாசன்!

54. நிகண்டு உணர்ச்சி.

Diction expert.

நமக்கு உலகத்திலுள்ள பற்பல பாஷைகளின் சொற்களையும் பொருள்களையும், விளக்குவன நிகண்டு நூல்களாகும். நிகண்டு வேதத்தின் செவி; அதாவது ஞானகலா தேவியின் செவிப்புலனாகும். நாம் நமக்குத் தெரிய வேண்டிய விஷயங்களை யெல்லாம் செவி கொண்டு கேட்டுணர்வது போல, நிகண்டுக்களால் நமது சந்தேகப் பொருள்களை யெல்லாம் எளிதில் தெளியலாம். 'அகராதியும் ஆசானும்' ஒன்று என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. எட்டுவித ஆசான்கள்—குருமார்கள்—இருப்பதாக சிவப்பிரகாசர் கூறுவதுபோல, எட்டுவித அகராதியும் தமிழிலுண்டு. ஆனால், சரியான அகராதி தமிழில் எளிய விலையில் கிடைக்க வேண்டுமானால் வீரமா முனிவனைப் போல் பணத்திற்காக அன்றி—குணத்திற்காக—தமிழுக்காக—உழைக்கும் குருமார் சயலைத்துறவிகளாக வெளிவரவேண்டும்! பணத்தைக்கவரும் அகராதிகள் குணத்தைத் தரும் நூல்களாக மாறினால் தான் சரியான நிகண்டுக்கள் தமிழிலே தலையெடுத்ததாக நாம் பெருமை கொள்ளலாம். வடமொழியில் வாசஸ்பத்தியமுண்டு. தெலுங்கில் விஞ்ஞான சர்வஸ்வம்! மலையாளத்தில் சப்த தாராவளி ரெடி. மஹாராஷ்டிரத்தில் ஒரு பெரிய சப்தஸாகர்! ஹிந்தியிலா? வேலை வெகுஜரூர்! இங்கிலீஷில் என்

ஸைகளாப்டியா நாடுந்தோறும் உலவத் தொடங்கிச் சில தலைமுறைகள் சென்றன. தமிழிலோ?

55. யாப்புணர்ச்சி.—

Poetic knowledge.

யாப்பு:—இதை 'சந்த(ப்பா') இலக்கணம் என்றுங் கூறலாம். நடக்க வேண்டுமென்றால் நமக்குப் பாதம் இன்றியமையாதது போல, காவிய நூல்கள்—கவிதாதேவி—உல்லாசமாக இயங்க வேண்டுமென்றால் இந்த சந்தத்தின் வழியாகவே நாம் அவளது பொருட்காட்சியையும் அருட்காட்சியையும் பெறவேண்டும். வடமொழியில் "பிங்கலநாக சித்தர் செய்த சந்தநூல்" போல் தமிழிலும் காணலாம் யாப்பருங் கலக்காரிகையை!

56. அலங்கார உணர்ச்சி.

Knowledge in figure of speech.

காவிய விதி—அலங்காரம் அறிதல். இதைக் குறித்தும் முன்னர் ஒருவாறு விளக்கியிருக்கிறோம். 53—54—55 வது கலைகளும் இதுவும் காவியஞ்செய்தற்கு உரிய அறிவை வளர்ப்பன. இவை'தாம்' காவியஞ்செய்தற்கு உபயோகப்படுவது போல், பிறர் செய்யுங் காவியங்களின் குற்றங் குறைகளையறியவும் உதவியாகும். மதன லீலையார் "முதலில் நளசரித்திரப்பாடலைக் கேட்டு வேட்டைக் குதிரைபோலிருக்கின்ற" தெனக்கூறினராம்.

வேட்டைக்குதிரை போகப் போகச் சளைத்துப்போம் என்பது பழமொழி. அதன் குறிப்பறிந்த மன்னன் மீண்டும் தனது காவியத்தைச் சீர்திருத்தி இரண்டாவது முறை இராணிக்கு அனுப்பலானான். அதனைக்கண்டு "சபாஷ்! இப்பொழுது வேட்டைநாய் போலிருக்கின்றது" என்றாளாம். வேட்டைநாய்க்குப் போகப்போக வீரம் பெருகுமாம்!

57. சாலவித்தை.—(ஜாலம்—கண்கட்டிவித்தை.)

Jugglery.

இராம ராவண யுத்தம் மிகக் கடிதாக நடைபெறுகின்றது. அதற்கிடையில் இந்திரஜித்து இராவணனிடஞ் சென்று இராம

லக்ஷ்மணரிருவரும் இறந்தனரென்று நம்பச் செய்கின்றான். இராவணன் பயம் நீங்கி மகிழ்ச்சியில் மூழ்கின்றான். சில அரக்கியர் 'துர்ப் புத்தி கொண்ட' இராவணனது கட்டளைப்படி புஷ்பக விமானத்தின் மீதேறிச் சீதையிடஞ் சென்று இராமன் கொல்லப்பட்டாரென்று கூறி, சீதையையும் திரிஜடையென்பவளுடன் தேரில் ஏற்றிக்கொண்டு யுத்த பூமிக்கு அழைத்துச் செல்கின்றனர். இராவணன் இலங்கை நகர் எங்கும் கொடிதோரணங்களால் அலங்கரிக்கச் செய்து, 'இராம லக்ஷ்மணரிருவரும் தனது குமாரன் இந்திரஜித்தினால் கொல்லப் பட்டனரென்று பறைசாற்றுவித்துச் சந்தோஷக் கும்மாளம் அடிக்கின்றான்! சீதை அம்புப் படுக்கையில் உடல் நோவப்படுத்திருக் கும் ஒப்பற்ற வீரர்களேயும் அவர்களின் தாமரையிதழ்க் கண்கள் மூடியிருப்பதையும் கண்டு, வாடிய வதனமும் வடிந்த கண்ணீருமாய் வருந்துகின்றாள்! "ஆ! ராம! என்மனோஹர ராம! ஜோதிடமும் சாமுத்திரிக (சாஸ்திர)மும் பொய்யோ? தவம் நிறைந்த பெரியோர் வாக்கும் பொய்க்குமோ? நான் நித்திய சுமங்கலியெனப் பல்லோர் கூறினரே! எனக்குப் பிறவியிலே பன்னிரண்டு அங்க மங்கள லக்ஷணங் கள் அமைந்திருக்கின்றனவென மறையோர் மொழிந்தனரே! நானும் எனது ராமநாதனும் சக்ரவர்த்தி யோகத்துடன் பல்லாண்டு வாழ்வ மென அவ்வேதியர் வாழ்த்தினரே! அவையாவும் பொய்யாமோ!" என வும் புலம்புகின்றாள்! "அம்மா ஜாநகி! அழாதே! உயிர்போனவர்களின் முகம் நிறம்மாறி விகாரமாகவன்றோ தோன்றும்? நன்றாக கவனித்துப் பார்! இராம லக்ஷ்மணர்களின் முகம் வாடியிருக்கின்றதே யன்றி, நிறம் மாறவில்லையே! உன்மனத்திலுள்ள விசாரஎண்ணங்களை விட்டு விடு! இவர்கள் இறந்தார்களென்பது முழுப்பொய்!" என்று ஆறுதல் கூறி, தேற்றுகின்றாள் திரிஜடை! அதைக்கேட்கும் சீதைசிறிது மனந் தெளிந்து தனதிரு கரங்கூப்பியவண்ணம் "இராம லக்ஷ்மணர்கள் உயிருடன் இருக்கட்டும்" என்று வேண்டுகின்றாள்! தேர்மறைந்து விடுகின்றது! இது எத்தகைய கலை? அரக்கிய மாதர் மட்டுந்தான் அறிவரோ?.

சகல கலாவல்லபனும் அரசியல் கலையின் ஆசாரியபுருஷனுமா கிய சாணக்கியன், இந்திர ஜாலங்கற்ற தனது சீடனொருவனைப் பாம் பாட்டி வேஷங்கொண்டு எங்குஞ் சஞ்சரிக்கச் செய்து, முடிவில்

சந்தனதாசச் செட்டிவீட்டில் மறைந்திருந்த இராட்சத (மந்திரி யி)னது மனைவியின் கைமோதிரத்தை எவ்வாறு கைப்பற்றி, இராக்ஷசனைப்போல் மோதிர முத்திரையிட்டு நாட்டைக் கைப்பற்றினன் என்றகதை முத்திராராட்சத்தில் படிக்கத்தக்கது. இங்கு 'மிக்க புத்தி மதியும் ரூபவதியுமாகிய இராட்சசனது காதலி, இந்திர ஜாலச் சங்கதியைக் கவனியாததால்தான் இராட்சசன் அகப்படவும் ஏதுவாயிற்றும். ஆகவே, பெண்கள் எக்காரணத்தாலும் பிறர் மாயையில் அகப்படாதிருக்க, கொஞ்சம் மாயஜாலம் கற்றிருக்க வேண்டுமாம்!

58. ஆடை உடுத்தலில் சாமர்த்தியம்.

Dexterity in dressing.

ஆடை மறைத்துஉடுத்தலில் சாமர்த்தியம். திரௌபதிஇக்கலையில் மிக மிக வல்லவளாம். தனது பங்காளிகள் எத்தகைய தருணத்திலும் தன்னை எத்தகைய அவமானத்திற்கும் உட் படுத்தக் கூடுமென எதிர் பார்த்தே திரௌபதி தனது ஆடைகளை மிக மிகநுட்பமாகவும் ஜாக்ரதையாகவும் உள்ளடக்கத்தோடும் உடுத்தியிருந்தாளாம். அதனையுமுணர்ந்த துச்சாசனன் சபை நடுவே அடிமடியில் கை போடத் தொடங்கும் பொழுதுதான், அவள் தன்னை மறந்து "அண்ணா! எனது ஆருயிர்க்கண்ணா! மைவண்ணா! இந்நிலையிலும் அடியாளைக்கரவாது, கை விடுவையோ! நின்னையல்லாது புகலிடம் பிரிது முண்டோ?" எனக் கதறிப் பதறி வேண்டுகின்றாள்!

அப்பொழுதே அப்பெண்மணியின் வேண்டுகோளுக்குப் பரந்தாமன் மன மிரங்கி, தனது திவ்விய சங்கற்ப சக்தியினால் எவரும் நெய்யாத நூல் சேலையை—மெய்த்துகிலை—அந்தரத்திலிருந்து—அந்தரங்கமாக அருள் செய்கின்றான்! அப்பால் நடந்த பாரதக்கதை அனைவர்க்கும் தெரிந்ததாம்.

ஆடையுடுத்தலில் சாமர்த்தியம் ஒரு கலையாகக் கருதப்படுகின்றது. உடைகளைப் பெரிய உடைபோல் காட்டுதல், கிழிந்த சேலையை கிழியாத உடைபோல் அணிதல், மறைக்க வேண்டிய இடத்தை மறைத்துக் கட்டுதல், உடுத்திய ஆடை எக்காரணத்தாலும் நழுவாது— விலகாதிருக்கச் செய்தல் இவை பூவையருக்குத்தெரிய

வேண்டுமாம். துச்சசானன் செய்த அநீதிச்செயலினின்றும் துரௌபதியை வெகு நேரம் வரை பாதுகாத்தது அவள் இக்கலையில் சிறந்தவளாக விளங்கிய காரணந்தானும்!.

ஒரு பொருளைத்தனது உடம்பில் மறைத்து வைத்துக்கொள்ளும் திறமையும் இக்கலையில் சார்ந்ததுதானும். ஜோதி நிலயம் ஸ்ரீ காசி வெங்கடாசாரியஸ்வாமிகள் இன்று கூட இக்கலையறிவுக்கு ஒருதாரண புருஷராகவிளங்குகின்றார்!

59. சூதாட்டம்.—

Gambling.

சூதாட்டம்: இது உயிர்ப் பொருளைப் பணயம்வைத்து ஆடுதலென்றும், உயிரற்ற தந்தக்கருவிகளான பாசக்காய்களைக் கொண்டு ஆடுதலென்றும் இருவகையாகும். மல்லர் (குஸ்தி) பந்தயம், ஆடு கோழி மாடப்புறு முதலியவற்றின் பந்தயம்ஆகியன முதலாவது வகுப்பைச் சார்ந்தது. சதுரங்கம் சொக்கட்டான் முதலியனவும் பிறவும் இரண்டாவது வகுப்பில் சேர்க்கப்படும்.

நாரதர் இக்கலையைக்குறித்து எழுதியிருக்கின்றார், மணிமந்திர ஔஷதங்களின் துணைகொண்டு இக்கலையில் ஒருவரையொருவர் ஜெயிக்க வழியுண்டாம். ஸபிகன் என்ற ஒருவன் சூதாட்டக்காரர்களான இருகக்ஷிகளுக்கும் நடு நிலைமை வகிப்பவனாய் அவர்களுக்குப் பொருளுதவி செய்து லாபத்தில் 100க்கு 10 வீதம் பெறலாமாம். சரநூலறிந்தவன் தனக்கு எந்தபக்கம் சரம் நடைபெறுகின்றதோ அதற்கு மறுபக்கத்தில் எதிராளியை உட்காரவைத்து ஆடினால் எடுத்த ஆட்டத்தில் வெற்றிபெறுவானும்! இக்கலை இக்காலத்தினரான ஒவ்வொருவரது அபிப்ராயத்தில் ஒவ்வொருவிதமான மதிப்பைப் பெற்றலாமாயினும், பிரம்மாண்ட புராணத்தில் . வியாசர் இக்கலையின் உற்பத்தியைக் குறித்துப் பேசும் பொழுது தெய்விகமான கதையொன்றையும் இதில் சேர்த்துப் பிணைத்திருக்கின்றார்.

முன்னொரு காலத்தில் பரசிவனார் மிக மிக மனோரம்மியமான! சூது விளையாட்டை சிருஷ்டித்தார். அப்பால் கார்த்திகைமாதம்

வளர் பிறையைச் சார்ந்த பிரதமை திதியில் பார்வதியோடு அந்த விளையாட்டை அரங்கேற்றத் தொடங்கினர். (அல்லது வெள்ளோட்டம் பார்த்தார்.) எவ்விதமாயினும் தம் காதலிதானே, தோற்றால் வெளிக்கு வாராதல்லவா என்பது சிவனது அபிப்பிராயம் போலும் ஆனால், உண்மையாக நிகழ்ந்ததென்ன? சந்தேகத்திற் கேற்ப சிவன் தோல்வியுற்றார்! பார்வதி ஜெயித்தாள்! (பார்வதிக்கி ஜேய்!)

இக்காரணத்தினால் சிவபெருமான் ஒருவருஷம் முழுதும் மனோதுக்கத்தில் ஆழ்ந்திருந்தாராம்! அதுபோலவே ஆட்டத்தில் வெற்றி பெற்ற பார்வதி அந்த வருஷமுழுதும் ஆனந்தமாகவே வாழ்ந்தாளாம்!

ஆதலால், சௌநகாதி முனிவர்களே! பிரதிவருஷத்திலும் மேற் குறித்த நாளில் அதிகாலையிலேயாவரும் சூதாடவேண்டியது அவசியம். அந்த ஆட்டத்திலே எவர்களுக்கு ஜெயங்கிடைக்கின்றதோ அவர்கள் அந்த வருஷமுழுதும் எடுத்த காரியங்களிலெல்லாம் வெற்றிமேல் வெற்றி பெற்று இன்பமாக வாழ்வர். ஆனால், ஒரு பத்திய முண்டு: அதாவது“ அன்றைய தினம் தோல்வி வந்தால் அந்த வருஷமுழுதும் துன்ப வாழ்வு பெறுவர் என்பது மாத்திரமல்ல; புதிய வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போவது போல முன் இருந்த சொத்துக்களும் அழிந்து போகுமாம்.”

இந்த பட்டவர்த்தனமான பேச்சுக்கு மேல் எவருடைய வியாக்யானமும் தேவையில்லையல்லவா? அதே வியாசர் கூர்மபுராணத்தில் வைஷ்ணவர்களை நோக்கி ஒன்று கூறியும் செல்கின்றார்: “நீங்கள் துவாதசியன்று வெண்கலப்பாத்திரத்தைத் தொடாதீர்; ஹிம்சையை எவர்க்கும் செய்யாதீர்; பொய் சொல்லாதீர்; பகலுறக்கம் நிறுத்தி விடுக! தேகப்பயிற்சிக்கு அநுமதியில்லை; கோபம் கிட்டத்திலும் வரக் கூடாது; ஸ்திரீசம்போகம் செய்தல் மகாதோஷம்! சூது விளையாட்டை மனத்தாலும் நினைக்கக்கூடாது. சூது 24வித ஆட்டம் கொண்டது. அதிகமான சங்கதியை அப்பால் பார்க்கலாம்.

60. சொக்கட்டான்.—

Backgammon.

சொக்கட்டான் ஆடுதல்: மனதைக் கவரும் விளையாட்டாதலால் இதனை ஆகர்ஷக்கிரீடா (மனத்தைக் கவரும் ஆடல்) என்று ஸம்ஸ்கிருத அபிமானிகள் பேசுகின்றனர். இதில் 'அக்ஷஹிருதயம்' என்ற நுட்பமான வித்தை தெரிந்தோர் வெற்றி பெறலாம். சகுனிக்கு இது தெரியுமாம். இதன் உதவியால் துர்யோதனனுக்கு ஜெயமும் பாண்டவர்க்குத் தோல்வியும் வருமாறு செய்தது சகுனியின் வேலையாம். இதை வியாசர் சொல்லும் பொழுது நாம் நம்பாமலிருப்பதெப்படி? அக்ஷஹிருதயம் என்ற வித்தை தெரிந்தவர் ஒரு மரத்தில் இத்தனை காய் கனிகளிருக்கின்றன வென்றும் எளிதில் கூறுவராம்.

"காசி ராஜனுன தந்தவக்திரன், தனது குமாரியை பிரத்யும்நனுக்கு மணஞ்செய்விப்பதாய்த் தீர்மானித்தான். பிரத்யும்நன் யாதவத் தோழர்களுடன் சென்று சிறப்பாக மணஞ்செய்து கொண்டான். கலியாண கோலாஹலத்தில் அவரவர்க்குத் தெரிந்த கலைத் திறமையைக் குறித்த போட்டியென்று நடைபெற்றது தற்காலச் சீட்டாட்டத்தைப் போல! கண்ணனது திருக்குமாரன் ஸாம்பன் என்பவன் தனக்கு 'அக்ஷஹ்ருதயம்' தெரியுமென்றும், தந்தவக்திரன் தன்னேடு விளையாட வந்தும் ஒருகை பார்க்கலாமென்றான். பலராமனும் சும்மாயிருப்பதை விரும்பவில்லை; தந்தவக்திரனது நேசனுகிய ருக்மியோடு ஆடத் தொடங்கினர். ஆட்டத்தினிடையில் ருக்மிக்கும் பலராமனுக்கும் வாய்ச் சண்டை வலுத்துக் கைச் சண்டையாக மாறிவிட்டது! பலராமனுக்கென்ன தேகபலத்திற்குக் குறைவா? பக்கத்திலிருந்த ஒரு தூணைப் பறித்தெடுத்து ருக்மியை ஒரே போடாக போட்டுத் தீர்த்தார். இக்கலகத்தைத் தடுத்து தனது நேயனுக்கு உதவி செய்ய விரும்பி முன்வந்த தந்தவக்திரன் மீது பலராமன் சீறிவிழுந்து, அதே தூணினுல் அவனது, (தந்தவக்திரனது) தாடையில் நையப் புடைத்தார்! தந்தவக்திரனது பற்கள் யாவும் உடைந்து வீழ்ந்தன."

இந்தக் கலையின் உச்சஸ்தானத்தை யடைந்த நிபுணர்கள் நாடி முத்தல் முதலிய சில்லரைக் காரியங்களுடன் இத்தகைய கீர்த்திகரமான காரியங்களையும் செய்வதில் பின்வாங்குவதில்லை. இதைக்

குறித்துக் காமந்தக நீதியிலும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. ருக்வேதம் 7-வது அஷ்டகத்தில் இதன் வருணிப்பு வெகு ஜோர்!

61. பொம்மை பந்து முதலியன வைத்து ஆடுகை*.

Playing with balls and pippet.

குழந்தைகளுடன் விளையாடுங்கலை உலகத்திலேயே மிக மிகப் பெரிதான—சாதுரியக்கலை. ஒரு குழந்தை யானையைப் பிடித்துப் பானையில் அடைத்துத் தருமாறு கேட்கக்கூடும்! உடனே ஒரு சினிமா தந்திரம் செய்து காயித யானையைக் கண்ணாடிக்குடத்துள் அடைத்துக் காட்ட வேண்டியதுதான்! மரப்பாய்ச்சி, பந்து முதலிய விளையாட்டுக் கருவிகளை பாலர்க்கு எடுத்தளித்து அவர்களைக்களிப்பிக்க வேண்டியது மாதர்க்கு அத்தியாவசியமாம். சாலிவாகனன் குழந்தைப் பருவத்தில் என்ன செய்தான் தெரியுமா? களிமண் தேர்ப்பாகன், களிமண் யானை, களிமண் காலாட்படை, களிமண் வில்லாளிகள் இத்தனையும் செய்து விளையாடினான்! முடிவில் அக்களிமண் சேனைகளே அவன் விக்கிரமாதித்திய மன்னனோடு போர் தொடுக்கவும் உதவியாயிற்றாம்! முடிவில் சாலிவாகனனுக்கு ஜெயந்தான்.

இதுபோல, வைசியச் சிறுவர்களுக்கு விளையாட்டுக் காட்டும் வழியாது? வர்த்தக நட்டபங்களை விளக்கும் கருவிகளையே விளையாடக் கொடுக்கலாம். இந்திய ஆகாய விமானம் செய்து நாளை வர்த்தகஞ் செய்யக் கூடிய சிறுவர்களல்லவா இந்தியச் சிற்பிகளின் சிறுவர்கள்? இது போல அந்தணச் சிறுவர்க்கு விளையாட அளிக்கும் கருவியாது? பிற தொழிலாளச் சிறுவர்க்குத் திருவிளையாடல் புரிய உதவும் கருவிகள் யாவை? அவற்றை அடுத்து ஆராய்வோம்.

நமது பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்த வகையொன்று இறுமியர் நான்காவதாண்டில் சிறு தேர் உருட்டி விளையாடும் அழகை வருணிக்கின்றது!

சீதை பந்து விளையாடும் பொழுது அவளது பந்து ஜநகராஜனது வில்லினடியில் சென்று மறைந்ததாம். எனவே, வில்லை இடது கையினால் பிடித்து நகர்த்தி, சீதை எளிதாகத் தனது பந்தை

யெடுத்துக் கொண்டு, தோழிகளுடன் துள்ளிக்குதித்து விளையாடச் சென்றுளாளாம். இக்கதை யறிந்த ஜநக வேந்தன் இத்தகைய வீரச் சிறுமிக்கு வீரப் பந்தயம் வைத்தே சுயம்வர மணஞ் செய்யவேண்டு மென தீர்மானித்தாராம்! அதனால் தான் சீதையை மணக்க விரும்பிய ராமனும் அந்த வில்லையே முறித்துத் தனது பலத்தைக் காட்ட வேண்டியதாயிற்றாம்! விளையும் பயிர் முளையிலே தெரிவது போல் மிகமிக வாலிபப் பருவத்திலேயே குழந்தைகளின் அறிவாற்றலைப் பெற்றோர்களறிய இவ்விளையாட்டுக் கலை உதவி செய்யும் போலும்! தென் இந்தியாவில் வழங்கும் விளையாட்டுக்களை யெல்லாம் தொகுத்த குரு சுவாமி சர்மா தமது பிரேம கலாவதியத்தில் ஒரு ஜாப்தா கொடுக்கின்றார்.

காலஞ் சென்ற P. V. ஜகதீசய்யர் இத்துறையில் தமிழருக்குச் செய்த தொண்டுகளையும் நாம் மறக்க இயலாது.

62. யானை முதலியவற்றின் பயிற்சி.

Taming elephants etc.

கஜசாஸ்திரம்: பால காப்பியம் முதலிய நூல்கள் யானைகளின் லட்சணங்களையும் அவற்றின் பரிபாலன முறைகளையும் அவற்றின் ஆரோக்கிய வழிகளையும் மருந்து முதலியவற்றையும் விளக்குகின்றன.

யானைகளில் பத்ரம், மந்தரம், மிருகம் என்ற மூன்று விதங்களையும் அவற்றின் சேர்க்கையாலுண்டாகும் பலவித பேதங்களையும் வால்மீகிராமாயணம் பாலகாண்டத்தில், காணலாம். அவற்றில் பத்ரம் என்ற ஜாதியைச் சார்ந்த கம்பீர வேதி என்னும் யானையின் இயற்கையை மட்டும் இங்கு உதாரணமாகக் கூறலாம்.

சரீரத்தை சிதைத்தாலும் இரத்தம் பெருக்கெடுத்தாலும் சதை கொய்யப்படினும் எந்த யானையானது தன்னையறியாது மதங்கொண்டு விளங்குமோ அது கம்பீர வேதியாகும். பிற விபரங்கள் பால காப்பியத்தில் காண்க. வாரண மஞ்சரி என்ற தமிழ்நூல் கஜ பரீட்சைக் கலைக்கு ஒரு உதாரணமாம். யானைகளின் அரிய பெரிய திறனைக் குறித்து அடுத்த பாகத்தில் பல கதைகளுடன் விளக்குவோம்.

63. படைக்கலப் பயிற்சி.

போரில் படைக்கலத்தை நன்கு உபயோகிக்குந் தொழில். ''படைக்கலத் தொழிலிலமைந்த வீரரை'' புற நானூறு வருணிக்கின்றது. நிலம், கடல், ஆகாயம் மூன்றிலும் செல்லும் வாகன மொன்றை ருக்வேதம் வருணியாமலில்லை. என், அவ்வளவு தூரம் போவதேன்? போஜராஜனும் வான்மீகியுந் தெரிவித்த புஷ்பக விமானத்தின் நூறடுக்கு ஜாப்தாவை நமது சிற்பிகள் கவனிக்கலாமல்லவா?

முற்காலப் பெண்களும் இக்கலையில் தேர்ந்திருந்ததாக "வாத்ஸ்யாயனர்" 2000 வருஷங்களுக்கு முன்னரே எழுதி வைத்துச் சென்றார்.

வெற்றி பெறும் வித்தை மிக மிகப்பெரிது. பாரதி சொல்வது போல "எதிலும் வெற்றி" பெறுதல் ஒப்பற்ற கலை ஞானம். அபராஜிதை (பிறரால் ஜெயிக்க இயலாதபடி மிக மிக வல்லமையளிக்கும் சக்தி) முதலிய மந்திரங்களால் ஜெயம் பெறுவோர் சிலர். சொல் வித்தைத் திறமையினால் நாடெங்கும் புகழோங்கச்சிறந்து வாழும் நரர் சிலர். வில்வித்தை பயின்று துரோணாசாரியர்போன்றும் வீர வெற்றி வாழ்வில் நிலைப்போர் சிலர். இந்தக் கடைசிக்கூட்டத்தாரின் நலத்தின் பொருட்டு விசுவாமித்திரர் வில்வித்தை என்னும் நூல் செய்துள்ளார். 4 பாகங் கொண்ட அந்த நூலில் வெற்றி பெறுதற்கானமந்திரமும், தந்திரமும், மருந்து முறையும் மிக மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆசானது உதவிபெற்று அர்ஜுனனைப் போல் வாழ இந்த நூல் நல்லுதவி புரியும். நம் நாட்டிலுள்ள எளிய ஜனங்களைப் பாதுகாக்க—மாதர்கற்பை விளங்கச்செய்ய—இவ்வில்வித்தைப் பயிற்சி இந்தியர்க்கு இன்றியமையாததாம்.

ஏழுவகை ஆயுதத்தையும் வசிஷ்டர் விவரியாது விடுக்கவில்லை. வில், சக்கரம், ஈட்டி, அறிவாள், கத்தி, கதை என்பவற்றைக் கையில் கொண்டு செய்யும் யுத்தம் ஆறுவகைகளில் சார்ந்ததாம். வீரனும் வீரனும் தோளோடு தோள் பொருந்திச்செய்யும் மல்யுத்தந்தான் ஏழாவதும் சிறந்ததுமாம்.

ஐந்தரைக்கோல் நீளமுள்ள வில் தெய்விகம் பொருந்திய வில்லாம். அதை ஆதியில் சிவன் தரித்தாராம் அப்பால் அது இராம பிரானிடமே திரேதாயுகத்தில் வந்து சேர்ந்ததாம். துவாபரயுகத்தில் துரோணாசாரியரிடம் இருந்ததும் அசல் வில்லுத்தானும். அதை பாண்டவர்கள் என்ன செய்தார்களோ தெரியாதாயினும் பாண்டவர், சொர்க்கா ரோகணஞ் செய்ய விரும்பி இமயமலைச்சாரலில் சென்ற பொழுது பீமன் தனது கதாயுதத்தை மானசசரோவரத்தின் பக்கத்தில் எறிந்து சென்றான் எனப் பாரதம் கூறுகின்றது. நம் போன்ற சாதாரண மனிதர்க்கு நாலு கோல் நீள முள்ளவில்லே சரியாகு மென்று வில்வித்தை நூல் விளம்புகின்றது. விசுவகர்மா விஷ்ணுவுக்குச் சொந்தமாயிருக்குமாறு அந்தரங்கத்துடன் செய்து கொடுத்த சார்ங்கம் (கொம்பினால் அமைந்தது) என்ற வில் 3½கோல் நீளங்கொண்டதாம்.

முற்காலத்தில் கொம்பினால் அமையும் வில் யானைப்படையாளருக்கும் குதிரைப்படைவீரருக்கும் உரியதாக இருந்ததாம். இனி, இந்த வில்லில் தொடுக்கப்படுகின்ற அம்புகளில் ஆண் அம்பு, பெண் அம்பு, அலிஅம்பு என்று மூன்றுவகையாம். பின்பாகம் பருமனாகவுள்ளது ஆண்அம்பு; முன்பாகம் பருத்திருப்பின் பெண் அம்பு; இருபாகமும் சமமாயிருப்பின் அலியம்பு. வெகுதூரத்திலுள்ள குறியை அடிக்க விரும்பினால் பெண்ணம்பைப் பிரயோகிக்க வேண்டும். வெகு உறுதியான லக்ஷ்யத்தில் சென்று தாக்க வேண்டி— தசரதர் வேட்டையாடச் சென்ற பொழுது- "யானை,' யென்று தவறாக நினைத்து ஒரு சத்த வேதி அம்பினால் அந்த முனிகுமாரனை தாக்கினாரே, அது என்ன குறி? சத்த வேதியா?

64. தேகப்பயிற்சி.—

Physical exercise.

உடற் பயிற்சி: இதுதான் 64-வது கலை. உடற் பயிற்சி உடம்பை வலுப்படுத்தி நமது இஷ்டம் போல் இயங்கச் செய்யும். இதனால், ஆரோக்யமும், புத்தித் தெளிவும், ஆயுளும் வளருமாம். இதை ஆண் பெண் இருவரும் செய்ய வேண்டுமாம். அநுமான்

இக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்ததால் தான் உடம்பை மலைபோல் வளர்க்கவும் பூனை போல் சிறுக்கவும் செய்யும் சக்தி பெற்றிருந்தாரென்று நேற்றுக் கூட டாக்டர் A லக்ஷ்மீபதி நினைவூட்டுகின்றார். அநுமானைப் போல் அத்தனை பெரிய உடற்பயிற்சி பெறாவிடினும், நாம் தினந்தோறும் சாதாரணமாக—நித்திய வாழ்வில் ஆரோக்யம் பெறுதற்குரிய 'சூரிய நமஸ்காரம்' போன்ற முறையை ஆண்களும் பெண்களும் கூச்சமின்றி அநுஷ்டிக்கலாமே என்றார் ஔண்ட் ஸமஸ்தானத் தலைவர். அவர் தமது ஸமஸ்தானமெங்கும் அவ்வாறு செய்விக்கின்றார்; தாமும் தம்பதி சமேதராகச் செய்து வருகின்றார். அவரும் அவரது தேசமும் ஆரோக்யச் செல்வத்துடன் வாழ்க!

உணவு உட்கொண்டவுடன் உட்கார்வது, படுப்பது, குறு நடையுலாவுவது, விரைந்து செல்வது என்ற நான்கு காரியங்களையும் செய்பவர்க்கு என்ன ஆகும் தெரியுமா? உட்கார்ந்தே பொழுது போக்குபவனுக்குப் பெருந் தொந்தி! உண்டவுடன் படுப்போர்க்கு வயிறு பருமன் (ஏற்றச்சால் வடிவத்தில்) குறு நடையுலாவுவோர்க்கு நல்ல காற்று உட்செல்வதால் ஆயுள் வளர்ச்சி! உண்டவுடன் விரைந்து செல்வோரைக்கண்டுஎமனும் எடுக்கின்றானும் ஓட்டம்! இது நாம் சொல்லும் வாக்கன்று: வைதியர் வழங்கிய வட மொழிப்பேச்சு தேரையரும் இந்தஅபிப்பிராயத்தில் மறுப்புரைஎழுதவில்லை! வைத்தியரும் வைத்தியரும் ஒன்று தான் போலும்! ஆகவே, இந்த தேகப் பயிற்சிக் கலையினால் இந்திய மாதரும் இந்திய வாலிபரும் வருங் காலத்தில் சுகசெல்வ சுகிருதசந்தானங்களுடன் மேன் மேலும் வாழ்வார்களாக என்று 64 கலாதேவியரும் அருள் செய்கின்றனராம்!

குறிப்பு :—இந்தக் குறிப்புக்கள் கிறிஸ்து பிறக்கு முன் இந்திய மாதர்கள் எத்தகைய கல்வியறிவில்தேர்ந்து அறிவில் நிறைந்திருந்தார்களென்பதை ஒருவாறு அளவிட்டுக்காட்டுகின்றன. தற்கால மாதர்களும் இத்தகைய கல்வியறிவில் பூர்த்தி பெற்றார்களாயின், நாட்டிலும் வீட்டிலும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். வீடுதோறும் அன்னபூர்ணி—கலைமகள்—திருமகள் விலாசம் பெற்று விளங்கும்.

Gnanapandithar Press, Krishnampet, Triplicane,